வெளியீடு 26-6-99

Issued 26-6-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, நவம்பர் 26, 1998 - தொகுதி 61 - எண் 2

**Thursday the 26th November, 1998—Volume 61 - No. 2**

பேரவைச் செயலகம், சென்னை - *600 009*

**embly Secretariat, Fort St. George,**

**Chennai - 600 009**

V211, 31'N98
N98, 61-2
219405

**[Price Rs. 3.00**

1086/95

28-11-1998

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிடாத வினாக்கள் (ஏழாவது மற்றும் எட்டாவது பட்டியல்) 129-193

2. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

(அ) சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் 193-209

(ஆ) இந்துக் கோவில்களில் வடமொழியில் மட்டும் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருப்பது 209-233

3. **தகவல் கோரல்—**

மதத் தீவிரவாதிகளால் நவம்பர் 29 மற்றும் டிசம்பர் 6 தேதிகளில் ஏற்படக்கூடிய அசம்பாவித நிகழ்ச்சிகளைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை 233-240

4. **அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொதுக் கணக்குக் குழு 240-241

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 241

(இ) மனுக்கள் குழு 241


53-274—1

பக்கங்கள்

**5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, *1998* — 241-242

(ஆ) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, *1998* — 242-243

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, *1998* — 322-323

**6. அறிவிப்புகள்—**

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், *1998-99*, மொழிதல் (ஆசெ.) — 243

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, *1998* (ஆஇ.) — 322

**7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—**

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 243-244, 263, 269-270, 270-271, 277, 292, 293, 299-300, 304-305, 310-317

திரு. ச. அழகிரி — 249-260

*மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி — 252-253, 254

மாண்புமிகு திரு. கா.நா. நேரு — 257, 273, 276

திரு. ஜி. பழனிசாமி — 260-264

*திரு. மீ.அ. வைதியலிங்கம் — 265-268

*திரு. இரா. தாமரைக்கனி — 268-274

219405



பக்கங்கள்

**7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

திரு. பி.என். வல்லரசு — 277-279

திரு. டி. மணி — 280, 281-284

திரு. சி. வேலாயுதன் — 246, 284-287

திரு. எஸ். திருநாவுக்கரசு — 289-297

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் — 293-294

*திரு. அ.வ. அப்துல் நாசர் — 246-247, 297-299, 301

திரு. சோ. பாலகிருஷ்ணன் — 303-309

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 323-325

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**கார்த்திகை 11, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029**
**1998, நவம்பர் 26, வியாழக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்."*

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துக்களைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்@

### ஏழாவது பட்டியல்

1—

**எடப்பாடி வட்டத்தில் சர்க்கரை ஆலை**

**வினா 16909—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99இல் தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலை தொடங்க, எத்தனை ஆலைகளுக்கு மத்திய அரசிடம் மாநில அரசு அனுமதி கோரி உள்ளது?

(ஆ) ஆம் எனில், சேலம் மாவட்டத்தில், எடப்பாடி வட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை தொடங்க அரசு அனுமதி வழங்குமா?

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1998-99ஆம் ஆண்டில் புதிய சர்க்கரை ஆலை அமைக்க கீழ்க்கண்ட 2 இடங்களுக்கு மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டது:

(1) அம்பாசமுத்திரம் வட்டம் - திருநெல்வேலி மாவட்டம்.

(2) மொடக்குறிச்சி பிர்க்கா - ஈரோடு வட்டம், ஈரோடு மாவட்டம்.

மேற்படி இரண்டு இடங்களுக்கும் மத்திய அரசு கீழ்க்குறிப்பிட்டுள்ள தனியார் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கியுள்ளது:

(1) பிரோட்சம் இண்டஸ்ட்ரீஸ் - அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

(2) திலான் இண்டர்நேஷனல் (பி) லிட். - மொடக்குறிச்சி பிர்க்கா, ஈரோடு வட்டம், ஈரோடு மாவட்டம்.

(ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை அமைத்திட ஜியோ எனர்ஜி சிஸ்டம் என்ற தனியார் நிறுவனத்துக்கு மைய அரசு உரிமம் வழங்கியுள்ளது. இந்நிலையில் எடப்பாடி வட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறு இல்லை.

**2—**

**தருமபுரி மாவட்டத்தில் கோபுரகலசம்**

**வினா 18025—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் 1997-98இல் எத்தனை திருக்கோயில்களில் கோபுரகலசம் களவாடப்பட்டுள்ளது என்பது பற்றி காவல் துறைக்குப் புகார் எதுவும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) புகார் எதுவும் வரவில்லை.

(ஆ) எழவில்லை.

**3—**

**தொழில் வளாகம் அமைத்தல்**

**வினா 19765—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், எடப்பாடியில் அரசினர் தொழில் வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடியில் தொழில் வளாகம் அமைக்கும் உத்தேசம் ஏதும் சிப்காட் வசம் இல்லை. டாசிட் நிறுவனம் தொழில் வளாகங்கள் அமைவதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொண்டு வருகின்றது. தமிழகத்தில் கீழ்க்காணும் இடங்களில் தொழில் வளாகங்கள் அமைப்பதற்கான அடிப்படை வசதிப் பணிகள் நடைபெற்று வருகின்றன:

1. ஈரோடு மாவட்டம், பெருந்துறை
2. திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான்
3. திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை
4. தருமபுரி மாவட்டம், பர்கூர்

மேலும் காஞ்சிபுரம் மாவட்டம், ஓரகடம், வரதராஜபுரம், எருமையூர், மாமண்டூர் ஆகிய இடங்களிலும், கடலூர் மாவட்டம், சிலம்பிமங்கலத்திலும் தொழில் வளாகங்கள் அமைப்பதற்கான நிலஎடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

4—

## நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

**வினா 15523—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியத்தைச் சார்ந்த கொளக்குடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 269, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20-7-1998இல் திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஒன்றியத்தைச் சார்ந்த கொளக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை 1998-99ஆம் கல்வி ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

5—

## மகளிர் கலைக் கல்லூரி அமைத்தல்

**வினா 17706—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

6—

## தனியார் பள்ளிகளுக்கு நிதி உதவி

**வினா 19224—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) அரசு நிதியுதவியின்றி தரம் உயர்த்தப்பட்ட தனியார் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கு நிதியுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1990-91 கல்வியாண்டு வரை தொடங்கப்பட்ட/தரம் உயர்த்தப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கு மட்டும் நிதி உதவி வழங்குவது அரசின் கொள்கை முடிவாகும். 1991-92 கல்வியாண்டு முதல் தொடங்கப்பட்ட/தரம் உயர்த்தப்பட்ட தனியார் பள்ளிகள் "எப்போதும் நிதியுதவியின்றி" என்ற நிபந்தனையின்படி அனுமதிக்கப்படுவதால் அவற்றிற்கு நிதியுதவி வழங்க இயலாது.

7—

## அதிக அழுத்தமுள்ள மின்மாற்றிகள் அமைத்தல்

**வினா 16289—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரி ஊராட்சியிலுள்ள பொட்டனேரி, செவலானூர், ஏர்வாடி, வெளவால்தோப்பூர், குன்னமுடையானூர் ஆகிய இடங்களில் குறைந்த அழுத்தம் உள்ள மின்மாற்றியை அதிக மின் அழுத்தமுள்ள மின்மாற்றியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரி ஊராட்சியிலுள்ள செவலானூர், ஏர்வாடி பகுதியில் புதிய மின்மாற்றி நிறுவப்பட்டு அப்பகுதியில் நிலவிய குறைந்த மின் அழுத்தம் சரி செய்யப்பட்டுவிட்டது.

பொட்டனேரி, வெளவால்தோப்பூர் மற்றும் குன்னமுடையானூர் பகுதியில் மின் அழுத்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**8—**

## சூரிய ஒளி மின் விளக்குகள்

**வினா 19474—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் மின் வசதி இல்லாமல் வாழும் மக்களுக்குத் தேவையான சூரிய ஒளி / மின் விளக்கை அமைத்துக் கொள்ள மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டத்தில் மின்வசதி இல்லாத இடங்களில் வாழும் மக்களுக்குத் தேவையான சூரிய ஒளி/மின்விளக்கு அமைத்துக்கொள்ள மானியம் வழங்குவது குறித்து பிரத்யேகமான திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

**9—**

## அதிக அழுத்தமுள்ள மின்மாற்றிகள் அமைத்தல்

**வினா 19493—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சி, பெரியேரிப்பட்டி, பூதலூர், வகுத்தானூர், பெரியேரிப்பட்டி ஆதி திராவிடர் காலனி, வேடப்பட்டி ஆகிய இடங்களில் அதிக அழுத்தமுள்ள மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அமைக்கப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சி, பெரியேரிப்பட்டி, பூதலூர், வகுத்தானூர், பெரியேரிப்பட்டி ஆதி திராவிடர் காலனி, வேடப்பட்டி ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே ஐந்து மின்மாற்றிகள் உள்ளன. இம்மின் மாற்றிகளுக்கு தும்பிப்பாடி 110 கே.வி.ஏ./22 கே.வி. துணை மின் நிலையத்தில் இருந்து கொங்குப்பட்டி 22 கே.வி. உயர் மின் அழுத்த மின் பாதை மூலம் மின்சாரம் அளிக்கப்பட்டு வருகிறது. இம்மின் மாற்றிகளின் திறன் ஏற்கெனவே உள்ள மின் இணைப்புகளின் பளுவிற்குப் போதுமானதாகவே உள்ளது. மேலும், இப்போது மின் அழுத்தமும் ஒரே சீராகவே உள்ளது. இப்பகுதிகளில் தற்பொழுது மின் இணைப்பு வேண்டி விண்ணப்பங்கள் நிலுவையில் இல்லாததால் புதிய மின் மாற்றி அமைக்க வேண்டிய தேவை இல்லை.

**10—**

## சிற்றுண்டி விடுதியை இயக்குதல்

**வினா 19501—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் அனல் மின் நிலையத்தில் இயங்கி வந்த, பிரச்சினையில் உள்ள கேன்டீனை தொடர்ந்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மேட்டூர் அனல் மின் நிலையத்திலுள்ள சிற்றுண்டி விடுதி கடந்த 15-7-1998 அன்றிலிருந்து மேட்டூர் அனல் மின் நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

[1998 நவம்பர் 26

11—

## மின் நிலையம் அமைத்தல்

**வினா 19760—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரத்துக்கு மிக அருகாமையில் உள்ள எடப்பாடியில் ஏற்கெனவே 110 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இது தவிர அருகாமையில் ஜலகண்டாபுரத்திலும் 110 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்று அனுமதிக்கப்பட்டு ரூ. 695.3 இலட்சம் மதிப்பீட்டில் நடப்பு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1997-2002) நிறுவப்படவுள்ளது. இவை தவிர மற்றுமொரு துணை மின் நிலையம் கொங்கணாபுரத்தில் புதிதாக அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

12—

## தொகுப்பாய்வு செய்ய உலக வங்கி உதவி

**வினா 18682—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர்க் குழாய்களில் நீர்க்கசிவு பற்றிய தொகுப்பாய்வு செய்ய உலக வங்கி வழங்கியுள்ள கருவிகள் யாவை?

(ஆ) தமிழ்நாடு முழுவதும் இந்த ஆய்வு செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) உலக வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வழங்கல் மற்றும் துப்புரவுத் திட்டத்தின்கீழ் தமிழக



1998 நவம்பர் 26]

அரசின் மானியமாக கீழ்க்காணும் நீர்க்கசிவு கண்டறியும் கருவிகள் வாங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | குழாய்களில் நீர்க்கசிவு ஒலியினை கண்டறியும் கருவி (Stethophone) | .. 3 |
| 2. | தரையின்கீழ் உள்ள கசிவு ஒலியினை அறிய உதவும் தரை ஒலிப்பெருக்கி (Ground Microphone) | .. 3 |
| 3. | உலோக குழாய் மற்றும் மின் கம்பிகள் செல்லும் பாதையைக் கண்டறியும் கருவி (Pipe and Cable Locator) | .. 3 |
| 4. | வால்வு தொட்டி மூடிகளை கண்டறியும் கருவி (Valve Box Cover Locator) | .. 3 |
| 5. | அதிவேக ஒலி நீரளவு கருவி (Ultrasonic Flow Meter) | .. 3 |
| 6. | நீரளவு ஆய்வுக் கருவிகள் (Flow Analyser System) | .. 3 |
| 7. | அதிவேக ஒலி கனமானி (Ultrasonic Thickness Gauge) | .. 3 |
| 8. | நீர்க்கசிவு ஒலி ஆய்வுக் கருவி (Leak noise Correlator) | .. 1 |

(ஆ) மேற்காணும் கருவிகள் கோவை, சேலம் மற்றும் மதுரை மாநகராட்சிகளில் அமைந்துள்ள பகிர்மான குழாய்களில் ஏற்படும் நீர்க்கசிவுகளைக் கண்டறிந்து சரி செய்வதற்காக வாங்கப்பட்டன. தற்போது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள குடிநீர்த் திட்டப் பணிகளில், இக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பில் உள்ள மற்ற குடிநீர்த் திட்டங்களில் இப்பணியினை மேற்கொள்ள வேண்டுமெனில், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் இப்பணியை மேற்கொள்ள ஒப்புகை செய்து, தகுந்த தீர்மானம் ஒன்று நிறைவேற்றி, இப்பணிக்காக ஆகும் செலவுத் தொகையையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தினால், இந்த ஆய்வை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொள்ளும்.

[1998 நவம்பர் 26

13—

## பெண் மருத்துவர் நியமனம்

**வினா 18719—திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் நகராட்சி மகப்பேறு மருத்துவமனையில் பெண் மருத்துவர் இல்லாதது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பெண் மருத்துவரை பணியில் அமர்த்த அரசு ஆவன செய்யுமா?

வி —

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தாராபுரம் நகராட்சியில் காலியாக இருந்த பெண் மருத்துவ அலுவலர் பணியிடம் பூர்த்தி செய்யப்பட்டு அங்கு ஒரு பெண் மருத்துவ அலுவலர் பணிபுரிந்து வருகிறார்.

14—

## மானிய விலையில் மருந்துகள் வழங்குதல்

**வினா 18536—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் பெருவாரியாகப் பயிர் செய்யப்படும் மானாவாரி பருத்தியைத் தாக்கும் புழுக்களை ஒழிக்க மானிய விலையில் மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தற்போது பயிர்களில் காணப்படும் பூச்சிகளை ஒழிக்க ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறை அனுசரிக்கப்பட்டு வருகிறது. மானிய விலையில் பூச்சி மருந்துகள் வழங்கும் திட்டம் எதுவும் தற்போது நடைமுறையில் இல்லை. மேலும், தீவிர பருத்தி சாகுபடித் திட்டத்தில் மத்திய அரசு மானியத்துடன் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கம் மற்றும் பயிற்சியில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த



1998 நவம்பர் 26]

உழவர் வயல்வெளிப் பள்ளிகள் மூலம் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உபயோகத்தினை ஊக்குவிக்கும் பொருட்டும் செயல் விளக்கங்கள் அமைத்துத் தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்படுகின்றன.

மேலும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, (ஐ.பி.எம்.) பூச்சி மருந்துகளின் உபயோக அளவைக் குறைப்பதுதான் நோக்கம். ஏனெனில் இது சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் பயிர் உற்பத்திக்கு அத்தியாவசியமானது. எனவே மானியத்தில் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளை வழங்குவது ஊக்குவிக்கப்படுவதில்லை.

15—

## பழுதடைந்த கால்வாயைச் சீர்செய்தல்

**வினா 4092—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

அரக்கோணம் வட்டம், கீழ்ப்பாக்கம் ஏரியின் பழுதடைந்துள்ள கால்வாயைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

அரக்கோணம் வட்டம், கீழ்ப்பாக்கம் ஏரியின் பழுதடைந்துள்ள கால்வாய் ரூ. 88,586/- செலவில் சீர்செய்யப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

16—

## ஏரி அமைத்தல்

**வினா 16863—திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், பணையூர் கிராமத்தில் ஏரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், பணையூர் கிராமத்தில் ஏரி அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

[1998 நவம்பர் 26

17—

## சாத்தப்பாடி ஏரியில் தூர் எடுத்தல்

**வினா 16894—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சாத்தப்பாடி ஏரியை அகலப்படுத்தி, தூர் வாரும் பணி அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புவனகிரி தொகுதி, சாத்தப்பாடி ஏரியில் தூர் வாரும் பணி சிறப்பு தூர் வாரும் நிதி ஒதுக்கீட்டின்கீழ் ரூ. 4.40 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

18—

## புதிய பேருந்துகள் இயக்குதல்

**வினா 14734—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி பணிமனைப் பேருந்துகள் மிகவும் பழுதடைந்து கண்ணாடிகள், மேற்கூரைகள் சரியாக இல்லாமல் சுமார் 7 பேருந்துகள் மோசமான நிலையில் ஓடிக்கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதிய பேருந்துகள் விடப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி பணிமனையில் மிக மோசமான நிலையிலிருந்த 7 பேருந்துகளும் மாற்றப்பட்டு வேறு பேருந்துகள் விடப்பட்டுள்ளன.



1998 நவம்பர் 26]

19—

## எடப்பாடி—ஈரோடு பேருந்து இயக்குதல்

**வினா 14969—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து ஈரோடு செல்ல சுண்ணாம்புக்குட்டை, சங்ககிரி வழியாக ஒரு பேருந்து விட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ள வழித்தடத்தில் ஒரு அரசுப் பேருந்து மற்றும் ஒரு தனியார் பேருந்தின் மூலம் தினசரி 14 நடைகள் பேருந்து வசதியுள்ளது. தவிரவும், எடப்பாடி - சங்ககிரி (வழி) சுண்ணாம்புக்குட்டை தடத்தில் தினசரி 108 நடைகளும், சங்ககிரி - ஈரோடு தடத்தில் ஒவ்வொரு 3 நிமிடத்திற்கு ஒரு பேருந்து மூலமும், பகுதி வாரியாக, போதுமான பேருந்து வசதியுள்ளது. எடப்பாடியிலிருந்து ஈரோடு செல்ல மேலும் பேருந்து விடும் அவசியம் எழவில்லை.

20—

## புதிய தடங்களில் பேருந்துகள் இயக்குதல்

**வினா 15210—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பாப்பம்பாடி தாரமங்கலம் - எடப்பாடி வழியில் செக்குமேடு, மூங்கிகுத்தூர், கோணங்கியூர், எட்டிக்குட்டைமேடு வழியாக எடப்பாடி செல்ல, புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோரிக்கையில் கேட்கப்பட்ட எட்டிக்குட்டை மேட்டிலிருந்து செக்குமேடு வரை கோணங்கியூர், மூங்கிகுத்தூர் தடத்தில் 3.5 கி.மீ. தூரம் பேருந்து வசதி பெறப்படவில்லை. அதில்

[1998 நவம்பர் 26

கோணங்கியூரிலிருந்து செக்குமேடு வரை 1.5 கி.மீ. தூர பாதை, பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. எடப்பாடியிலிருந்து தாரமங்கலம் (வழி) எட்டிக்குட்டைமேடு, செக்குமேடு, பாப்பம்பாடியில் நேர்வழியில் இரண்டு நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 20 நடைகள் பேருந்து வசதியுள்ளது. மேற்கண்ட நேர்வழிப் பேருந்தை கோணங்கியூர் சென்று திரும்புமாறு இயக்கினால் கூடுதல் பயணக் கட்டணம், கூடுதல் பயண நேரம் ஏற்பட்டு நேர்வழிப் பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படும். மேலும் பேருந்து இயக்கம் உள்ள சாலையிலிருந்து 1.0 கி.மீ. தூரத்திற்குள் உள்ள ஊர்கள் பேருந்து வசதி பெற்றதாகவேக் கருதப்படும். அதன்படி மூங்கிகுத்தூர், செக்குமேட்டிலிருந்து 0.4 கி.மீ. தூரத்திலேயே அமைந்துள்ளதால் கோரிக்கை தடத்தில் புதிய பேருந்து இயக்கும் கருத்துரு ஏதுமில்லை.

**21—**

### நின்றுபோன நகரப் பேருந்துகளை இயக்குதல்

**வினா 20395—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலிருந்து மகுடஞ்சாவடி வழியாக அழகப்பம்பாளையம் புதூருக்கு வந்து கொண்டிருந்த நகரப் பேருந்து வருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மகுடஞ்சாவடிக்கும், அழகப்பம்பாளையம் புதூருக்கும் இடையில் அகல இரயில் பாதை ஒன்றுள்ளது. இது அதிக போக்குவரத்து மிக்கது. அதனால் அடிக்கடி இரயில் கேட் மூடப்படுகிறது. இதன் காரணமாக அவ்வழியாகச் செல்லும் பேருந்துகள் நிர்ணயிக்கப்பட்ட நேரங்களைக் கடைப்பிடிக்க முடிவதில்லை. மேலும் அழகப்பம்பாளையம்புதூருக்கு இயக்கப்படும் நடைகளில் பயணிகளின் போக்குவரத்தும் குறைவாக உள்ளது. தவிரவும் எடப்பாடி-சித்தர்கோவில் (வழி) அழகப்பம்பாளையம்புதூர், இளம்பிள்ளை தடத்தில் இயக்கப்படும் தடம் எண் 5 மற்றும் 5 'பி'-யின் மூலம் அழகப்பம்பாளையம்புதூருக்கு



1998 நவம்பர் 26]

தினசரி 18 நடைகள் பேருந்து வசதியுள்ளது. அவ்வழியாக சேலம் வர அடிக்கடி பேருந்து வசதியுள்ளது. மேற்கண்ட காரணங்களால் தற்போது சேலத்திலிருந்து மகுடஞ்சாவடி வழியாக அழகப்பம்பாளையம்புதூருக்குப் பேருந்து இயக்கப்படுவதில்லை.

**22—**

### நகரப் பேருந்து தடத்தை நீட்டித்தல்

**வினா 20404—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து சித்தர்கோவில் வழியாக இளம்பிள்ளை வரை வரும் நகரப் பேருந்துகளை சி.காட்டூர், மாட்டையாம்பட்டி வரை நீட்டிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ள தடத்தில தடம் எண் 107 மூலம் தினசரி 4 நடைகள் பேருந்து வசதியுள்ளது. தவிர சேலத்திலிருந்து வேம்படிதாளம், இளம்பிள்ளை வழியாக சி.காட்டூருக்கு 2 நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 28 நடைகளும், சேலத்திலிருந்து சித்தர்கோவில், கே.கே.நகர், சி.காட்டூர், மாட்டையாம்பட்டி வழியாக சின்னப்பம்பட்டிக்கு ஒரு நகரப் பேருந்து மூலம் தினசரி 10 நடைகளும் பேருந்து வசதியுள்ளது. இப்பேருந்து வசதிகளே, சி.காட்டூர், மாட்டையாம்பட்டி தடத்திற்குப் போதுமானதாக உள்ளதால் பல்வேறு ஊர்களுக்கு சேலத்திலிருந்து சித்தர்கோவில், இளம்பிள்ளை வழியாக இயக்கப்படும் பேருந்துகளை, சி.காட்டூர், மாட்டையாம்பட்டி வரை நீட்டித்து இயக்கும் அவசியம் எழவில்லை.

**23—**

### சேலம் மாவட்டத்தில் கிராமங்களுக்கு நகரப் பேருந்து வசதி

**வினா 20409—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு நகரப் பேருந்து ஓ.12ஏ சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூரிலிருந்து தாரமங்கலம், சேடப்பட்டி, ராமரெட்டிப்பட்டி,

[1998 நவம்பர் 26

அரியாம்பட்டி வழியாக ஜலகண்டாபுரம் சென்று திரும்பி வரும்போது, அரியாம்பட்டி, ராமரெட்டிப்பட்டி, சேடப்பட்டி வழியாகச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தடம் எண் ஓ.12ஏ பேருந்து பல்முனை வழித்தடப் பேருந்தாகக் கீழ்க்கண்டவாறு இயக்கப்பட்டு வருகிறது:

ஓமலூர்-சேலம் - 10 நடைகள்

ஓமலூர் - ஜலகண்டாபுரம் (வழி) சேடப்பட்டி - 4 நடைகள்

ஓமலூர் - ஜலகண்டாபுரம் (வழி) இலவம்பட்டி - 4 நடைகள்

எனவே தற்போது கோரிக்கையில் கேட்டுள்ள தடத்தில் இயக்கப்படும் 4 நடைகளே அப்பகுதி மக்களின் தேவையினை நிறைவு செய்வதாக உள்ளது.

**24—**

**மலைவாழ் மக்களுக்குப் பாதை வசதி**

**வினா 15844—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கொண்டகரஅள்ளி ஊராட்சி வத்தல்மலை, பெரியூர், பால்சிலம்பு பகுதிகளில் உள்ள மலைவாழ் மக்கள் பாதை வசதி இல்லாது இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கொண்டகரஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த வத்தல்மலை, பெரியூர், பால்சிலம்பு மற்றும் பல கிராமங்களை இணைக்க சுமார் 20 கி.மீ. தூரம் புதியதாகச் சாலை அமைக்க வேண்டியுள்ளது.



1998 நவம்பர் 26]

இதற்கு ரூ. 200 இலட்சம் தேவைப்படும். இப்பகுதி முழுவதும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாகும் (Reserved Forest Area). மேலும் பாதுகாக்கப்படும் வனப் பகுதியில் சாலை அமைக்க, மரங்களை வெட்ட மத்திய அரசின் அனுமதி விரைவில் கிடைக்காது என்பதாலும், நிதிப் பற்றாக்குறையினாலும் இப்பணியைச் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**25—**

**சாலை பழுதுபார்க்கும் பணி**

**வினா 19806—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் வெள்ள நிவாரண நடவடிக்கையில் சாலை பழுதுபார்க்கும் பணிக்கு எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டு சாலை பழுதுபார்ப்பதற்கு வெள்ள நிவாரண நடவடிக்கையில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. சாலைப் பராமரிப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதில் வெள்ள நிவாரண பழுதுபார்த்தலுக்குச் செலவிடும்படி முடிவெடுக்கப்பட்டதால் 1997-98 ஆம் ஆண்டு ரூ. 55 கோடி வெள்ள நிவாரணப் பழுதுபார்த்தலுக்குச் செலவு செய்யப்பட்டது.

**26—**

**இரவுக் காவலர்கள் நியமனம்**

**வினா 10826—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் தேவஸ்தானத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட 15 இரவுக் காவலர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்களா?

[1998 நவம்பர் 26

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

பணி நீக்கம் செய்யப்பட்ட 15 இரவுக் காவலர்களை மீண்டும் பணி நியமனம் செய்வது சாத்தியமில்லை.

**27—**

**சிற்பங்களைப் பராமரிப்பு செய்தல்**

**வினா 11507—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் உள்ள பழம்பெரும் சிற்பங்கள் பராமரிப்பு இல்லாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைப் பராமரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) 1958ஆம் ஆண்டு, பழங்கால நினைவுச் சின்னங்கள், தொல்லியல் சிறப்பிடங்கள், எஞ்சிய சின்னங்கள் சட்டத்தின்கீழ், இந்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையால் மாமல்லபுரத்தில் 32 நினைவுச் சின்னங்கள் மற்றும் அதிலுள்ள சிற்பங்கள் தகுந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) நிலை எழவில்லை.

**28—**

**வேளாண்மை விற்பனைப் பொருட்கள்**

**வினா 20445—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 26]

இந்த நிதியாண்டில் சேலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேளாண்மை விற்பனைப் பொருட்கள் எடப்பாடி தொகுதியில் எவ்வளவு விற்பனை செய்யப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இந்த நிதியாண்டில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்க, கொங்கணாபுரம் கிளை மூலம் வேளாண்மை விளைபொருட்கள் எடப்பாடி தொகுதியில் கீழ்க்கண்ட விவரப்படி விற்பனை செய்யப்பட்டுள்ளன:

| | 1-4-1998 முதல் 31-8-1998 வரை (அளவு மெடன்) | மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|
| 1. பருத்தி | 10201.211 | 24,03,56,439.62 |
| 2. எள் | 400.282 | 84,46,183.23 |

நுகர்வோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் எடப்பாடி தொகுதியில் எதுவும் இல்லை.

**29—**

**வணிக வளாகம் கட்டுதல்**

**வினா 20509—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் மேச்சேரி ஒன்றியத்தில் புதியதாகத் தொடங்கப்பட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்தில் புதியதாகக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் எதுவும் தொடங்கப்படவில்லை.

(ஆ) மேச்சேரி ஒன்றியத்தில் புதியதாகக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் தொடங்கப்படாத நிலையில், வணிக வளாகம் கட்டும் வினா எழவில்லை.

30—

### தொழிற் கல்விப் பள்ளி தொடங்குதல்

**வினா 16950—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் ஒரு தொழிற் கல்விப் பள்ளி (ஐ.டி.ஐ.) தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

31—

### தொழிற் பயிற்சிப் பள்ளி அமைத்தல்

**வினா 17696—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பகுதியில் ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

32—

### தொழிலாளர் வாரிசுகளுக்கு இட ஒதுக்கீடு

**வினா 19382அ—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் வாரிசுகளுக்கென சட்டப் படிப்புகளில் எத்தனை இடங்கள் ஒதுக்கப்படுகின்றன?

(ஆ) ஆம் எனில், இட ஒதுக்கீட்டை அதிகரிக்கும் சொற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தொழிலாளர் வாரிசுகளுக்கென சட்டப் படிப்புகளில் இடங்கள் ஏதும் ஒதுக்கப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

33—

### விடுதிக்குக் கட்டடம் கட்டுதல்

**வினா 20490—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, கருக்காடிப்பட்டி மேல்நிலைப் பள்ளியுடன் இணைந்த பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

[1998 நவம்பர் 26

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, கருக்காடிப்பட்டி மேல்நிலைப் பள்ளியுடன் இணைந்த பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்கு கட்டடம் கட்டித் தருவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**34—**

**மறவர் சீரமைப்புத் துறை**

**வினா 20522—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முக்குலத்தோர் சமுதாயத்தைச் சார்ந்த மறவர் சீரமைபபுத் துறை தனியாக உருவாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்களுக்கென்று பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரகம் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கென்று மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரகம் என இரண்டு இயக்குநர்களின்கீழ் இரண்டு துறைகள் தனித்தனியாகத் தற்போது செயல்பட்டு வருகின்றன. மறவர் இனத்தைச் சார்ந்தவர்கள் தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சீர்மரபினர்களாகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட இனத்தவர்களாகவும் உள்ளனர். இவ்வினத்தைச் சார்ந்தவர்களின் நலன் மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு துறைகளின் மூலம் செம்மையாகக் கவனிக்கப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பிலுள்ள ஒவ்வொரு இனத்தவருக்கும் தனித்தனியே சீரமைப்புத் துறை அமைப்பது சாத்தியமில்லை. மேற்காண் சூழலில் முக்குலத்தோர்



1998 நவம்பர் 26]

சமுதாயத்தைச் சார்ந்த மறவர் சீரமைப்புத் துறை என்று தனியாக உருவாக்குவது சாத்தியமன்று.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**35—**

**எடப்பாடி தொகுதியில் மாணவர்கள் விடுதி**

**வினா 20588—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி, கோனேரிப்பட்டி ஆகிய ஊர்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக மாணவர்கள் தங்கும் விடுதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி, கோனேரிப்பட்டி ஆகிய ஊர்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக மாணவர்கள் தங்கும் விடுதி அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**36—**

**மாணவர் விடுதி தொடங்குதல்**

**வினா 20590—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, சித்தூரிலும், செட்டிமாங்குறிச்சியிலும் பிற்படுத்தப்பட்டோர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் தங்கும் விடுதி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, சித்தூரிலும், செட்டிமாங்குறிச்சியிலும் பிற்படுத்தப்பட்டோர் அல்லது மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள்

தங்கும் விடுதி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**37—**

**கிருஷ்ணகிரி வட்டத்தில் மாணவர் விடுதி**

**வினா 20605—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி வட்டம், வேப்பனபல்லியில் பிற்படுத்தப்பட்ட நலத் துறையின் சார்பில் ஒரு மாணவர் விடுதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கிருஷ்ணகிரி வட்டம், வேப்பனபல்லியில் ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்று இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**38—**

**பஞ்சு ஆலை ஏற்படுத்துதல்**

**வினா 18590—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் பஞ்சு ஆலை (Ginning Factory) ஒன்று ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் பஞ்சு ஆலை (Ginning Factory) அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.



**39—**

**தீவனப் பயிர் விதைகள்**

**வினா 11727—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் உலக வங்கித் திட்டத்தின்கீழ் இயங்கிவரும் கால்நடைப் பெருக்கம் அபிவிருத்தி, தீவன பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் மேலூரில் விநியோகம் செய்த தீவனப் பயிர் விதைகளின் வகைகள் எத்தனை?

(ஆ) எந்தெந்தப் பகுதிகளில் எப்போது விநியோகம் செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மதுரை மாவட்டத்தில் உலக வங்கித் திட்டத்தின் கீழ் இயங்கிவரும் கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், மதுரை கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்ட துணை இயக்குநரால் 1996-97 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட தீவன விதைகள் வாங்கப்பட்டு, தீவன அபிவிருத்திப் பணிக்கு, துறை அலுவலர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு தீவன அபிவிருத்திப் பணி செயல்படுத்தப்பட்டது:

| புல் விதைகள் (1) | வழங்கப்பட்ட பகுதிகளின் விவரம் (2) | வழங்கப்பட்ட கால அளவு (3) |
|---|---|---|
| 1. ஸ்டைலோ ஹெமட்டா தீவன விதைகள் | 1. சாம்பிராண்பட்டி | 14-8-1996 முதல் 26-2-1997 முடிய |
| 2. ஸ்டைலோ ஸ்காப்ரா தீவன விதைகள் | 2. கிடாரிப்பட்டி | |
| 3. குதிரை மசால் தீவன விதைகள் | 3. மாங்குளம் | |
| | 4. கொட்டாம்பட்டி | |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 4. கொழுக்கட்டை புல் விதைகள் | 5. எம். வெள்ளாளம்பட்டி | |
| 5. கொர்கம் எம்.பி. சாரி தீவன விதைகள் | 6. பூதமங்கலம் | |
| | 7. சொக்கம்பட்டி | |
| 6. ஆப்ரிக்கன் உயரம் மக்காச்சோளம் தீவன விதைகள் | 8. கொதிக்கம்பட்டி | |
| | 9. பொட்டப்பட்டி | |
| 7. கோ 1, கோ 2 புல் கன்றுகள் | | |

**40—**

### கால்நடை மருத்துவமனைகள் தொடங்குதல்

**வினா 13999—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், புளியம்பட்டி, கொங்கணாபுரம் ஒன்றியம், மேட்டுப்பாளையம், மகுடஞ்சாவடி ஒன்றியம், இடங்கணசாலை ஆகிய இடங்களில் ஏற்படுத்த உத்தேசித்துள்ள கால்நடை மருத்துவமனைகளை இந்த நிதியாண்டில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதுமில்லை.



**41—**

### கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம்

**வினா 14800—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, குருக்குப்பட்டி ஊராட்சியில் தனியார் கட்டடத்தில் கால்நடை மருந்தகம் இயங்கி வருவதால் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): குருக்குப்பட்டி ஊராட்சியில் கால்நடை மருந்தகம் எதுவும் இயங்கவில்லை. தாரமங்கலத்தில் உள்ள கால்நடை மருந்தகம் அரசுக் கட்டடதில் இயங்கி வருகின்றது.

**42—**

### கால்நடை மருத்துவமனைக் கட்டடத்தைச் செப்பனிடுதல்

**வினா 15295—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், இருப்பாளியிலுள்ள கால்நடை மருத்துவமனையின் கட்டடம் பழுதடைந்துள்ளதால் வாடகைக் கட்டடத்தில் அம்மருத்துவமனை இயங்கி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட்டுத் தர அல்லது புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை —

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இருப்பாளி கால்நடை மருந்தகம் 1968-69 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளது. தற்போது கட்டடம் பழுதடைந்துள்ளதால் கட்டடத்தைப் பழுதுபார்க்க பரவலாக்கப்பட்ட திட்டத்திலோ அல்லது பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்தோ நிதி ஒதுக்கீடு பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

**43—**

**கால்நடை சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 17937—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பானாபுரம் ஊராட்சியிலுள்ள செங்காட்டூரில் கால்நடை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) செங்காட்டூரில் தற்போது கால்நடைக் கிளை நிலையம் தொடங்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**44—**

**கால்நடை சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 17939—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், கூணாண்டியூரில் புதியதாகக் கால்நடை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், கூணாண்டியூரில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், மேலும் அங்கு புதியதாகக் கால்நடை பார்வைக் கிளை நிலையம் தொடங்கப்பட்டுள்ளதாலும், அங்கு புதியதாகக் கால்நடை சுகாதார நிலையம் தொடங்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**45—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா 17941—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு காலநடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பெரியேரிப்பட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகமே இல்லாத நிலையில் மேற்படி கிராமத்தில் முதன்முதலாகக் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

46—

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா 19962—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், நீலகிரி ஊராட்சி, மானோஜிபட்டி கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

47—

### கால்நடை மருந்தகம் தொடங்குதல்

**வினா 19968—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், அக்கரைப்பட்டியில் பகுதிநேரக் கால்நடை மருந்தகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் இல்லை.



48—

### புளியம்பட்டியில் கால்நடை மருந்தகம்

**வினா 19969—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், புளியம்பட்டியில் பகுதிநேரக் கால்நடை மருந்தகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 23-1-1998 முதல் பார்வைக் கிளை நிலையம் தொடங்கப்பட்டு, புளியம்பட்டியில் செயல்பட்டு வருகிறது.

49—

### பகுதிநேரக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்துதல்

**வினா 19972—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், வேம்பனேரியில் ஒரு பகுதிநேரக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சாத்தியக்கூறுகள் இல்லை.

[1998 நவம்பர் 26

**50—**

**பகுதிநேரக் கால்நடை மருத்துவமனை**

**வினா 19974—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் அ.புதூரில் ஒரு பகுதிநேரக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சாத்தியக்கூறுகள் இல்லை.

**1—**

## எட்டாவது பட்டியல்

**கள்ளச்சாராயத்தைத் தடுத்தல்**

**வினா 14468—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளச்சாராயம் வேலூர் மாவட்டத்தில் பெருகிவிட்டதை அரசு அறியுமா?

(ஆ) அதைத் தடுக்க, சாராய வியாபாரிகள் மீது தடுப்புச் சட்டத்தின்கீழ் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) சாராயக் குற்றங்களை ஜாமீனில் விடக்கூடாத குற்றமாகக் கருதி தண்டனையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) காவல் துறையினரின் தீவிர நடவடிக்கையால் கள்ளச்சாராயக் குற்றங்கள் வேலூர் மாவட்டத்தில் பெருமளவில்



1998 நவம்பர் 26]

கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் கள்ளச்சாராயத்தை ஒழிக்க தீவிர நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேலூர் மாவட்டத்தில் சென்ற ஆண்டிலும் (1997-ல்), நடப்பு ஆண்டில் 31-3-1998 வரையிலும் மதுவிலக்குக் குற்றங்களுக்காகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள், கைப்பற்றப்பட்ட மதுப் பொருட்கள், கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன:

| | | 1997-ஆம் ஆண்டு | 1998 (31-3-1998 வரையில்) |
|---|---|---|---|
| 1) | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 14,784 | 3,791 |
| 2) | கைது செய்யப்பட்ட நபர்கள் | 14,867 | 3,801 |
| 3) | கைப்பற்றப்பட்ட கள்ளச்சாராயம் | 1,87,986 லிட்டர் | 35,744 லிட்டர் |
| 4) | கைப்பற்றப்பட்ட சாராய ஊறல் | 3,75,142 லிட்டர் | 1,12,071 லிட்டர் |
| 5) | கைப்பற்றப்பட்ட கள் | 392 லிட்டர் | 340 லிட்டர் |
| 6) | கைப்பற்றப்பட்ட எரி சாராயம் | 3,904 லிட்டர் | 20,738 லிட்டர் |
| 7) | கைப்பற்றப்பட்ட சாராய பாக்கெட்டுகள் | 1,11,262 | 1,701 |
| 8) | கைப்பற்றப்பட்ட போலி மது பாட்டில்கள் | 15,205 | 1,060 |
| 9) | தடுப்புக்காவலில் ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்ட தீவிரக் குற்றவாளிகள் | 125 | 33 |

(ஆ) கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் கள்ளச்சாராயம் விற்றல் ஆகிய மதுவிலக்குக் குற்றங்களில் தொடர்ந்து ஈடுபடும் தீவிர மதுவிலக்குக் குற்றவாளிகள்மீது தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 14/1982) காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கின்றனர்.

[1998 நவம்பர் 26

சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் தமிழகம் முழுவதும், வேலூர் மாவட்டத்தில் மட்டிலும் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் ஓராண்டிற்குச் சிறையில் அடைக்கப்பட்டோரின் விவரம் கீழ்வருமாறு:

| | 1997 | 1998 |
|---|---|---|
| தமிழகம் முழுவதும் தடுப்புக் காவல் பிரிவில் ஓராண்டு சிறை வைக்கப்பட்டோர் | 669 | 76 (28-2-1998 வரை) |
| வேலூர் மாவட்டத்தில் மட்டும் தடுப்புக் காவலில் ஓராண்டு சிறை வைக்கப்பட்டோர் | 125 | 33 (31-3-1998 வரை) |

இவ்விவரங்களிலிருந்து கள்ளச்சாராயக் குற்றவாளிகள்மீது அரசு எடுத்துவரும் நடவடிக்கை தெளிவாகும்.

(இ) தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ், குற்றங்களின் தன்மைக்கு ஏற்ப மதுவிலக்கு வழக்குகள் பதிவு செய்யப்படவும், தண்டனை அளிக்கவும் தற்போது வழிவகை உள்ளது. விஷச்சாராய வழக்குகள் மற்றும் அரசு உரிமம் பெற்ற, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான விற்பனைக் கடைகளின் உரிமம் மீதான வழக்குகளில் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4(1-A) மற்றும் 24ஆம் பிரிவுகளின்கீழ் ஜாமீனில் விடக்கூடாத வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

மதுவிலக்குக் குற்றங்களுக்கான தண்டனையை அதிகரிப்பது குறித்து செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**2—**

### தீயணைப்பு நிலையம் அமைத்தல்

**வினா 19680—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஓர் ஊரில் புதியதாகத் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வரும்போது, அந்த இடத்தின் மக்கள்தொகை,



1998 நவம்பர் 26]

அருகிலுள்ள தீயணைப்பு நிலையங்கள், கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட தீ மீட்பு அழைப்புகளின் எண்ணிக்கை மற்றும் தீ விபத்து போன்றவற்றைக் கருத்திற்கொண்டு, பரிசீலித்து, அவசியம் இருப்பின் அங்கு தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். மகுடஞ்சாவடியைச் சுற்றிலும் நான்கு பக்கங்களில், வடக்கே 14 கிலோ மீட்டரில் எடப்பாடி, தெற்கே 25 கிலோ மீட்டரில் திருச்செங்கோடு, கிழக்கே 25 கிலோ மீட்டரில் சேலம், மற்றும் மேற்கே 15 கிலோ மீட்டரில் சங்ககிரி ஆகிய நான்கு இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 25 கிலோ மீட்டர் தொலைவில் நான்கு தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வருவதால், மகுடஞ்சாவடியில் நிகழும் தீ விபத்துக்களை இந்த நான்கு நிலைய ஊர்திகளைக் கொண்டு சமாளிக்க இயலும். எனவே, இங்கே புதியதாக ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

**3—**

### சங்ககிரி வட்டத்தை தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவித்தல்

**வினா 19764—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், சங்ககிரி வட்டத்தை தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், சங்ககிரி வட்டத்தை தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**4—**

### வகுப்பறைகளைச் செப்பனிடுதல்

**வினா 12738—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரிலுள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வகுப்பறை, கட்டடம் மற்றும் கான்கிரீட் தளம் கீழே கொட்டிவிட்டதால் அந்த வகுப்பறைகள் நடத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997-98 ஆம் நிதியாண்டில் எடப்பாடி நகரிலுள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வகுப்பறைகளைச் செப்பனிட சிறப்பு மராமத்துத் தலைப்பின்கீழ் ரூ. 2,00,000 அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணி தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களால் மேற்கொள்ளப்படும்.

5—

## வாக்குச் சாவடி சீரமைப்பு

**வினா 12761—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சப்பள்ளி பஞ்சாயத்தில், வடுகப்பட்டியில் உள்ள வாக்குச்சாவடிக்கு பூவானூர், பாலிக்காடு, கரட்டூர் காட்டுவளவு, பூசாரிக்காடு, வடக்கத்தியான்காடு ஆகிய ஊர்களிலிருந்து சுமார் 7 கி.மீ. தூரம் உள்ள வடுகப்பட்டி ஊரிலுள்ள பள்ளியில் வாக்களிக்க வேண்டும் என்று அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இதனைச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(இ) அழகப்பம்பாளையம் ஊரில் வாக்களிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ): சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, வடுகப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில்



அமைந்துள்ள வாக்குச்சாவடியில் பிளாக் எண் 3-க்கான அதாவது அழகப்பம்பாளையம், பூசாரிக்காடு மற்றும் வடக்கத்தியான்காடு, பிளாக் எண் 4-ல் அடங்கிய கரட்டூர், காட்டுக்கொட்டாய், பூவானூர் மற்றும் பாலிக்காடு கிராமங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் 2 கி.மீ. தூரத்திற்குமேல் சென்று வாக்களிப்பதாக சேலம் மாவட்ட ஆட்சியர் தனது கருத்துருவில் தெரிவித்துள்ளார். பிளாக் எண் 3 அழகப்பம்பாளையத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியும், பிளாக் எண் 4 கரட்டூரில் ஓர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியுமாக அமைந்துள்ளதால் தற்பொழுது வடுகப்பட்டியில் அமைந்துள்ள இரண்டு வாக்குச்சாவடிகளில் உள்ள வாக்காளர்களைப் பிரித்து மூன்று வாக்குச்சாவடிகளாக, அதாவது வடுகப்பட்டி, அழகப்பம்பாளையம் மற்றும் கரட்டூரில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் அமைத்தால், வடுகப்பட்டி ஊராட்சிப் பகுதியைச் சார்ந்த வாக்காளர்கள் 2 கி.மீ.க்கு மேல் சென்று வாக்களிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது எனத் தெரிவித்துள்ளார். மேலும், வாக்குச்சாவடிகள் திருத்தி அமைக்கும் பணியை மேற்கொள்ளும்போது இந்நேர்வினைக் கருத்தில் கொண்டு ஆவன செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள வாக்குச்சாவடிகள் சமீபத்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலுக்காக அமைக்கப்பட்டன. தற்போதுள்ள வாக்குச்சாவடிப் பட்டியலில் மாற்றம் எதுவும் செய்ய வேண்டியிருப்பின் அதற்கான கருத்துருவினை அடுத்த பொதுத் தேர்தல்/இடைத் தேர்தல் சமயத்தில் அல்லது வாக்காளர் பட்டியல்கள் தீவிரமாகத் திருத்தப்படும்போதுதான் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்ப இயலும். எனவே, சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அழகப்பம்பாளையம் ஊரில் வாக்களிக்க நடவடிக்கை எடுப்பதற்கும், வாக்காளர்கள் நெடுந்தூரம் சென்று வாக்களிப்பதைத் தவிர்த்து, 2 கி.மீ. தூரத்திற்குள் வாக்களிக்க வாக்குச்சாவடி அமைப்பது குறித்தும், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவினை வாக்காளர் பட்டியல் தீவிரமாகத் திருத்தப்படும்போது அல்லது அடுத்த தேர்தலின்போது பெற்று, இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

6—

## பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா 13668—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், பெருவலூர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24-7-1998-ல் பெருவலூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு இரு வகுப்பறை கொண்ட கட்டடம் கட்டுவதற்கும், மற்றும் அரசாணை நிலை எண் 355, பள்ளிக் கல்வித் துறை நாள் 22-9-1998-ல் அறிவியல் ஆய்வகம் கட்டுவதற்கும் முறையே ரூ. 4.40 இலட்சம் மற்றும் ரூ. 9.20 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கி அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**7—**

**பெண்கள் கல்லூரி அமைத்தல்**

**வினா 16936—திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், கெஜல் நாயக்கம்பட்டியில் பெண்கள் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**8—**

**அரியலூர் கலைக் கல்லூரியில் புதிய வகுப்புகள்**

**வினா 17841—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) வரும் நிதியாண்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள அரியலூர் கலைக் கல்லூரியில் பி.காம்., பி.எஸ்சி., (ஜியாலஜி) மற்றும் மினரல் எக்ஸ்புளோரேஷன் அல்லது பி.எஸ்சி., (என்விரான்மெண்டல் சயின்ஸ்) மற்றும் பி.எஸ்.சி., (கம்ப்யூட்டர் சயின்ஸ்) மற்றும் எம்.ஏ., எம்.எஸ்சி., எம்.காம்., வகுப்புகள் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் பி.எஸ்சி., (கம்ப்யூட்டர் சயின்ஸ்) பி.காம்., மற்றும் எம்.எஸ்சி., (என்விரான்மெண்டல் சயின்ஸ்) பாட வகுப்புகள் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**9—**

**கலைக் கல்லூரி நிறுவுதல்**

**வினா 17903—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குஜிலியம்பாறையில் அரசு கலைக் கல்லூரி ஒன்று நிறுவுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**10—**

**பல்தொழில்நுட்பப் பயிலகம் அமைத்தல்**

**வினா 18951—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலமாக பல்தொழில்நுட்பப் பயிலகம் (பாலிடெக்னிக்) ஒன்று ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

தொலைபேசி வசதி ஏற்படுத்த ஆணை வழங்கப்பட்டு, 8-1-1996-ல் புதிய தொலைபேசி நிறுவப்பட்டுள்ளது. தொலைபேசி எண் 674 ஆகும்.

**14—**

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்**

**வினா 18785—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, வெள்ளாளபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

1996-97 ஆம் ஆண்டு பகுதி திட்டத்தில் 300 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்ட அரசாணை வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதில் வெள்ளாலபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும் ஒன்றாகும்.

வெள்ளாளபுரம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட நிலம் பெறப்பட்டு பொதுப் பணித் துறையினர் கட்டட கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**15—**

**மின் உற்பத்தித் தொடங்குதல்**

**வினா 19458—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) அரூர் சுப்பிரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கட்டப்பட்டு வரும் மின் நிலையத்தில் எப்பொழுது மின் உற்பத்தித் தொடங்கும்?

(ஆ) இதன் மூலம் எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஐந்து மெகாவாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் சுப்பிரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் ஏற்கனவே 19-6-1998 அன்று இயக்கி வைக்கப்பட்டு மின் உற்பத்தித் தொடங்கப்பட்டு விட்டது.

(ஆ) இந்த மின் நிலையம் மூலம் ஆண்டுக்கு 100 இலட்சம் யூனிட்டுகள் உற்பத்தி செய்யக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இம் மின்சாரத்தில் வருடத்திற்கு ஏறத்தாழ 50-60 இலட்சம் யூனிட் மின்சாரம் தமிழ்நாடு மின்வாரிய மின் கட்டமைப்பிற்குக் கிடைக்கக்கூடும்.

**16—**

**மின் அலுவலகத்திற்குக் கட்டடம்**

**வினா 19492—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், தொளசம்பட்டி ஊராட்சியிலுள்ள (Electricity Board Office) மின்சார அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலமாக சுயநிதி அடிப்படையில் பல்தொழில்நுட்பப் பயிலகம் தொடங்குவதற்கான கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. அரசுத் தரப்பில் பல்தொழில்நுட்பப் பயிலகம் தொடங்குவதற்கான உத்தேசம் ஏதுமில்லை.

**11—**

**அச்சிறுப்பாக்கம் தொகுதியில் கலைக் கல்லூரி**

**வினா 19178—திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதியில் புதியதாக அரசு கலைக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதி ஆண்டிலேயே தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**12—**

**மின்வெட்டு ஏற்படுவதைப் போக்குதல்**

**வினா 14350—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதி, அனந்தபுரம் பேரூராட்சி, கணக்கன்குப்பம், தேவதானம்பேட்டை, நல்லான்பிள்ளைபெற்றாள் ஆகிய கிராமங்களில் மின்வெட்டு (அடிக்கடி) இருப்பதை அரசு அறியுமா?



(ஆ) ஆம் எனில், அதனைப் போக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மேல்மலையனூர் தொகுதி, அனந்தபுரம் பேரூராட்சி, கணக்கன்குப்பன், தேவதானம்பேட்டை, நல்லான்பிள்ளைபெற்றாள் ஆகிய கிராமங்களுக்கு 110 கிலோ வோல்ட் செஞ்சி துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. மின் கட்டமைப்பின் (Grid) நிலையினைப் பொறுத்து, 110 கிலோ வோல்ட் செஞ்சி துணை மின் நிலையத்திற்கு மின்சாரத் தடங்கல்கள் ஏற்பட்டு வந்தன. எனவே, மேற்கூறிய கிராமங்களில் மின்வெட்டு இருந்து வந்தது. ஆனால், 20-4-1998 முதல் தமிழகத்தில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, செஞ்சி துணை மின்நிலையத்திற்கு மின் துண்டிப்பு மிகவும் குறைந்துள்ளதால், மேற்குறிப்பிட்ட கிராமங்களுக்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

**13—**

**மருத்துவமனைக்குத் தொலைபேசி வசதி**

**வினா 18738ஏ—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனைக்கு விரைவில் தொலைபேசி வசதி செய்ய அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு 1995-96 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் அரசாணை எண் 238, மக்கள் நல்வாழ்வு, நாள் 18-4-1995-ன்படி

(ஆ) தொளசம்பட்டி ஊராட்சியில் மின் வாரியத்திற்குச் சொந்தமான நிலம் ஏதும் இல்லை. மின்வாரிய அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்க அவ்வூர் பொது மக்களோ அல்லது ஊராட்சியோ காலிமனை வழங்கினால் வாரிய செலவில் கட்டடம் கட்டி மின் அலுவலகம் இயங்க ஆவன செய்யப்படும்.

**17—**

## புதிய மின்மாற்றிகள் அமைத்தல்

**வினா 19494—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், ஊ.மாரமங்கலம் ஊராட்சி, பஞ்சக்காளிப்பட்டி, கருப்பணம்பட்டி, ஊ.மாரமங்கலம் ஆகிய ஊர்களுக்கு அதிக அழுத்தமுள்ள மின்சாரம் கிடைக்க புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், ஊ.மாரமங்கலம், பஞ்சக்காளிப்பட்டி, கருப்பணம்பட்டி ஆகிய பகுதிகள் தொளசம்பட்டி இயக்கமும் பராமரிப்பும் பிரிவிற்கு உட்பட்டது. ஊ.மாரமங்கலம் பஞ்சாயத்து பகுதியில் ஊ.மாரமங்கலத்தில் உள்ள 100 கே.வி.ஏ./22 கே.வி. அழுத்தமுள்ள மின்மாற்றி எண் 1 உள்ளது. மேலும், கருப்பணம்பட்டி மற்றும் பஞ்சக்காளிப்பட்டி பகுதிகளில் மூன்று மின் மாற்றிகள் உள்ளன. முறையே மின்மாற்றி எண் 1.100 கே.வி.ஏ./22 கே.வி., மின்மாற்றி எண் 2 50 கே.வி.ஏ./22.கே.வி., மின்மாற்றி எண் 3 63 கே.வி.ஏ./22 கே.வி. மேற்கண்ட மின்மாற்றிகளுக்கு தும்பிப்பாடி 110 கே.வி.ஏ./22 கே.வி. துணை மின்நிலையத்திலிருந்து மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. இம்மின்மாற்றிகளின் திறன் ஏற்கெனவே உள்ள மின்மாற்றிகளின் இணைப்புகளின் பளுவிற்குப் போதுமானதாகவே





உள்ளது. மேலும், இப்போது மின் அழுத்தமும் ஒரே சீராகவே உள்ளது. மற்றும் இப்பகுதியில் தற்பொழுது மின் இணைப்பு வேண்டி விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லாததால் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய தேவை இல்லை.

**18—**

## மும்முனை இணைப்பு வழங்குதல்

**வினா 19514—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியப் பகுதியில் தடையின்றி மின்சாரம் கிடைக்க மும்முனை இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியப் பகுதிகளில் சங்ககிரி - மகுடஞ்சாவடி 22 கே.வி. புறநகர் மின்னூட்டியின் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த மின்னூட்டியில் பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மும்முனை மின்சாரமும் மற்ற நேரங்களில் இருமுனை மின்சாரமும் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இம்மின்னூட்டியில் தொடர்ந்து மும்முனை மின்சாரம் வழங்க, தேவையான வாரிய விதிமுறைகளின்படி குறைந்தபட்சத் தகுதி இல்லாததினால் மீதமுள்ள 10 மணி நேரத்திற்கு மும்முனை மின்சாரம் வழங்க இயலாது.

**19—**

## மின்தடையைச் சீர் செய்தல்

**வினா 19528—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரில் ஏற்படும் மின்தடையை சீர் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகருக்கு மின் விநியோகம் செய்யப்படும் உயர் அழுத்த மின் பாதைகளில் மழைக் காலங்களிலோ அல்லது காற்று அதிகமாக வீசும் பருவ காலங்களிலோ மரமோ அல்லது மரக்கிளைகளோ விழுந்து மின் துண்டிப்பு ஏற்படுகிறது. அத்தடைகளை உடனடியாக நீக்கி தடையற்ற மின்சாரம் வழங்கப்படுகிறது. மேலும், 20-4-1998 முதல் 10-7-1998 வரை மின்வெட்டு அமலில் இருந்தபோது காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையுள்ள காலத்தில் 1.30 மணி நேர அளவுக்கு தினமும் மின்சாரம் நிறுத்தப்பட்டது. மின்வெட்டு நீங்கிய பிறகு 24 மணிநேரமும் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**20—**

### நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா 10370—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், அரங்கனூர் நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், அரங்கனூர் (செமயனூர்) நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் ரூ. 2.5 இலட்சம் மதிப்பீட்டில் 1998-99ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் 12-5-1998ஆம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டு தற்போது கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.





**21—**

### உழுவைகளுக்கு மானியம்

**வினா 18679—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் வாங்கும் உழுவைகளுக்கு (டிராக்டர்களுக்கு) அரசு மூலம் வழங்கப்படும் மானியத்தின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அந்தந்தப் பகுதியிலுள்ள வேளாண்மை உதவி இயக்குநர்களின் பரிந்துரையின்படி விவசாயிகளுக்கு 30 பி.டி.ஓ. குதிரைத் திறன் வரையில் உள்ள உழுவைகளுக்கு (டிராக்டர்களுக்கு) ரூ. 30,000 மானியமாக வழங்கப்படுகிறது.

**22—**

### தூர் எடுத்து ஆழப்படுத்துதல்

**வினா 5724—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி வட்டம், ஓடத்துறை கிராமத்தில் ஓடத்துறை குளம் மற்றும் எட்டிக்குட்டை குளம், கோபி வட்டம், மேட்டுப்பாளையம் குளம் ஆகியவற்றை தூர் எடுக்கவும் ஆழப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

பவானி வட்டம், ஓடத்துறை கிராமத்தில் ஓடத்துறை குளத்தில் வண்டல்மண் தேக்கம் ஏற்படுவதை ஒவ்வொரு ஆண்டும் அந்தந்தப் பகுதி விவசாயிகள் அப்புறப்படுத்திவிடுகிறார்கள். ஆகையால், மேற்படி குளங்களில் தூர் எடுக்கவும், ஆழப்படுத்தவும் அவசியம் இல்லை. அதன் தொடர்பான திட்டமும் இத்துறையில் இல்லை. மற்றும் கோபி வட்டம், மேட்டுப்பாளையம் குளம் என்பது அனந்தசாகரம் ஏரியைக்

குறிப்பதாகும். இந்த ஏரி தடப்பள்ளி வாய்க்கால் கரைக்கோடியில் உள்ளது. இந்த ஏரிக்கு தடப்பள்ளி வாய்க்காலின் மூலமும், கீழ்பவானி வாய்க்கால் கழிவு நீர் மூலமும் நீர் கிடைத்து வருகிறது. எனவே, இந்த ஏரியில் எப்போதும் நீர் இருந்து கொண்டுள்ளது. நீர் இல்லாத நிலை ஏற்படின், தூர் எடுக்கவும், ஆழப்படுத்தவும் பரிசீலனை செய்யப்படும்.

**23—**

### கண்மாய்களையும் ஊரணிகளையும் ஆழப்படுத்துதல்

**வினா 19553—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து கண்மாய்களையும், ஊரணிகளையும் ஆழப்படுத்திச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சரின் ஏரிகள் தூர் வாரி சீரமைக்கும் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தில் உள்ள சிக்கல் கண்மாய்ப் பணிக்கு ரூ. 10.00 இலட்சத்திற்கு அரசின் அனுமதி பெற்று, பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இது தவிர, மற்ற பொதுப் பணித் துறை கண்மாய்கள் மராமத்துப் பணிகள் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**24—**

### சேலம் மாவட்டத்தில் புதிய பேருந்துகள்

**வினா 21075—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்திற்கு அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக எத்தனை புதிய பேருந்துகள் வழங்க அரசு உத்தேசித்துள்ளது?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

1998-99-ஆம் ஆண்டு சேலம், நாமக்கல் மாவட்டங்கள் உள்ளிட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்-I)-க்கு 239 புதிய பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 112 புதிய பேருந்துகள் கூண்டு கட்டப்பட்டு பழைய பேருந்துகளுக்குப் பதிலாக இயக்கப்பட்டுள்ளன.

**25—**

### கிராமப்புற நிதி உதவி

**வினா 5117—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற நிதி உதவி திட்டத்தின்கீழ் புவனகிரி தொகுதி, நத்தமேடு அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பூவாலை அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், வண்டுராயன்பட்டு அருள்மிகு இராமலிங்கசுவாமி கோயில், பின்னலூர் அருள்மிகு மாரியம்மன் கோயில், கத்தாழை ஆதிதிராவிடர் தெருவிலுள்ள முத்துமாரியம்மன் கோயில் ஆகியவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ):

| திருக்கோயில் பெயர் மற்றும் ஊர் | நிதி வழங்கப்பட்ட விவரம் |
|---|---|
| 1. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், நத்தமேடு, புவனகிரி தொகுதி. | இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின் கீழ் இல்லாத திருக்கோயில் என்பதனால் நிதி உதவி வழங்கப்படவில்லை. |

[1998 நவம்பர் 26

| திருக்கோயில் பெயர் மற்றும் ஊர் | நிதி வழங்கப்பட்ட விவரம் |
|---|---|
| 2. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பூவாலை. | ரூ. 25,000 நிதியுதவி 1993-94ஆம் ஆண்டுக்கான கிராமப்புற திருப்பணி நிதி உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. |
| 3. அருள்மிகு இராமலிங்கசுவாமி திருக்கோயில், வண்டுராயன்பட்டி. | ரூ. 25,000 நிதியுதவி 1994-95ஆம் ஆண்டுக்கான கிராமப்புற திருப்பணி நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. |
| 4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பின்னலூர். | ரூ. 25,000 நிதியுதவி 1994-95 ஆம் ஆண்டுக்கான கிராமப்புற திருப்பணி நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. |
| 5. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கத்தாழை. | இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின் கீழ் இல்லாத திருக்கோயில் என்பதனால் நிதியுதவி வழங்க இயலாது. |

**26—**

**தமிழில் கையொப்பமிடுதல்**

**வினா 21003—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் அனைவரும் தமிழிலேயே கையொப்பமிடச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



1998 நவம்பர் 26]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மாநில அரசு ஊழியர்கள் தமிழில் கையொப்பமிட வேண்டும் என அரசு ஆணை வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள தனியார் நிறுவனப் பணியாளர்கள் தமிழில் கையொப்பமிடுவது குறித்து அரசிடம் நடவடிக்கை எதுவுமில்லை.

**27—**

**திருக்குறளை அவரவர் தாய்மொழியில் மொழிபெயர்த்தல்**

**வினா 21160—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் மறையாம் திருக்குறளை பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்த்து அனைத்து மாநில கல்வி நிலையங்களிலும் பயில அரசு முயற்சி செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருக்குறளை அவரவர் தாய்மொழியில் மொழி பெயர்த்துக் கொள்ள தடையேதுமில்லை. மேலும் இது குறித்து அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

**28—**

**பொது அங்காடிக்குக் கட்டடம்**

**வினா 20468—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு கிராமத்தில் இயங்கிவரும் முழுநேர பொது அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1998 நவம்பர் 26

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு மற்றும் உடையநாடு கிராமங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு தலா ரூ. 1.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டித்தர 1998-99 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

29—

## முழுநேர அங்காடிக்குக் கட்டடம்

**வினா 20467—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா -

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு கிராமத்தில் இயங்கிவரும் முழுநேர பொது அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு மற்றும் உடையநாடு கிராமங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு தலா ரூ. 1.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டித்தர 1998-99 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

30—

## கண்காணிப்புக் குழு அமைத்தல்

**வினா 20476—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 26]

நியாயவிலைக் கடைகளில் விநியோகம் சீராக நடைபெறுவதைக் கண்காணிக்க அரசு கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்க ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நியாயவிலைக் கடையளவில் இயங்கிவந்த கண்காணிப்புக் குழுவைக் கலைத்துவிட்டு பொது விநியோக முறையினை கண்காணிக்க மாவட்ட அளவிலும், வருவாய்க் கோட்ட அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இக்குழுக்களில் பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், ஊராட்சிமன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். நியாயவிலைக் கடையளவில் கண்காணிப்புக் குழு ஏற்படுத்த தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

31—

## பொது விநியோகக் கடை அமைத்தல்

**வினா 20609—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட ஜருகு, காமிசெட்டிப்பட்டி, பள்ளப்பட்டி, நாகர்கூடல், பி. அக்ரஹாரம் ஆகிய ஊர்களில் புதியதாக பொது விநியோகக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, காமிசெட்டிப்பட்டி, பள்ளப்பட்டி, நாகர்கூடல் மற்றும் பி. அக்ரஹாரம் ஆகிய ஊர்களில் ஏற்கெனவே நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்ற காரணத்தால் தற்போது புதியதாக நியாயவிலைக் கடைகள் மீண்டும் தொடங்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**32—**

## கூட்டுறவு அச்சகங்களுக்கு நிதியுதவி

**வினா 21209—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு அச்சகங்களில் நவீன இயந்திரங்களைப் பொருத்துவதற்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் நிதியாண்டில் பகுதி 2ஆம் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் தருமபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு அச்சகங்களை நவீனமயப்படுத்துவதற்காக ரூ. 4.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 8.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை (நிலை) எண் 102, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-6-1998 இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**33—**

## பீடித் தொழிலாளர்களுக்கு இலவச வீடுகள்

**வினா 19718—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் உள்ள பீடித் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் உள்ள பீடித் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.





**34—**

## பால் குளிரூட்டும் நிலையக் கழிவை அகற்றுதல்

**வினா 18179—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாகல அள்ளி ஊராட்சி, சவுளூர் கிராமத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், தருமபுரி தாலுகா, சவுளூர் கிராமத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையம் தற்போது வாரிய ஆணைப்படி மூடப்பட்டுள்ளதால் தொழிற்சாலையிலிருந்து செயல்முறைக் கழிவு நீரை அகற்றுதல் என்ற கேள்வி எழவில்லை.

**35—**

## பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி

**வினா 20861—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நுழைவுத் தேர்விற்கு எஸ்.டி., எஸ்.சி., மாணவர்களுக்கு, இலவசப் பயிற்சி அளிப்பதுபோல மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட/சீர் மரபினர் மாணவ/மாணவியருக்கு மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் கல்விப் பயிற்சிகளில் சேருவதற்கு இலவச நுழைவுத் தேர்வுப்

பயிற்சி அளிக்கும் திட்டம் ஏற்கெனவே இத்துறை மூலம் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி மாநிலம் முழுவதும் 72 அரசு உதவிபெறும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் விண்ணப்பம் செய்யும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் இனத்தைச் சேர்ந்த மாணவ/மாணவியருக்கு நுழைவுத் தேர்வுக்கு முன் 15 நாட்களுக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**36—**

**மக்கள்தொகை அடிப்படையில் இடஒதுக்கீடு**

**வினா 20862—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மக்கள்தொகை அடிப்படையில் தனி இடஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளுக்கு 20 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு நீதிப் பேராணை மனுக்கள் சென்னை உயர்நீதிமன்றத்திலும், தமிழ்நாட்டில் தற்போது தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு வழங்கப்பட்டு வரும் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை எதிர்த்துத் தொடரப்பட்டுள்ள வழக்குகள் உச்ச நீதிமன்றத்திலும் நிலுவையில் இருந்து வருகின்றன. மேற்குறிப்பிட்ட வழக்குகளில் நீதிமன்றங்களின் தீர்ப்பு வெளியாகும் வரை தற்போதுள்ள இடஒதுக்கீட்டுக் கொள்கையில் எவ்வித மாற்றமும் செய்ய இயலாது.





**37—**

**இடஒதுக்கீடு பின்பற்றுதல்**

**வினா 20879—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 சதவீத இடஒதுக்கீட்டினை அரசினுடைய அனைத்துத் துறைகளிலும், அரசு சார்பு நிறுவனங்களான கூட்டுறவுத் துறை, போக்குவரத்துக் கழகம், மின்வாரியம் போன்றவற்றிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும், தனியார் தொழிற்சாலைகளிலும் அமலாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 சதவீத இடஒதுக்கீடு, அரசின் அனைத்துத் துறைகளிலும், கூட்டுறவுத் துறை, போக்குவரத்துக் கழகங்கள், மின்வாரியம் உள்ளிட்ட அனைத்து அரசு சார் பொதுத் துறை நிறுவனங்களிலும், அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தற்போது கடைப்பிடிக்கப்படுகிறது. அரசியலமைப்புச் சட்டத்திற்குத் தகுந்த திருத்தங்கள் கொண்டு வந்தால் மட்டுமே தனியார் தொழிற்சாலைகளில் இடஒதுக்கீட்டினை அமல் செய்ய இயலும்.

(ஆ) எழாது.

**38—**

**மாணவ-மாணவியர் விடுதி அமைத்தல்**

**வினா 21348—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல்கிணறு, வடக்கன்குளம், கள்ளிகுளம் ஆகிய ஊர்களில் மாணவ/மாணவியரின் நலன் கருதி அரசு, விடுதிகள் அமைத்துக் கொடுக்க முன்வருமா?

[1998 நவம்பர் 26

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல்கிணறு, டெக்கம்மாதளம, கள்ளிகுளம் ஆகிய ஊர்களில் மாணவ/மாணவியர் விடுதி அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**39—**

## நிர்வாகப் பொறியாளர் தலைமையிடம்

**வினா 13495—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் பொதுவாக உள்ள வீட்டு வசதித் துறை நிர்வாகத்தைப் பிரித்து, தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள திண்டுக்கல் மாவட்டத்திற்கென்று தனியாக ஒரு நிர்வாகப் பொறியாளர் தலைமையிடம் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு நிர்வாகப் பொறியாளர் தலைமையிடம் அமைக்கும் அளவிற்கு வீட்டு வசதித் திட்டங்கள் தற்போது நடைபெறவில்லை என்பதாலும், இம்மாவட்டத்தில் புதிய திட்டங்கள் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதாலும் நிர்வாகப் பொறியாளர் தலைமையிடம் அமைக்கும் வாய்ப்பு தற்போது இல்லை.

**40—**

## சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா 12646—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 26]

பேராவூரணியில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பேராவூரணி சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**41—**

## முத்திரைத்தாள் விற்பனை

**வினா 19654—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு சேலம், நாமக்கல் மாவட்டங்களில் எத்தனை பேரை முத்திரைத்தாள் விற்பனைக்கு அரசு நியமித்தது?

(ஆ) சங்ககிரி, எடப்பாடி வட்டத்தில் எவ்வளவு பேர் முத்திரைத்தாள் விற்பனையாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில், சேலம் பதிவு மாவட்டத்தில் 63 பேரும், நாமக்கல் பதிவு மாவட்டத்தில் 11 பேரும் முத்திரைத்தாள் விற்பனையாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில், சங்ககிரி உப பதிவு மாவட்டத்தில் 3 பேரும், எடப்பாடி உப பதிவு மாவட்டத்தில் 2 பேரும் முத்திரைத்தாள் விற்பனையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த உப பதிவு மாவட்டங்களில் மொத்த முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் எண்ணிக்கை முறையே 9 மற்றும் 9 ஆகும்.

[1998 நவம்பர் 26

42—

## நிலங்களுக்கு மதிப்பீடு தயாரித்தல்

**வினா 19656—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு கிராமங்களிலுள்ள நிலங்களை குழுக்கள் அமைத்து, அதன் மூலம் மதிப்பீடு தயார் செய்து அதன் அடிப்படையில் பத்திரம் பதிவு செய்தால் அதிக வருமானம் கிடைக்கும் என்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக "மதிப்பீட்டுக் குழு" அமைத்து நிலங்களின் தற்போதைய சந்தை மதிப்பைக் கண்டறிந்து, அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பின்மீது முத்திரைத் தீர்வை விதித்தால், அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கும் என்பதை அரசு ஏற்கெனவே முடிவு செய்து 1989 ஆம் ஆண்டு முதல் "வழிகாட்டி மதிப்பு நிர்ணயக் குழு" மூலம் கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள சொத்துக்களை மதிப்பீடு செய்யும் முறை நடைமுறையில் உள்ளது.

2. இந்த "வழிகாட்டி மதிப்பு நிர்ணயக் குழுக்களின்" தலைவராகக் கூடுதல் பதிவுத் துறைத் தலைவரும், செயலாளராக மாவட்டப் பதிவாளரும், உறுப்பினர்களாக சம்பந்தப்பட்ட பதிவு மாவட்டத்தின் மாவட்டப் பதிவாளரும், மண்டலத்தின் தலைவராக துணை பதிவுத் துறைத் தலைவரும் அங்கம் வகிக்கின்றனர்.

43—

## சேலம் மாவட்டத்தில் முத்திரைத்தாள் விற்பனை

**வினா 19657—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 26]

(அ) சேலம் மாவட்டத்தில் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) சங்ககிரி, எடப்பாடி வட்டத்தில் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மொத்தம் எவ்வளவு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் பதிவு மாவட்டத்தில் மொத்தம் 196 முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் உள்ளனர்.

(ஆ) சங்ககிரி உப பதிவு மாவட்டத்தில் 9 பேரும், எடப்பாடி உப பதிவு மாவட்டத்தில் 9 பேரும் முத்திரைத்தாள் விற்பனையாளர்களாக உள்ளனர்.

44—

## ஆவணத் தொகையைத் திருப்பி வழங்குதல்

**வினா 19658—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஸ்தாவேஜுகளை வீடுகள் வாங்குவதற்காக ஆவணங்கள் பதிவு செய்த பிறகு ஆவணத் தொகை சரியாக உள்ளதா என்பதை மதிப்பீடு செய்து பதிவு செய்தவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க காலதாமதமாகின்றது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகக் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வீடுகள் சம்பந்தப்பட்ட கிரைய ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டபின், ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட சொத்தில் முத்திரைத் தீர்வை வசூலிப்பதை ஏமாற்றுவதற்காக, சில ஆவணதாரர்கள்,

கட்டட அளவுகளைக் குறைத்தோ அல்லது கட்டடத்தின் தன்மை குறித்த விவரத்தை மறைத்தோ எழுதப்படுவதைக் கண்டறிய பதிவுத் துறையால் கட்டடங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. மதிப்பு சரியாக இருந்தால், ஆவணதாரர்களுக்கு உடனடியாக ஆவணங்கள் திருப்பி வழங்கப்படுகின்றன. மதிப்புக் குறைவு கண்டுபிடிக்கப்பட்டால், மதிப்பு குறைவாக எழுதிய குற்றத்தை இணக்கம் செய்துகொள்ள வாய்ப்பளித்து, இணக்கத் தொகை வசூலித்தபிறகு ஆவணங்கள் திருப்பி வழங்கப்படுகின்றன.

2. பதிவுற்ற ஆவணங்கள் கட்டட ஆய்வுக்குப் பிறகு திருப்பி வழங்கப்படுவதில் தேக்க நிலை ஏற்படாமல் இருக்க, கட்டட ஆய்வுக்கென நியமனம் செய்யப்பட்ட கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு) தவிர அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டப் பதிவாளர் (புலனாய்வு) மற்றும் இரண்டு உதவி செயற் பொறியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு, பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் காலதாமதமின்றி ஆவணதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**45—**

### மகுடஞ்சாவடியில் தொழிற்பேட்டை

**வினா 19771—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.





**46—**

### கொங்கணாபுரத்தில் தொழிற்பேட்டை

**வினா 19772—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டத்தில் எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் சிட்கோ தொழிற்பேட்டை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**47—**

### தேவூரில் தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா 19774—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், தேவூரில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், தேவூரில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[1998 நவம்பர் 26

48—

### அண்ணா நினைவகத்தை மேம்படுத்துதல்

**வினா 18320—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா நினைவகத்தை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரத்திலுள்ள பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் ரூ. 4.20 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு, புதுப்பொலிவுடன் உள்ளது. மேலும், ரூ. 15,000 செலவில் புகைப்படங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

49—

### பெருந்தலைவர் காமராஜர் சிலை அமைத்தல்

**வினா 15898—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூர் அணையின் முகப்பில் பெருந்தலைவர் காமராஜர் சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

சிலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.



1998 நவம்பர் 26]

50—

### தஞ்சாவூர் ஒன்றியத்தில் கால்நடை மருத்துவமனை

**வினா 19962—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், நீலகிரி ஊராட்சி, மானோஜிப்பட்டி கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.மா. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு இல்லை.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர் சிறப்புக் கவன ஈர்ப்புக்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் முதலில் திரு. சி. ஞானசேகரன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 18 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அதிலே எங்கள் மாவட்டத்திலுள்ள ஆம்பூர் சர்க்கரை ஆலை மற்றும் மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தவிர மற்ற 16 சர்க்கரை ஆலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் தங்களுக்கு வழக்கமாக அரசாங்கம் இதுவரை கொடுத்து வந்த 20 சதவிகித Bonus கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையை வலியுறுத்தியும்,

பழைய settlement மார்ச் மாதத்தில் முடிவடைவதால் புதிய சம்பளம் பெறுவதற்கான settlement இவ்வருடம் மார்ச் மாதத்திற்குள் போட்டிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்யாததோடு அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைக்காமல், "உங்களோடு பேசுவதற்குத் தயாராக இல்லை, தனியார் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைச் சார்ந்த 'SISMA' என்ற ஒரு கூட்டமைப்போடு பேசுங்கள்" என்று அரசாங்கம் அறிவுறுத்தியதன் காரணமாக, அதை எதிர்த்து கிட்டத்தட்ட 18 ஆயிரம் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், சென்னையில் கூடி, சட்டமன்ற முற்றுகைப் போராட்டம் என்று அறிவித்து, பின்னர் அவர்கள் நேற்று கைது செய்யப்பட்டு காவலில் இருந்தார்கள். அரசாங்கம் அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 20 சதவிகித bonus கொடுத்து வந்திருக்கிறது. இந்த முறை அவர்களுக்கு 8.33 சதவிகித bonus கொடுத்திருக்கிறார்கள். ஆனால் மற்றத் தொழிலாளர்கள் எல்லாம் 20 சதவிகித bonus பெறுகின்றபோது இந்தத் தொழிலாளர்கள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்? எனவே, இவர்களுக்கும் அரசாங்கம் தாராள மனதோடு எப்படியாவது 20 சதவிகித bonus கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல சம்பள settlement உடனடியாகப் போடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது விவசாயிகள் எல்லாம் cutting order கிடைக்காததால் கரும்பை வெட்டாமல் உள்ளனர். இதனால் பல ஆலைகள் அரைவையைத் தொடங்காமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. மேலும் கரும்புகள் எல்லாம் காய்ந்த பின்னாலே, cutting order கிடைக்கின்ற காரணத்தாலே விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் தங்களுடைய கரும்பினை வெட்டி ஆலைகளுக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னால், ஆலைகள் உடனடியாக அரைவையைத் தொடங்க வேண்டும். அரைவையைத் தொடங்க வேண்டும் என்று சொன்னால், தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்ந்து, அவர்கள் சுமுகமாக வேலைக்குத் திரும்பி, பணிகள் சுமுகமாக நடைபெற ஆரம்பித்த பின்னால்தான் விவசாயிகள் தங்களுடைய கரும்புகளை வெட்டி அனுப்புகின்ற நிலை உருவாகும்.

மேலும் molasses விற்பனை ஆகாத காரணத்தாலே, பல இடங்களில் அவற்றை வைப்பதற்கு இடம் இல்லை என்றும், அதை விற்றதற்குப் பின்னால்தான் நாங்கள் அரைவையைத் தொடங்க முடியும் என்றும், ஆலைகளின் நிர்வாகங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. இப்போது கரும்பை வெட்டி அனுப்ப முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற



காரணத்தாலே தொழிலாளர் தோழர்கள், கிட்டத்தட்ட 18 ஆயிரம் பேருக்குமேல் களத்திலே இறங்கியுள்ளனர். தங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய 20 சதவிகித bonus கேட்கின்ற காரணத்தினாலும், புதிய சம்பளம் பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் புதிய settlement கேட்கின்ற காரணத்தினாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்றும் அமைச்சரவையும் இதில் கொஞ்சம் கருணை காட்டி உடனடியாக அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய நல்ல அறிவிப்பு, நாளையதினமே அவர்கள் எல்லாம் வேலைக்குத் திரும்புகின்ற அளவில் இருக்க வேண்டுமென்றும் சுமுகமான நிலையை உருவாக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, அரசாங்கம் கருணையோடு அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து விவசாயிகளின் வயிற்றில் பால் வார்க்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிக்கலான, நெருக்கடியான பிரச்சினை, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் ஏறத்தாழ 16 ஆயிரம் பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகும். இந்த வேலை நிறுத்தத்திற்கான காரணம் என்ன என்பதைப் பற்றி நான் விரிவாக விளக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. எல்லோரும் அறிந்த ஒன்றுதான். பொதுவாக ஒரு பிரச்சினை ஏற்பட்டுவிட்ட நிலையில் அந்தப் பிரச்சினையின் தாத்பரியங்கள் என்னவாக இருந்தாலும், அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு அளிக்க வேண்டிய ஒரு பொறுப்பு இருக்கிறது என்பதை மாநில அரசு புரிந்து கொண்டு, இந்தப் பிரச்சினைக்குப் பொருத்தமான வழிமுறைகளில் தீர்வு அளிக்க முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதிலும், ஒப்பந்தக் காலம் முடிந்து ஏறத்தாழ எட்டு மாத காலம் ஆகியிருக்கிறது. அவர்கள் முன்வைக்கின்ற பிரதானப் பிரச்சினைகளில், இதுவரை வழங்கி வந்திருக்கிற 20 சதவிகித bonus குறைக்கப்படக்கூடாது; வழங்கிவந்த கருணைத் தொகை வெட்டப்படக்கூடாது என்று கோரியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு எந்தவகையில் தீர்வு காண வேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட தொழிலாளர் பிரதிநிதிகளையும், சர்க்கரைத் துறை ஆணையரையும் வைத்துப் பேசுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது பொருத்தமாக

இருக்குமென்று நான் கருதுகிறேன். அவர்கள் ஒரு குறிப்பிட்ட கோரிக்கையாகத் தொடர்ந்து வலியுறுத்துகிற விஷயம், பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை சம்பந்தப்பட்ட ஆலைகளின் பிரச்சினை என்பதால், சர்க்கரைத் துறை ஆணையர் முன்வைத்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனவே, சர்க்கரைத் துறை ஆணையர் அவர்களை வைத்து, சம்பந்தப்பட்ட தொழிலாளர் பிரதிநிதிகளை அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தி சௌஜன்னியமான தீர்வு காண முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்; அவர்களில் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று நான் மாநில அரசைக் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 18 சர்க்கரைத் தொழிற்சாலைகளிலுள்ள சுமார் 15,000 தொழிலாளர்கள் ஒருமாத காலமாக வேலை நிறுத்தம் செய்கிறார்கள். சென்னையில் நேற்றையதினம் சட்டசபை முற்றுகைப் போராட்டம் நடத்துவதாக அறிவித்து, சுமார் 10,000 பேர் கைது செய்யப்பட்டு, மாலையிலே விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக 18 சர்க்கரை ஆலைகளும் பூட்டிக் கிடக்கின்றன. எல்லாத் தொழிற்சங்கக்காரர்களும் இதில் கலந்துகொண்டிருக்கின்றார்கள். தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் யாருமே வேலைக்குப் போகவில்லை; ஆலைகள் மூடிக்கிடக்கின்றன. ஆனால், பேச்சுவார்த்தையிலே திராவிட முன்னேற்றக் கழக சங்கத்தினுடைய தலைவர், C.I.T.U. சங்கத்தினுடைய தலைவர் ஆகியோர் மட்டும் கலந்து கொள்கிறார்கள். மற்ற தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை. ஆனால் தொழிலாளர்கள் அனைவருமே போராட்டத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒட்டுமொத்தமாக எல்லாச் சங்கங்களின் உறுப்பினர்களும் ஒற்றுமையாக இருக்கின்ற காரணத்தினாலே, அரசு இந்தத் தொழிலாளர்களுடைய ஒற்றுமையைக் குலைக்கின்ற அளவிலே, பிளக்கின்ற அளவிலே ஏற்பாடு செய்யாமல், அவர்கள் என்ன கோரிக்கை வைக்கின்றார்களோ அதை நிறைவேற்ற வேண்டும். அரசு இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்காததனாலே இன்றைக்கு 3 இலட்சம் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சர்க்கரைத் துறை ஆணையாளர் உடனே



பேச்சு வார்த்தையைத் தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால் நீங்கள், தனியாருடைய சர்க்கரை ஆலை அதிபர்களையும் வைத்து பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று சொல்கிறீர்கள். ஆனால், அவர்கள் சர்க்கரைத் துறை ஆணையாளருடன் தான் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று சொல்கிறார்கள். அவர்களுடைய எண்ணப்படியே நீங்கள் விட்டு, பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். எல்லாத் தொழிலாளர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். உங்கள் தொழிற்சங்கத்திலுள்ள தொழிலாளர்களும் கலந்துகொண்டு இருப்பதனால், அரசாங்கம் தொழிலாளர்களிடம் பாகுபாடு இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு 18 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அவற்றில் உள்ள Molasses-ஐ போன ஆண்டு ஒரு டன் 2,400 ரூபாய்க்கு வெளி மாநிலத்திலுள்ளவர்களெல்லாம் கேட்டார்கள். ஆனால், நிர்வாகத்தினர் விற்கவில்லை. ஆனால், இப்போது ஒரு டன் Molasses 2,100 ரூபாய் என்று இருப்பதனால், அரசாங்கத்தினால்தான் 54 கோடி ரூபாய் சர்க்கரை ஆலைகளுக்கு நட்டம் வந்துவிட்டதே தவிர, இலாப நட்டக் கணக்கைப் பார்த்து நீங்கள் தொழிலாளர்களுக்கு சலுகை கொடுக்கவில்லை, பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று சொல்வது சரியாக இருக்காது. மேலும், 14-11-1998 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அளவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், கடந்த காலங்களைப்போலவே தனியார் முதலாளிகளை வைத்துத்தான், SISMA-ஐ வைத்துத்தான் பேசமுடியும்; இல்லையென்றால் பேச்சுவார்த்தை கிடையாது என்று அறிவித்திருப்பது நியாயமாக இல்லை. ஆகவே, ஏழு ஆண்டுகளாகப் பெற்றுவந்த 20 சதவிகித bonus மற்றும் கருணைத் தொகைகள் குறைக்கப்படாமல் தொடர்ந்து வழங்கிட வேண்டும். எனவே, சர்க்கரைத் தொழிலாளிகள் கூடுதல் bonus கேட்டுப் போராடவில்லை. ஏற்கெனவே பெற்றுவந்த bonus மற்றும் கருணைத் தொகையைக் குறைக்காதே என்றுதான் போராட்டம் நடத்துகிறார்கள். இது அவர்களுடைய உரிமைப் பிரச்சினை; வாழ்க்கைப் பிரச்சினை. இதை அரசியல் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளாமல், கௌரவப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளாமல், தொழிலாளர்களுக்குச் சாதகமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நேற்றே இப்பிரச்சினையை எடுத்திருந்தால், இவ்வளவு பேர்களைக் கைது செய்திருக்க வேண்டியதில்லை; சிறைக்கு அனுப்ப வேண்டியதில்லை. ஆனால் கைது செய்துவிட்டு, மாலையில் விட்டுவிட்டீர்கள். ஆகவே, நேற்றே முடிவெடுத்திருந்தால் கைது செய்ய

வேண்டிய அவசியமே இருந்திருக்காது. ஆகவே, தொழிலாளர்கள் பிரச்சினை வருகின்றபோது, உடனுக்குடன் அரசு கவனித்து நடவடிக்கை எடுத்தால், அரசுக்கும் நல்லது, மக்களுக்கும் நல்லது, தொழிலாளர்களுக்கும் நல்லது என்று சொல்லிக்கொண்டு சுமுகமான முறையில், தொழிலாளர் நலத் துறை ஆணையர் அவர்களை வைத்து பேச்சுவார்த்தை நடத்த ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பைச் சக்கையாகப் பிழிந்து சர்க்கரை உற்பத்தி செய்து கொடுக்கக்கூடிய தொழிலாளர்களின் சங்கங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கடந்த 2-11-1998-லிருந்து வேலைநிறுத்தப் போராட்டத்திலே ஈடுபட்டு, நேற்று இங்கே போராடிய நிலையிலே கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, 1-4-1998-க்கு முன்பாக பேச்சுவார்த்தையை முடித்து, ஊதிய உயர்வு வழங்க வேண்டிய நமது நிர்வாகமானது, இன்னும் பேச்சுவார்த்தையை முடிக்காமல் இழுத்தடிக்கிற காரணத்தினால்தான், தொழிலாளர்கள் எல்லாம் இப்போது சாலைக்கு வந்து போராடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போது கரும்பு வெட்டக்கூடிய தருணம். தொழிலாளர்கள் எல்லாம் வேலைநிறுத்தப் போராட்டத்திலே ஈடுபட்டு அதனால் ஆலைகள் இயங்காத காரணத்தினால், கரும்பை வெட்ட முடியாத நிலையிலே விவசாயிகளும் பெரும் அவதிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். உரிய தருணத்திலே வெட்ட வேண்டிய கரும்பை வெட்ட முடியாத காரணத்தினால், கரும்பிலே இருக்கக்கூடிய சர்க்கரைச் சத்து எல்லாம் குறைந்து வெறும் சக்கையாகப் போய், விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படக்கூடிய நிலை இப்போது இருந்துகொண்டிருக்கிறது. இதனால், விவசாயிகளுக்கும பெருத்த பாதிப்பு, தொழிலாளர்களுக்கும் பெருத்த பாதிப்பு. தொழிலாளர்கள் வேறு எதையும் கேட்கவில்லை. எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் சொன்னமாதிரி, கடந்த ஏழு ஆண்டுக்காலமாக 20 சதவிகித bonus வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இப்போது 8.33 சதவிகிதத்திலிருந்து 14.95 சதவிகிதம் வரையிலே அதனை வழங்கக்கூடிய காரணத்தால், ஏற்கெனவே வழங்கி



வந்த bonus-ஐ நிறுத்தக்கூடாது. அது முழுமையாக வழங்கப்பட வேண்டுமென்று சொல்லி அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல. கருணைத் தொகையாக அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அந்தத் தொகையும் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, கருணைத் தொகையாக ரூ.500-ஐயும் வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஒரு தவறான கருத்தை, இதுவரையிலே பேசியவர்கள் எல்லாம் தெரிவித்தார்கள், கருணைத் தொகை வழங்கப்படவில்லை என்று. கருணைத் தொகை ரூ.500 என்பது ரூ.1,000-ஆகத் தரப்படும் என்றுகூட அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது எல்லா ஏடுகளிலும் வெளிவந்திருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய விளக்கத்திற்கு மிக்க நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே, ஆயிரம் ரூபாயை மனமுவந்து வழங்கிய தாங்கள், 20 சதவிகித bonus-ஐயும் வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பேச்சுவார்த்தை என்று வருகிறபோது, South India Sugar Mills Association என்று சொல்லக்கூடிய, SISMA-வையும் அழைத்துப் பேசுவதாகச் சொல்கிறார்கள். தொழிலாளர்களின் bonus அல்லது ஊதிய உயர்வுக்காக அவர்களை அழைத்துப் பேசக்கூடிய நிர்வாகமானது, தனியார் துறையிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களின் bonus-ஐப் பற்றிப் பேசுகின்ற நேரத்திலே மட்டும் தனியாகப் பேசிக்கொள்கிறார்கள். ஆகவே, bonus-ஐப் பற்றி மட்டும் தனியாகப் பேசிக்கொள்ளக்கூடிய அந்தத் தனியார் நிர்வாகம், ஊதிய உயர்வுபற்றிப் பேசும்போது கலந்துகொள்ள வேண்டியது இல்லை என்பது தொழிலாளர்களுடைய ஒட்டுமொத்தக் கருத்து. ஆகவே, SISMA-வை இந்தப பேச்சுவார்த்தையிலே அழைக்காமல் நம்முடைய நிர்வாகம் மட்டும் தொழிலாளர்களை அழைத்துப் பேசவேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்த சர்க்கரை ஆலைகளினுடைய, கூட்டுறவு, பொதுத் துறை சர்க்கரை ஆலைகளினுடைய இந்த முக்கியமான பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டுமென்பதை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு மாத காலமாக, அரசு, பொதுத் துறை, கூட்டுறவுத் துறையிலே இயங்குகின்ற சர்க்கரை ஆலைகளிலே பணியாற்றுகின்ற ஊழியர்கள் தங்களுக்கு சம்பள உயர்வு வேண்டும், bonus 20 சதவிகிதம் வேண்டும் என்கிற கோரிக்கைகளை முன்வைத்து, உண்ணாவிரதப் போராட்டம், வேலைநிறுத்தப் போராட்டம் எல்லாம் நடத்தி, நேற்றைக்கு முற்றுகைப் போராட்டம் நடத்தி, பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டு, மாலையிலே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மற்ற துறைகளிலே பணியாற்றுகின்ற அலுவலர்களோடு ஒப்பிடுகிறபோது சர்க்கரை ஆலைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மிகக் குறைவான சம்பளத்தைத்தான் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும், ஆண்டு முழுவதும் வேலை செய்ய முடியாத நிலையிலே சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. கடந்த ஆண்டுகளில் எல்லாம் 8 மாதங்கள் வரை ஓடியவைகள், இந்த ஆண்டு, உற்பத்தி குறைந்து விட்ட காரணத்தால் 4 மாதங்கள்தான் ஓடக்கூடிய நிலைமைகள் எல்லாம் இருந்தன.

*முற்பகல் 9-45*

இந்தத் துறையிலே மிகுந்த நட்டம் ஏற்பட்டுவிட்ட காரணத்தினால், சர்க்கரை ஆலைகள் ஈட்டுகின்ற இலாபத்தைப் பொறுத்துத்தான் தொழிலாளர்களுக்கு bonus வழங்கப்படும் என்பது அரசினுடைய வாதமாக இருக்கிறது. இப்போது அரசுத் துறையிலே, பொதுத் துறையிலே இயங்குகின்ற அத்தனை நிறுவனங்களுமே நட்டத்திலேதான் இயங்குகின்றன. என்னுடைய தொகுதியில்கூட இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அந்த இரண்டிலே ஒரு சர்க்கரை ஆலை ஓரளவுக்கு நட்டம் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. மற்றொரு ஆலை மிகுந்த நட்டத்திலே ஓடிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் நிர்வாகத்திலே சில சங்கடங்கள் இருக்கின்றன. நிர்வாகம் சரியாகச் செயல்படவில்லையோ என்கிற அச்சம்தான். ஒரே துறையின்கீழ் இயங்குகின்ற இரண்டு ஆலைகளிலே ஒன்று மிதமான நட்டத்திலும், மற்றொன்று பெருவாரியான நட்டத்திலும் ஓடிக்கொண்டிருக்கின்றது என்றால், அங்கிருக்கின்ற இயந்திரங்கள் மிகவும் பழுதுபட்டவையாக, பழமையானவையாக இருக்கிற காரணத்தினால், அவை சரியாக இயங்குவதில்லை. அவை சரியாக இயங்காத காரணத்தினால், ஊழியர்கள் மட்டுமல்ல அங்கிருக்கின்ற கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளும் மிகவும் பாதிப்பிற்குள்ளாகிறார்கள். ஆகவே,





இதை அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு பொதுத் துறையிலே இயங்குகின்ற ஆலைகளைச் சீரமைக்கின்ற பணியினைச் சிறப்பாக எடுத்துச் செய்வதற்கு முன்வர வேண்டும். இந்த ஆலைகளைப் பொறுத்தவரையில், இந்த அரசு வந்த பிறகுதான்—Molasses விற்கின்ற நிலையை ஏற்படுத்தி அதன்மூலம்—இலாபம் ஈட்டுகின்ற அளவுக்கு ஒரு செயல் திட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. அந்த நோக்கத்திலிருந்து அதிகாரிகள் எப்படியோ மாறி, அதைச் சரியாக செயல்படுத்த முடியாத நிலையினால்தான்—Molasses மூலமாகத்தான் இந்த ஆலைகளுக்கு மிகப் பெரிய வருமானம் வருகின்ற நிலை—அதை அவர்கள் விற்பதற்கு முறையான நடவடிக்கையை எடுத்துக் கொள்ளாத காரணத்தினால்தான், அந்த Molasses விற்கப்படவில்லை. மேலும், அவற்றை வைப்பதற்குப் போதுமான இடங்கள் இல்லை என்கின்ற நிலையில், அவை வீணாகின்ற ஒரு நிலையும் இருக்கிறது. இத்தகைய நிலையினால்தான் இந்தச் சர்க்கரை ஆலைகளிலே மீண்டும் நட்டம் ஏற்பட்டது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சர்க்கரை ஆலைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் உண்மையிலேயே மிகுந்த சிரமத்திற்குள்ளாகி, குறைந்த சம்பளத்திலே அவர்கள் வேலை பார்க்கின்ற ஓர் இக்கட்டான நிலையிலே வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நமது கருணை மிகுந்த இந்த அரசு-மற்ற துறைகளும் நட்டத்திலேதான் இயங்கிக் கொண்டிருக்கின்றன; அவர்களுக்கெல்லாம் நாம் bonus வழங்கிக் கொண்டிருக்கிறோம்; அதேபோல், இந்தத் துறையிலே இருக்கிறவர்களுக்கும் அரசு கருணையுள்ளத்தோடு—அவர்கள் கோருகின்ற bonus தொகையை வழங்கி, அவர்கள் வேலைக்குத் திரும்ப உதவி புரிந்து, அதன் மூலமாக பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள், 20 சதவிகித bonus கேட்டும், சம்பள உயர்வு, பணி நிரந்தரம் போன்ற பல்வேறுவிதமான கோரிக்கைகளை வற்புறுத்தியும் நேற்றுகூட சென்னையிலே ஊர்வலமாகச் சென்று, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் தமிழக அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காகப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகள் என்பது, தொழிலாளர்களின் பிரச்சினைகள் என்று மட்டுமல்ல[illegible] கூட்டுறவு

மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் செயல்பட முடியாமல் இருப்பதன் காரணமாக—கரும்பைப் பயிரிடுகின்ற விவசாயப் பெருமக்களின் நலனும் இதோடு சேர்ந்திருக்கின்ற காரணத்தினால், அவர்களும் பாதிக்கின்ற சூழ்நிலை ஏற்படும். இவற்றையெல்லாம் தமிழக அரசு கருத்திலே எடுத்துக்கொண்டு, அவர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று எம்.ஜி.ஆர்.—அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வற்புறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

*முற்பகல் 9-50*

**Thiru B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, I would like to call the attention of the Hon. Chief Minister to the issue concerning 18 Sugar Mills which have been on strike for the past one month. Sugarcane growers have been affected because sugarcane have not been cut for a long time. The workers have been demanding about 20% bonus and an announcement on new wages. I request the Hon. Chief Minister to set an example for other factories by solving this issue amicably. This issue should have been settled much earlier and it should not have been allowed to come to this extent. They have gone on strike yesterday and were arrested and released. In the interest and in the welfare of the workers, this issue should have been discussed earlier with the associations. If it is not possible to grant 20% bonus because of loss etc., by discussing with them, you can reduce the percentage to some extent and grant them bonus. Why should the workers come to streets and demonstrate for this ? I request the Hon. Chief Minister to see that the issue is settled early in the interest of the workers as well as the cane-growers. Thank you very much, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணியாற்றும் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தங்களுக்கு கடந்த 7 ஆண்டுக்காலமாக வழங்கப்பட்ட 20% bonus-ஐ வழங்கக் கோரியும், கருணைத் தொகையைக் குறைக்க வேண்டாமென்றும், சர்க்கரைத் துறை ஆணையர் அவர்களிடம்தான் பேச்சுவார்த்தை



நடத்துவோம் என்றும் கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 21 நாட்களாகப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். எனவே, அவர்களுடைய கோரிக்கைகள் நியாயமான கோரிக்கைகள் என்ற அடிப்படையிலும், பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகளிலே பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் சர்க்கரைத் துறை ஆணையரிடம்தான் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று சொல்லுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் இருக்கிறது என்ற காரணத்தாலும் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று தமிழக அரசு அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உடனடியாக முன்வர வேண்டும் என்று புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது குறித்து நல்லெண்ணத்தோடு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. கே. சுப்பராயன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ஜி.கே. மணி, திரு. லா. சந்தானம், திரு. பி. வெங்கடசாமி, டாக்டர் க. கிருஷ்ணசாமி போன்றவர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சினுடைய மொத்தமான சாராம்சம் என்னவென்று கேட்டால், SIMA-வோடு பேசக்கூடாது, SISMA-வோடு பேசக்கூடாது, இதுபோன்ற அமைப்புக்களோடு பேச்சுவார்த்தை நடத்துவது தேவையற்றது; சர்க்கரைத் துறை ஆணையர்தான் இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். 20% bonus உடன் கருணைத் தொகை 500 ரூபாயும் தர வேண்டும், அதை இந்த அரசு வழங்க வேண்டும் என்று இரண்டாவதாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள் அரசின் சார்பாக நான் இங்கே சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன். அதிலே நீங்கள் கேட்கக்கூடிய கேள்விகளுக்கெல்லாம் நிச்சயம பதில் இருக்கும் என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே 16 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் 3 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் இருக்கின்றன. இந்த சர்க்கரை ஆலைகள் 1993, 1994 ஆம் ஆண்டுகள் தவிர, 1991, 1992 வரையிலும் மிகுந்த

[திரு. அ. இரகுமான்கான்] [1998 நவம்பர் 26

நட்டத்தில்தான் இயங்கி வந்தன. 31-3-1998 வரை இந்த ஆலைகள் 364 கோடி ரூபாய் நட்டம் அடைந்துள்ளன. அதற்குக் காரணம் அரசுதான் என்று இங்கே தாமரைக்கனி போன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அது உண்மை அல்ல. இந்த ஆலைகள் நலிவடைந்ததற்குச் சில பொதுவான காரணங்களும் இருக்கின்றன. உற்பத்திச் செலவிற்குக் கட்டுப்படியாகாத சர்க்கரை விற்பனை விலை, வரி ஏதுமில்லாத, கட்டுப்பாடு இல்லாத சர்க்கரை இறக்குமதி, செயற்கை சாராய இறக்குமதி காரணமாக Molasses விலை வீழ்ச்சி, வெப்ப நிலை மாறுபாடு குறைந்துபோதல், சர்க்கரைக் கட்டுமானம், 1994-95, 1995-96 ஆம் ஆண்டுகளில் பருவம் கடந்து நடத்தப்பட்ட அரைவையின் பின்விளைவு, தனியார் ஆலைகளைவிட இரண்டு மடங்கிற்கு மேல் அதிகமான ஊழியர்கள் ஊதியச் செலவு ஆகிய பல்வேறு காரணங்களால் சர்க்கரை ஆலைகள் நலிந்த நிலைக்குத் தள்ளப்பட்டன.

முற்பகல் 9-55

அதுமட்டுமல்ல. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள், இலாப நட்ட அடிப்படை மற்றும் தொழில்நுட்ப செயல்பாட்டின் அடிப்படை ஆகியவைகளில் எது அதிகபட்சமாக bonus பெறத் தகுதியுள்ளதோ அதன் அடிப்படையில் bonus வழங்கும் முறையைக் கடைப்பிடித்து வருகின்றன. எனவே, இந்த ஆலைகளிலே பணிபுரிந்து வருகின்றவர்களுக்கு இந்த அடிப்படையில்தான் bonus தரக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது.

அதுமட்டுமல்ல. இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே, ஆலைகள் விவசாயிகளிடமிருந்து வாங்கிய கரும்பிற்கு விலை கொடுக்க முடியாத ஒரு நிலைமை இருந்தது. அந்தத் தொகையையும் அரசாங்கமே செலுத்தியிருக்கிறது என்பதையும் இங்கே நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. 10 ஆலைகளுக்கு மேல் புனர் நிர்மாணம் செய்ய வேண்டிய அவசியம் இருந்ததால் அவைகளுக்காகவும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காரணங்களினாலேதான் இந்த ஆலைகளுக்கு நட்டம் ஏற்பட்டிருக்கின்றது. இதன் அடிப்படையிலேதான் இப்போது கொடுக்கவேண்டிய Bonus தொகையை அந்த அளவுக்குக் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.



1998 நவம்பர் 26] [திரு. அ. இரகுமான்கான்]

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, விவசாயிகள் நீண்டகாலமாகப் போராடிவந்த நேரத்திலே 76.4 கோடி ரூபாய் நிதியுதவியை அரசாங்கம் வழங்கியிருக்கிறது. ஏறத்தாழ 364 கோடி ரூபாய்க்கு மேலே நட்டம் ஏற்பட்டிருக்கிறது. பொருளாதார ரீதியாக ஆலைகள் நலிவடைந்து கிடக்கின்ற சூழ்நிலையிலே இலாப நட்டக் கணக்குகளை அரசு பார்க்கவில்லை. கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் நாம் செயல்பட்டு வருகின்றோம். ஆனாலும், ஒன்றை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். சட்டப்படியான, குறைந்த அளவு bonus-ஐத்தான் கொடுக்க வேண்டுமென்று நிறுவனங்கள் வலியுறுத்தியபோதிலும்கூட, மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய நம்முடைய முதல்வர் அவர்கள் கருணையுள்ளத்தோடு — ஏறத்தாழ 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள், நிரந்தரத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்; தற்காலிகத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் — இதிலே வேறுபாடெல்லாம் பார்க்காமல், அத்தனை தொழிலாளர்களுக்கும், கருணைத் தொகையாக நல்லெண்ணத் தொகையாக 1000 ரூபாயை, இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியிலேயும் வழங்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இவர்கள் 20 சதவிகித bonus, 500 ரூபாய் கருணைத் தொகை கேட்ட நேரத்திலே, 8.33 சதவிகித bonus, 8.33 முதல் 14.95 சதவிகித bonus என்று இரண்டு அடிப்படைகளில் — ஒரு அடிப்படை, இலாப நட்ட அடிப்படை; இன்னொரு அடிப்படை, தொழில்நுட்பச் செயல்பாட்டின் அடிப்படை. இதில் எது அதிகபட்ச bonus பெறத் தகுதியுள்ளதோ அதன் அடிப்படையிலே bonus வழங்கப்பட்டிருக்கிறது. இலாப நட்ட அடிப்படையில் 1997-98-க்கு 7 ஆலைப் பணியாளர்களுக்கு 8.33 சதவிகித bonus தரப்பட்டிருக்கிறது. 11 ஆலைப் பணியாளர்களுக்கு தொழில்நுட்பச் செயல்பாட்டின் அடிப்படையில் 8.33 முதல் 14.95 சதவிகிதம் வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால், நான் சொல்ல விரும்புவது, சர்க்கரை ஆலைகளில் நட்டம் ஏற்பட்டதற்கு அரசு காரணமல்ல என்றாலும், சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடைய நிலையை எண்ணிப்பார்த்துத்தான் இன்றைக்கு இந்தத் தொகையை வழங்கியிருக்கிறார்கள்.

தொழிற்சங்கத்தைச் சேர்ந்த சிலர்கூடச் சொன்னார்கள். வேறுபாடு இல்லாமல், நிரந்தரத் தொழிலாளர்கள், தற்காலிகத் தொழிலாளர்கள் இவர்கள் எல்லோருக்கும் 1000 ரூபாய் கொடுத்திருக்கிறாரே, அதுகூட

வேறுபாடு இல்லையா என்று கேட்டார்கள். முதல்வர் அவர்கள் கருணையுள்ளத்தோடு அதை வழங்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-00

அதுமட்டுமல்லாமல், இன்னொன்றையும் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெறவில்லை என்று சில உறுப்பினர்களும், போராடும் அளவுக்கு இது தேவைதானா என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்களும் கேட்டார்கள். அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். 9-10-1998, 26-10-1998 மற்றும் 10-11-1998 ஆகிய நாட்களில் Labour Commissioner மற்றும் J.C.L. ஆகியோர் முன்னிலையிலே தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. நம்முடைய முதலவர் அவர்களின் கட்டளைக்கு, உத்தரவிற்கு இணங்க—முதல்வர் அவர்கள் என்னைப் பார்த்து இதுகுறித்துப் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று உத்தரவிட்டார்கள்—எல்லோரையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினேன். சர்க்கரைத் துறை ஆணையர், என்னுடைய துறை ஆணையர் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் அத்தனை பேரையும் அழைத்து நான் 4-11-1998 அன்று பேச்சுவார்த்தை நடத்தினேன். அவர்கள் சொல்கிற இன்னொரு கோரிக்கை—'SISMA', 'SISMA' என்று சொல்கிறார்கள். எல்லா உறுப்பினர்களும் அதை வலியுறுத்திப் பேசினார்கள். South India Mills Association என்ற ஓர் அமைப்பு. அதாவது 'SIMA', இது தென்னிந்திய மில்களின் ஒரு கூட்டமைப்பு. 'SISMA' என்பது South India Sugar Mills Association, சர்க்கரை ஆலை அதிபர்களின் ஒரு கூட்டமைப்பு. தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் ஒரு சம்மேளனம். இது ஏதோ வெறும் முதலாளிகளின் கூட்டமைப்பு மாதிரி ஒரு தவறான அபிப்பிராயம் நம்முடைய உறுப்பினர்களிடம் இருக்கிறது. தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்களுக்குச் சரியாகச் சொல்லவில்லையோ என்று நான் கருதுகிறேன். காரணம் தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சம்மேளனம் என்று சொல்கிற அமைப்பில் தனியார் துறையும் இருக்கிறது, கூட்டுறவுத் துறையும் இருக்கிறது, பொதுத் துறையும் இருக்கிறது. ஆக, இதில் அத்தனை பேரும் இருக்கிறார்கள்.

சம்பள உயர்வு குறித்து என்ன பேசினாலும் இந்த மூன்று துறைகளையும் கட்டுப்படுத்தும். தனியார் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் சம்பளம் நிர்ணயம் ஒன்று, கூட்டுறவுத் துறை சர்க்கரை



ஆலைத் தொழிலாளர்கள் சம்பளம் நிர்ணயம் வேறு. பொதுத் துறையில் உள்ள சர்க்கரை ஆலைகளில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்கு தனியாக ஒரு சம்பளம் என்று disparity, வேறுபாடு இருக்க முடியாது. சம்பளம் நிர்ணயம் என்பது மூன்று அமைப்புகளைச் சார்ந்தவர்களுக்கும்தான். ஆகையினால் 'SISMA'-வோடு பேசுவதிலே என்ன தவறு? இதுவரைக்கும் 'SISMA'-வோடுதான் பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் 'SISMA'-வோடு 8-6-1998 அன்று பேசப்பட்டிருக்கிறது; 22-8-1998 அன்று பேசப்பட்டிருக்கிறது; 28-8-1998 அன்று பேசப்பட்டிருக்கிறது. இப்போது 28-11-1998 அன்று SISMA-வோடு பேசுவதற்கு நம்முடைய சங்கத் தலைவர்களை ஆணையர் அழைத்திருக்கிறார். நானும், நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தச் சொல்லியிருக்கிறேன். இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். உங்களுக்கெல்லாம் தெரியும். பஞ்சாலைத் தொழிலாளர்களின் bonus பிரச்சினை சம்பந்தமாக 'SIMA'-வோடு பேசவில்லையா? திரு. சுப்பராயன் அவர்களைக் கேட்கிறேன். A.I.T.U.C. சங்கம், இதுமாதிரி தென்னாட்டில் தொழிலாளர்களின் அமைப்பாக அல்லாமல், ஆலை முதலாளிகளின் அமைப்பாக இருக்கக்கூடிய 'SIMA'வோடு நீங்கள் கோவையிலே பேசவில்லையா? C.I.T.U.-வைக் கேட்கிறேன். நீங்கள் பேசவில்லையா? எல்லோரும் பேசியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, 'SISMA'-வோடு மட்டும் பேச்சுவார்த்தை நடத்தமாட்டோம் என்று சொல்வதிலே எந்தவிதமான அர்த்தமும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னறிவிப்பின்றி, திடீரென்று வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது சட்டவிரோதமானது. ஆனாலும், நம்முடைய முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு இன்றைக்கு இதை அறிவித்திருக்கிறார்கள். அரசியல் நோக்கத்தோடு சிலர் இதைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பெரம்பலூர், அமராவதி, நேஷனல் மற்றும் ஆம்பூர் ஆலைப் பணியாளர்கள் bonus தொகையைப் பெற்றுக் கொண்டார்கள். திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 4 பணியாளர்கள் bonus பெற்றுக் கொண்டார்கள். அமராவதி, ஆம்பூர், சேலம் ஆகிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்கள் போராட்டத்தில் கலந்துகொள்ளாமல் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள். அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் 22-11-1998 வரை பணிபுரிந்துவிட்டு 23-11-1998 முதல் வேலை நிறுத்தத்தில்

ஈடுபட்டுள்ளனர். நேஷனல் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைப் பணியாளர்கள் 17-11-1998 முதல் பணியாற்றுகிறார்கள். மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைப் பணியாளர்கள் 20-11-1998 முதல் பணிக்குத் திரும்பியுள்ளார்கள். நம்முடைய ஜி.கே. மணி அவர்கள், கரும்பைப் பயிரிடுபவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறினார்கள். அதற்குக் காரணம் அரசாங்கம் அல்ல. தொழிலாளர்கள் அரசினுடைய நியாயமான இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொண்டு, கலைஞர் அவர்கள் கருணை உள்ளத்தோடு தந்திருக்கின்ற, நல்லெண்ணத் தொகையான 1,000 ரூபாயைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். bonus தர வேண்டுமென்ற நல்ல நோக்கம் அதிகமாக இருந்தாலும், நட்டத்தின் காரணமாகக் கொடுக்க முடியவில்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலே 1998-99 ஆம் ஆண்டுக்கான கரும்பு அரைவை 16-11-1998-லே தொடங்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த வேலைநிறுத்தத்தை, போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருகிற நோக்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. முதல்வர் அவர்கள் தலையிட்டார்கள். அவர்கள் உத்தரவின்பேரில்தான் இந்தத் தொகை வழங்கப்படுகிறது.

*முற்பகல் 10-05*

அதுமட்டுமல்ல. இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். Wage Revision என்று சொல்வார்கள். சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடைய ஊதிய விகிதம் குறித்த ஒப்பந்தம் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை போடப்படுகிறது. 1993 ஆம் ஆண்டு, 16-3-1993-ல் பேச்சு வார்த்தை தொடங்கப்பட்டு சுமார் 7 மாதங்கள் பலமுறை பேச்சுவார்த்தை நடைபெற்று முடிவாக ஒப்பந்தம் 29-4-1994 அன்று போடப்பட்டது. 31-3-1998 அன்றோடு இந்த Wage Revision ஒப்பந்தம் முடிந்துவிட்டது. 1-4-1998 முதல் திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதம் குறித்த கோரிக்கை பேசப்பட்டு வருகிறது. பலமுறை இந்தப் பேச்சுவாாத்தை நடைபெற்று வருகிறது. பேசாமல் இல்லை. இவ்வளவு காலதாமதம் ஏன் என்று கேட்டீர்கள். ஊதிய விகிதம் குறித்த ஓர் உடன்பாடு, 'SIMA'-வோடு பேசிக் கொண்டிருக்கும்போது வர இயலவில்லை. அதுதான் காரணமே தவிர, பேச்சுவார்த்தை நடைபெறாமல் இல்லை. இன்னொன்றிற்காகவும் இந்த அரசை நீங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். அதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, தமிழக அரசு 1997-98



அரைவைப் பருவத்திற்கு. டன் ஒன்றுக்கு 8.5 சதவிகித சர்க்கரைக் கட்டுமானத்திற்கு ரூ. 660 விலை நிர்ணயம் செய்திருக்கிறது. ஆனால், அதேநேரத்தில் மத்திய அரசு ரூ. 484.50 தான் நிர்ணயித்தது. ஒரு டன்னுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலையைக் காட்டிலும் ரூ. 175.50-ஐ நம்முடைய தமிழக அரசு, தி.மு.க. அரசு கூடுதலாகத் தருகிறது. இவற்றையெல்லாம் நீங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். ஆகையினாலே, நான் இந்தச் சபையின் வாயிலாக, தமிழகத்தில் சிலருடைய தூண்டுதலின் காரணமாக போராட்டம் நடத்திக் கொண்டிருப்பவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன், இது சர்க்கரை உற்பத்தி செய்ய வேண்டிய பருவம்; ஆலையிலே கரும்பை அரைக்க வேண்டிய பருவம். ஆகையினால், கலைஞர் அவர்களால் அன்பு தாயுள்ளத்தோடு கொடுத்த தொகையை ஏற்றுக்கொண்டு இது நியாயம் என்று கருதி, ஆலைக்கு வராதவர்கள் வர வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தப் பிரச்சினையும் கிடையாது. நீங்கள் முன்மாதிரி கொண்டு வராதீர்கள்.

### (ஆ) இந்துக் கோவில்களில் வடமொழியில் மட்டும் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருப்பது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாட்டில் இந்துக் கோவில்களில் வடமொழியில் மட்டும் அர்ச்சனை செய்யப்பட வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருப்பது குறித்து திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், திரு. சி. ஞானசேகரன், திரு. சி. வேலாயுதன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்புக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். மிகச் சுருக்கமாகப் பேசும்படி அழைக்கின்றேன். திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று ஒரு சாராரும், ஆகம விதிப்படி சமஸ்கிருதத்திலே அர்ச்சனை செய்ய வேண்டுமென்று நீதிமன்றம்வரை சென்று ஒரு சாராரும் இப்படி தமிழகத்திலே கடவுளை வணங்குவதைக்கூட எப்படி எப்படியோ திசைதிருப்பி, இப்போது ஒரு பெரிய குழப்பத்தை உருவாக்கிக் கொண்டிருப்பது வருத்தத்தை

அளிக்கிறது. தமிழ்நாட்டில் தமிழில் வழிபட வேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், நம்முடைய துறையினுடைய அமைச்சர் அவர்கள் ஓர் இடத்திலே சொல்கிறபோது, "தமிழ் தெரியாத கடவுள் எங்களுக்கு வேண்டாம்" என்றுகூட பேசியதாகச் செய்தி வந்து, அது பலபேருடைய உள்ளத்தையே புண்படுத்தியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் பலபேர் நாத்திகர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பேரவைத் தலைவர்போல் சிலபேர் ஆத்திகர்களாக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னை எதற்கு வம்புக்கு இழுக்கிறீர்கள்? நான் நூற்றுக்கு நூறு அமைச்சர் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். நான் ஆத்திகன்.

**திரு. சி. ஞானசேகரன்:** நம்முடைய பேரவைத் தலைவர் போன்று சிலபேர் கடவுள் நம்பிக்கை உடையவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் பலபேர் வாக்களித்திருக்கிறார்கள். இதிலே கடவுள் நமபிக்கையில்லாத...

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நல்ல கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் தமிழிலேதான் வழிபடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** நல்ல கடவுள் நம்பிக்கை உடையவர்கள் தமிழில் வழிபட வேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. கடவுளை வழிபடக்கூடியவர்கள் சிலபேர் சமஸ்கிருதத்திலே வழிபட விரும்புவார்கள். காரணம் அவர்களுக்குப் பிடித்த மொழி. எல்லாவற்றையும் கடந்தவர்தான் கடவுளாக இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால், இதிலே மொழி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னைக் குறிப்பிட்டுப் பேசியதால் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். என்னைக் காட்டிலும் என் தகப்பனார் பெரிய ஆத்திகர். அவருடைய 80-வது ஆண்டு விழாவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வந்தார்கள். அந்த விழா மலரைப் பார்த்துவிட்டு 1928-லேயே என் தகப்பனார் தமிழ் தெரியாத கடவுள் எங்களுக்குத் தேவையில்லை என்று பேசியதைச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



முற்பகல் 10-10

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ண பரமாத்மாவுக்கு தமிழ் தெரியாது. அவரை நாங்கள் எப்படி வழிபடுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி நீங்கள் நினைக்கிறீர்கள்.

**திரு. ச. அழகிரி:** இல்லை, நிச்சயமாகத் தெரியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆண்டவனுக்கு எல்லா மொழிகளும் தெரியும். நீங்கள் ஆண்டவனை இழிவுபடுத்தாதீர்கள். ஆண்டவனுக்கு எல்லா மொழிகளும் தெரியும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** கடவுளுக்கு ஊமையினுடைய பாஷைகூடத் தெரிய வேண்டும். இல்லாவிட்டால் அவர் கடவுள் ஸ்தானத்தைக் காலி செய்ய வேண்டும். (மேசையைக் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** எல்லாவற்றையும் கடந்திருக்கின்ற காரணத்தினால்தான் கடவுள் என்ற பெயரையே வைத்திருக்கிறோம். எனவே, மொழி இதற்கு ஓர் இடையூறாக இருந்துவிடக்கூடாது. தமிழ்நாட்டில் தமிழ் இருக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. சமஸ்கிருத மொழியில் வழிபாடு செய்து கொள்பவர்களாக இருந்தால் செய்துகொள்ளட்டும். ஆனால், நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இதனைக்கூட ஒரு பிரச்சினையாக்கி ஆன்மீகவாதிகளுடைய உள்ளத்தைப் புண்படுத்திட வேண்டாம். ஆகவே, மொழி ஒரு தடையாக இருக்க வேண்டாம். சிலபேர் நீதிமன்றத்தில் சமஸ்கிருதத்தில்தான் அர்ச்சனை வேண்டும் என்று கேட்கிறார்கள்; வேறு சிலபேர் தமிழ்மொழியில்தான் அர்ச்சனை வேண்டுமென்று கேட்கிறார்கள். தமிழில் வழிபடுவதாக இருந்தாலும் மற்ற மொழியில் அர்ச்சனை வேண்டாம் என்பதைச் சொல்ல வேண்டாம் என்று கேட்டு இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வினை சுமுகமான முறையிலே காண அமைச்சர் அவர்களும், அரசும் முன் வர வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஞானசேகரன் பேசும்போது மற்ற மொழியில் வேண்டாம் என்று சொல்வதாகக் குறிப்பிட்டார். அப்படி, எப்பொழுது யாரால்

சொல்லப்பட்டிருக்கிறது? தமிழில் வேண்டும் என்று சொல்கிறோம். தமிழில் வேண்டாம் என்று சொல்கின்ற கூற்றைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். நம்முடைய தலைவர் மூப்பனார்கூட அதை எதிர்த்திருக்கிறார். ஒருவேளை ஞானசேகரன் அதைப் படித்தாரோ, இல்லையோ என்று தெரியவில்லை. தமிழ் அர்ச்சனைபற்றி வந்த பிரச்சினையில் தமிழில் இருப்பதை எதிர்ப்பது தவறு என்றுதான் அவரும் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், ஞானசேகரன் சொல்வது விந்தையாக இருக்கிறது. வேறு மொழியில் ஆண்டவனை வணங்கக்கூடாது என்று நாங்கள் யாரும் சொல்லவேயில்லை.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அதைப் பேசி இருக்கிறார்கள். தமிழ் தெரியாத கடவுளே வேண்டாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதைத்தான் அவர் சொல்கிறார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நானும் அதைச் சொல்கிறேன். ஏனென்றால், கடவுளுக்கு எல்லா மொழிகளும் தெரிந்திருக்க வேண்டும். தமிழ் தெரியாது என்று யாராவது வழக்குமன்றத்திற்குச் சென்றால் அப்படி தமிழ் தெரியாத கடவுள் வேண்டாம் என்று சொல்வதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் உரிமை இருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் தயவுசெய்து இந்த விவாதத்திலே ஈடுபடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தந்தை பெரியார் அவர்கள்கூட தமிழில் அர்ச்சனை வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கடவுள் நம்பிக்கை உண்டா, இல்லையா என்பது கொள்கை. கோயில்களுக்குள்ளே தமிழுக்கு இடம் வேண்டும் என்று சொல்வது உரிமை.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானம் கொடுக்காதவர்கள் எல்லாம் ஏன் ஊடே எழுந்திருக்கிறீர்கள்?

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடவுள் இல்லை என்று சொல்கிறவர்கள் தந்தை பெரியார் முதற்கொண்டு மற்ற தலைவர்களை விமர்சனம் செய்கிறார்கள். ஆனால்,



அவர்களுடைய குடும்பத்தில் உள்ளவர்கள் கோயிலுக்கு போய்க் கொண்டு, அர்ச்சனை செய்துகொண்டே இருக்கிறார்கள். இது என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் அநியாயம் எதுவுமில்லை. இது தேவையில்லாத பிரச்சினை. இது அவரவர் தனிப்பட்ட பிரச்சினை. நீங்கள் கேட்டது தேவையில்லாத கேள்வி. திரு. சி. வேலாயுதன்.

**திரு. ச. அழகிரி:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனை Point of Order-ல் நீங்கள் பேசுவீர்கள்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகக் கருத்தைச் சொல்லிவிட்டார்கள். தமிழுடன் மற்ற மொழிகளிலும் அர்ச்சனை செய்வதற்கு அரசுக்கு ஆட்சேபனை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். பிறகு என்ன Point of Order? உட்காருங்கள். திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா கட்சியைப் பொறுத்தவரையில்

"செப்பு மொழி பதினெட்டு உடையாளாயினும்
சிந்தை ஒன்றுடையாள் எங்கள் தாய்"

என்று சொல்வது போன்று எத்தனை மொழிகள் இருந்தாலும் அத்தனை மொழிகளும் இறைவனுக்குத் தெரியும். எந்த ஒரு மொழியும் தெரியாது என்று சொல்ல முடியாது. அதேபோன்றுதான் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று சொல்வதும். "ஏகம் சன்தா விப்ரா பகுதா வதந்தி" - உண்மை ஒன்று, ஞானிகள் பலவனவாகக் காண்கிறார்கள்." இந்த அடிப்படையில் தமிழில் அர்ச்சனை செய்வதை பாரதிய ஜனதா கட்சி மட்டற்ற மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறது. காரணம், நம்முடைய தாய்மொழி தமிழ் மொழி. அந்த அடிப்படையில் தமிழில், நமக்குத் தெரிந்த மொழியில் இறைவனை அணுகி அதன்மூலம் நம்முடைய பிரச்சினைகள் நீங்குவதற்கும், மன நிம்மதி அடைவதற்கும், அது ஒரு வாய்ப்பாக அமையும். எனினும், மற்ற மொழிகளில் அர்ச்சனை செய்யக்கூடிய உரிமையை யாருக்கும் மறுக்கக்கூடாது. அப்படி மறுக்கவில்லை என்றுகூட சொல்லப்பட்டிருப்பதற்கு, மட்டற்ற மகிழ்ச்சி. எனவே, இறைவனை அவரவர் விருப்பப்படி அவரவர் மொழியில் வணங்கக்கூடிய உரிமை, அந்த வாய்ப்பு எல்லோருக்கும் தங்குதடையின்றி கிடைப்பதற்கு நம்முடைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மட்டும் கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தமிழகத்திலே தமிழில் வழிபாடு என்கின்ற இந்த உரிமைப் பிரச்சினையானது மிக இன்றியமையாப் பிரச்சினையாக இருக்கிற காரணத்தினாலே நீங்கள் எனக்குக் கொஞ்சம் நேரம் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், தமிழிலே வழிபாட்டை விரும்புகின்ற மிகச் சிறந்த பக்திமான் நீங்கள். உங்களுடைய தந்தையாரும் அத்தகைய வழியிலே உங்களை வளர்த்து எடுத்திருக்கின்றார். ஆகவே, இந்தக் கருத்தை இந்த மாமன்றத்திலே வலியுறுத்துவதன் மூலமாக, தமிழகத்திலே எழுந்துள்ள இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படும் என்ற வகையிலே நான் இதனை என் கருத்தாக இங்கே கூற விரும்புகிறேன். நான் ஏற்கெனவே சட்ட மன்றத்திலே பேசியிருக்கிறேன். தமிழகத்தினுடைய கோயில்களிலே 'தமிழிலும அர்ச்சனை செய்யப்படும்' என்ற வாசகங்கள் போட்டிருப்பது தமிழனுடைய இனமான உணர்வை, மொழி உணர்வை பாதிப்பதாக இருக்கிறது. இது ஏதோ கொச்சைப்படுத்துவதுபோல, மனைவியிடம் கணவனும் உடல் உறவு கொள்ளலாம் என்று சொன்னால், அது எவ்வளவு கேவலமோ, அதைவிடக் கேவலமாக இருக்கிறது என்று நான் வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். இதை அரசு கவனத்திலே கொண்டுதான், இதை மாற்றி வட மொழியில் அர்ச்சனை செய்யப்படும், தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்று இரண்டிற்கும் பொருத்தமாக அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். இதிலே பிரச்சினை எங்கே எழுந்தது என்று சொன்னால், ஆகமங்கள் என்பது வட மொழியிலேதான் இருக்கின்றன. ஆண்டவனுக்கு உகந்த மொழி வட மொழிதான் என்று ஸ்ரீகுமார் சர்மா என்று சொல்லக்கூடிய ஒருவர் உயர்நீதி மன்றத்திலே வழக்கு தொடுத்ததனுடைய விளைவாகத்தான் இந்தப் பிரச்சினை இன்றைக்கு தமிழகத்திலே தமிழ் உணர்வு உள்ளவர்களாலே, தமிழ்ப் பற்றாளர்களாலே எதிர்கொள்ளப்பட்டு, பிரச்சினையாக்கப்பட்டது. இது பிரச்சினை ஆக்கப்பட்டதற்குக் காரணம் இன்றைய தமிழக அரசு அல்ல.

நான் இன்னொன்றையும் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்த - வட மொழி காலூன்றியது களப்பிரர்கள் காலத்திலே. அது வேரூன்றியது பிற்காலச் சோழர்களுடைய காலத்திலே.



அவர்கள்தான் வட மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து, கோயில்களிலே வட மொழியை அதிகமாக பரப்ப வைத்தவர்கள். உண்மையிலே நம்முடைய பண்பாட்டு நெறிமுறைகளை மாற்றியமைத்த ஒரு களங்கம் என்றுதான் வரலாற்று ஆசிரியர்கள் அதைக் கருதுகிறார்கள். அப்படி தமிழிலே வழிபடுகின்ற உரிமை மறுக்கப்பட்டு, வட மொழிக்கு ஆதிக்கம் தரப்பட்ட பிற்காலச் சோழர்கள் காலத்திலே ஏற்பட்ட களங்கத்தைத் துடைத்த பெருமை, இக்காலச் சோழராக இருக்கிற தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை எண்ணிப் பார்க்கின்ற ஒவ்வொரு தமிழனும் அவருக்கு நெஞ்சார்ந்த நன்றியை என்றென்றைக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறான். எனவே, இதிலே மொழி மாறுபாடு, கருத்து வேறுபாடு தமிழர்கள் கொள்ளத்தேவையில்லை என்பதற்காகச் சொல்கிறேன். தமிழில் வழிபாடு என்பது புராதனமானது, பழமையானது. வட மொழிதான் பழமையானது என்பது அல்ல என்பதற்காக நான் சொல்கிறேன். கம்ப இராமாயணத்திலே அகத்தியரைப் பற்றி கம்பர் பாடுகிறபொழுது, "என்றும் உள செந்தமிழ் இயம்பி இசைகொண்டான்" என்று பாடுகிறார். வட மொழியைவிட தமிழ் மொழி பழமையானது என்பதற்கு கம்பருடைய வாக்கைவிட வேறு வாக்குத் தேவையில்லை.

அதுமட்டுமல்ல. பழமையானது என்பது மட்டுமல்ல. சமஸ்கிருதத்திலே அர்ச்சனை செய்தால்தான் பக்தர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றுகூட ஒரு வாதத்தைச் சொல்கிறார்கள். நான் கேட்கிறேன். இன்றைக்குப் பெருவாரியான மக்கள் கிராமப்புறக் கோயில்களிலேதான் வழிபாடு நடத்துகிறார்கள். அவர்கள் என்ன அங்குள்ள அர்ச்சகர்களை எல்லாம் நீங்கள் வட மொழியில்தான் அர்ச்சனை செய்ய வேண்டும், தமிழிலே தேவாரம், திருவாசகம் எல்லாம் ஓதினால் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றா மறுத்துக் கொண்டிருக்கிறார்கள்? வட மொழியிலே வழிபாடு நடத்துவது என்பது வெகுமக்களுடைய உணர்விற்கு எதிரானது; நம்முடைய அரசியல் சட்டம் நமக்குத் தந்திருக்கிற அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது. தமிழகத்திலே உள்ள பெரும்பான்மையான மக்கள், இங்கிலாந்தில் போய் கேட்கவில்லை கேட்கவில்லை, அல்லது வட மாநிலங்களிலே போய் கேட்கவில்லை தமிழகத்திலேதான் கேட்கிறார்கள். நீங்கள்கூட இன்றைக்கும் போய்ப் பாருங்கள். தென் ஆப்ரிக்காவிலே நம்முடைய வள்ளலாருடைய அருட்பாவைத்தான் மிக அழகாக ஓதிக்கொண்டிருக்கிறார்கள், அங்குள்ள ஆலயங்களிலே. அதேபோல, நீங்கள் மலேசியாவிலே, இலங்கையிலே போய்ப் பாருங்கள். அங்கு தேவார, திருவாசகப் பாடல்களுக்குத்தான்

முக்கியத்துவம். ஆனால், தமிழன், பிற நாடுகளிலே இருக்கிற இடங்களிலே தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். ஆனால், தமிழ்நாட்டிலே உள்ள சிலபேர்கள்தான், சிலருடைய சுய இலாபத்திற்காக சொல்லக்கூடிய வாக்குக்கு அதிலே பக்திச் சாயம் பூசி, இது ஏதோ பக்திக்கு எதிரானது, பக்தர்களுக்கு எதிரானது என்பதைப்போல கருதிக் கொண்டு, இதிலே அரசியல் நடத்துகிறார்களே தவிர, உண்மையிலே தாய்த் திருநாட்டிலே தமிழிலே வழிபாடு நடத்துவதுதான் உகந்தது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்கிறேன். இறைவனைப் பற்றிப் பாடியவர்களே என்ன சொல்கிறார்கள்? சண்முகப் பெருமான் அவர்கள் உடுக்கையை வைத்துக்கொண்டு கதை சொல்கிறபோதுகூட, உடுக்கையினுடைய ஒரு பக்கத்திலே இருந்து வட மொழி பிறந்தது. இன்னொரு பக்கத்திலேயிருந்து தமிழ் பிறந்தது என்று சொல்கிறார்கள். அப்படியிருக்கும்போது, உடுக்கையினுடைய இன்னொரு பக்கத்திலேயிருந்து பிறந்த தமிழானது, கோயில்களிலே, கோயில் வழிபாட்டு மொழியாக இருக்கக்கூடாது என்று சொல்வது சமத்துவத்திற்கு எதிரான ஒரு செயல் அல்லவா? நான் வடமொழியைத் தாழ்த்திப் பேசவில்லை; வடமொழியைக் குறைத்துப் பேசவில்லை. வடமொழியும் புராதனமான மொழிதான். ஆனால், அதற்காக தமிழுடைய சமத்துவத்தைப் புறக்கணிப்பது எந்தவகையிலே நியாயம் என்பதைத்தான் நான் உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

அதேபோல, இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள், வடமொழி பக்திக்கு ஏற்புடையது என்று. சிவப்பிரகாச வள்ளலார் 'நான்மொழி மாலை'-யிலே சொல்லியிருக்கிறார். மாணிக்கவாசகரைப் பற்றிச் சொல்லும்போது - இதற்காக நீங்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது - 'வேதத்தில் ஓதினால் பக்தி வந்து சேர்வதில்லை; நெஞ்சம உருகுவதில்லை; மேன்மையைக் குறிப்பதில்லை', நான் சொல்லவில்லை. எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். ஆனால், நம்முடைய சிவப்பிரகாச சுவாமிகள் எப்பேர்ப்பட்ட பக்திமான் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் சொல்கிறார். "திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின், மேன்மை குறிப்பதோடு, நெஞ்சம் நெகிழ, இறை அன்பவர் ஆவார்" என்று கடவுளுக்கு உண்மையான அன்பராக ஆகவேண்டுமென்றால், "வேதம் ஓதினால் நெஞ்சத்தை உருக்காது,



உள்ளத்தை உருக்காது, அதுவும் தமிழிலே அந்தத் திருவாசகத்தை ஒருமுறை ஓதினால்தான் உருகி, இறைவனுடைய அன்பர் ஆவார்" என்று அவர் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். சொன்னவர் பக்திமான். அவர் ஒன்றும் கடவுள் எதிர்ப்பாளர் அல்ல. எனவே, தமிழிலே வழிபாடு நடத்தினால் முழுமை பெறாது என்றுகூடச் சொல்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் தமிழ்க்குடிமகன் அவர்கள் போற்றிப் பாடல்களையெல்லாம் வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே செத்தவனையே உயிர்பெற வைப்பதற்கு தமிழ் பயன்பட்டிருக்கிறது.

"தொண்டர் நாதனைத் தூதிடை
விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும்
என்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத்
திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ? மறுபுலச்
சொற்களோ சாற்றீர்"

என்ற பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலிலே பாடிய தமிழ்ப் பாடல்கள் செத்தவனையே உயிர்ப்பிப்பதற்குப் பயன்படும்போது உயிருள்ளவன் ஆண்டவனை வழிபடுவதற்குத் தமிழ் பயன்படாதா என்று நான் கேட்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தயவுசெய்து இதிலே அரசியலைப் புகுத்துவதாக யாரும் நினைக்க வேண்டாம் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இதை மசூதியிலே வற்புறுத்துவார்களா, தேவாலயத்திலே செய்வார்களா என்றெல்லாம்கூட பிரச்சினையாக கிளப்புகிறார்கள். நான் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வது, ஏதோ ஒரு பின்னணியைக் கொண்டிருப்பதாக இந்தக் கருத்து இருக்கிறது. நீங்கள் எந்த நாட்டிற்கு வேண்டுமானாலும் சென்று பார்த்தால், தேவாலயத்திலே அவனவனுடைய தாய்மொழியிலேதான் பைபிளைச் சொல்கிறான்; எந்த நாட்டிலே வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள். அவனவனுடைய மொழியிலேதான் கடவுளை வழிபடுகிறான். அது Spanish-ஆக இருந்தாலும் சரி, இத்தாலியாக இருந்தாலும் சரி. ஆனால், இங்குதான் இந்த

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1998 நவம்பர் 26

வழிபாட்டுமுறை சரியில்லை, இந்த வழிபாட்டுக்கு உரிமை இல்லை என்கிற அளவில இதிலே சிலருடைய தனிப்பட்ட கருத்து இருக்கிறது. ஒருமுறை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் ஆலயங்களில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதைக்கூட மனம் பொறாதவர்கள், ஆகமத்திலே இல்லை, அரசமைப்புச் சட்டத்திலே இல்லை என்றெல்லாம் சொல்லி-இப்பொழுது யார் இந்த வழக்கைத் தொடர்ந்து இருக்கிறாரோ, அதே சர்மாதான் அப்போது 1971-லே என்று நினைக்கிறேன்—அப்போது வழக்கு மன்றத்திற்குச் சென்று, அது உயர் நீதிமன்றத்திலே செல்லுபடியாகி, உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லுகின்றபோது அங்கே அடிபட்டுப்போய்விட்டது. ஆனாலும்கூட, நாம் அதை விட்டுவிட்டோம். இன்றைக்கும்கூட, அதாவது வைணவக் கோயில்களிலே நாலாயிர திவ்யப்பிரபந்தத்தை அவர்கள் கருவறை வரையிலே சென்று பாடுகிறார்கள். ஆனால், சைவக் கோயில்களிலேதான் கருவறைக்கு வெளியிலேயிருந்து தேவாரம், திருவாசகத்தைப் பாடுகிறார்கள். இதை அரசு உன்னிப்பாகக் கவனித்து அந்த மாற்றத்தைக்கூடச் செய்ய வேண்டும். கருவறையிலே ஓதக்கூடிய அந்த வாய்ப்பை வைணவக் கோயில்களிலே ஏற்றுக் கொள்கின்றபோது, நாலாயிர திவ்யப்பிரபந்தப் பாடல்களைப் பாடுகின்றபோது, ஏன் சைவக் கோயில்களிலே பாடல்களை ஏற்றக்கொள்ள முடியாது? ஆனால், அங்கே ஒருசில தடைகள் இருக்கின்றன. ஆக, இவற்றையெல்லாம் மாற்றியமைப்பதற்கு, தமிழ் உணர்வுள்ள ஓர் ஆட்சி முயல்கிறபோது, தமிழர்களாகப் பிறந்த நாம், ஒத்துழைப்பாக இல்லாவிட்டாலும் இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். வரலாற்றுக் கறையைத் துடைத்த தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களே, தமிழில் வழிபாடு என்பது மட்டுமல்ல, இன்னும் தமிழுக்குப் பொற்காலம் என்பதுகூட உங்களுடைய காலத்திலேதான் என்பதை நிரூபிக்கின்ற வகையிலே நீங்கள் ஒவ்வொன்றையும் படிப்படியாகச் செய்துகொண்டு வருகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தங்குதடையின்றி, கவலையின்றி தொடர்ந்து உங்கள் பணியினை நீங்கள் செய்ய வேண்டும் என்று கூறி

"தமிழர்க்குத் தொண்டுசெய்யும் தமிழனுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்ன வரிகளையே நம்முடைய கருத்து எதிரிகளுக்கு பதிலாகக் கூறி, இந்த வாய்ப்பையளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். வணக்கம்.



1998 நவம்பர் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களில் தமிழ் அர்ச்சனை செய்யப்படுதல் மற்றும் நிதி வசதி உள்ள திருக்கோயில்களில் ஆறுகால பூஜைகள் நடத்தப்படுதல் ஆகியவற்றை எதிர்த்து இந்து திருக்கோயில் பாதுகாப்புக் குழுவின் சார்பாக அதன் தலைவர் திரு. வி.எஸ். ஸ்ரீகுமார் என்பவரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு எண் 15790/1998-ல் ஒரு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

முற்பகல் 10-25

இந்த வழக்கின் நிலைதான் இன்றைக்கு இங்கே வாதிடுவதற்குப் பொருளாக அமைந்திருக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் தொடர்பாக ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் சில ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த ஆணைகளுக்குப் புறம்பாகவோ, அதேநேரத்தில் அறநிலையத் துறை வேறு எந்த வகையான முரணாகவோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உச்ச நீதிமன்றத்தின் நீதிப் பேராணை எண் 294 மற்றும் 400 முதல் 494/1974 ஆம் ஆண்டு வழக்குகளில் 'திருக்கோயில்களில் பூஜை மற்றும் இதர கைங்கரிய மொழிகளில் வட மொழி நடைமுறையில் இருந்து வருகிறது என்றும், வழிபடும் மக்களின் விருப்பத்திற்கேற்ப தேவாரம், திருவாசகம் போன்ற மதிப்பு உயர்ந்த தமிழ்ப் பாடல்களில் வழிபாடுகள் மேற்கொள்ளப்படலாம் என்றும் இந்த முறைகளில் தமிழ் அர்ச்சனையும் திருக்கோயில்களில் ஊக்குவிக்கப்பட வேண்டியது இன்றியமையாதது, என்றும் தெரிவித்து உள்ளதை இந்த அவைக்கு நான் படைக்க விரும்புகிறேன்.

இங்கே எல்லோரும் உடன்பாடான கருத்தைச் சொன்னாலும் ஏதோ ஒரு தவறான நிலையில் இந்த அரசு அணுகுகிறது என்பதைப்போன்ற ஒரு தோற்றத்தைச் சிலர் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் கடுமையாகப் பேசிவிட்டாரே என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் ஆதங்கப்பட்டார்கள். இந்த அறிவிப்பைக் கொடுத்தவுடனேயே முதலில் ஆதரவுக் குரல் கொடுத்தவர் மதிப்புமிகு மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள்தான் என்பதை நான் இந்த நேரத்திலே—மற்றவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை—நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. அவரே சொல்லியிருக்கிறார்.

இங்கே பக்கத்திலே Indian Express-ல் வெளிவந்த அந்தச் செய்திகளை நான் வெட்டி வைத்திருக்கிறேன். அவரே சொல்கிறார். இந்து பாதுகாப்புக் குழு என்ற பெயரால் தமிழ் அர்ச்சனைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு என்பது கண்டனத்திற்குரியது. இன்னும் சொல்லப்போனால், கடவுளுக்கு வட மொழி மட்டும்தான் தெரியும் என்று சொல்வது 'தமிழினுடைய வளமையையும், சிறப்பையும் அறியாதார் கூற்று' என்று அவர் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார். இன்னும் அனைத்துக் கட்சியினரும் இதற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். நீங்கள் நினைப்பீர்கள், எதற்காக அமைச்சர் இப்படிப் பேசியிருக்க வேண்டும், இது சரிதானா என்று. 10-6-1997-ல் நான் இந்தத் துறைக்குப் பொறுப்பு ஏற்றேன். நான் பேசியது 25-10-1998-ல். இதற்கிடையில், இந்த அரசு என்ன செய்தது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். இது ஏன் வந்தது என்பதை நான் இங்கே சொல்ல வேண்டும். நாங்கள் முறையாக 18-11-1997-ல் ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவிலே 15 அறிஞர்கள் இடம் பெற்றுள்ளனர். அனைவரும் முழுமையான தெய்வப் பற்று உடையவர்கள். அனைத்து சைவ, வைணவ இலக்கியங்களையும் துறைபோகக் கற்றவர்கள். இவர்கள் அனைவரையும் வைத்துத்தான் அந்தக் குழுவை அமைத்து அதற்குப் பிறகு முறையாகச் செயல்பட்டிருக்கிறோம். அதை நான் மறுபடியும் கொஞ்சம் விளக்குவேன். எனவே, அந்தக் குழுவினுடைய அறிக்கைக்கு எல்லாம் பின்னால்தான் முறைப்படி செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், வி.எஸ். ஸ்ரீகுமார் என்பவர் நீதிமன்றத்திலே என்ன சொல்லியிருக்கிறார் என்பதை இந்த அவை தெரிந்துகொள்ள வேண்டும்; இந்த நாடு தெரிந்துகொள்ள வேண்டும். சில இதழ்கள் என்ன செய்கின்றன என்று சொன்னால் வி.எஸ். ஸ்ரீகுமார் சொன்னதைப்பற்றி எந்தக் கவலையும் படவில்லை. இன்னும் சொல்லப்போனால் அப்படி ஒன்று சொல்லப்பட்டதாகவே கண்டுகொள்ளவேயில்லை. தங்கள் வசதிக்கு ஏற்ப அழகாக மறைத்திருக்கிறார்கள். அப்படி அழகாக மறைத்ததினால்தான், அவர்கள் இன்னும் மறைந்து நின்று அம்பு எய்ய நினைக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, அப்படி வசதியாக மறைத்த வாக்கியத்தைச் சொன்னால் ஒவ்வொரு தமிழனின் நெஞ்சமும் கொதிக்கும் என்று நான் கருதுகிறேன். அப்படிக் கொதிப்பதிலே தவறு இல்லை. அந்த வாக்கியத்தை நான் அப்படியே படிக்கிறேன். இது வழக்கு மன்றத்தில் அவர் கொடுத்த அந்த வாக்குமூலத்தின் பிரதி.

``The language Devanagiri is supposed to be the language to communicate with God or Gods" என்று இருக்கிறது. இதுதான் வாதத்திற்குரிய



பொருள். இதைச் சொல்லாத வரைக்கும் நான் கடுமையாக எதையும் சொல்லவில்லை. இதைச் சொன்னதனால்தான் சொல்ல நேர்ந்தது. நான் கேட்கிறேன், தமிழ் மொழி நம்முடைய கடவுளுக்கு உகந்தது அல்ல என்று சொல்லி தேவனாகிரி மொழி மட்டும்தான் உகந்தது என்று ஒருவர் வழக்குத் தொடருவாரானால் இதைப் பார்த்துக்கொண்டு ஒவ்வொரு தமிழ் மகனும் வாளா இருக்க வேண்டும் என்று இந்த அவை கருதுகிறதா, இந்த நாடு கருதுகிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி.

அதுமட்டுமல்ல. நான் அதற்காக மட்டும் எடுத்துவிடவில்லை. 25-10-1998 அன்று தினமணி இதழில் ஒரு செய்தி வந்திருக்கிறது. பி.வி. பக்தவத்சலம் என்பவர் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். தினமணி இதழில் வந்ததுதான். அதிலே அகோபில மடத்தினுடைய ஜீயர் அழகிய சிங்கர் அவர்கள், சொன்னதை அப்படியே சொல்லிவிடுகிறேன். 23-5-1998-லேயே அவர் ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். அது தினமணியில் 24-5-1998-ல் வந்திருக்கிறது.

*முற்பகல் 10-30*

இதிலே நான் இன்னொரு கருத்தையும் சொல்லப் போகிறேன். அதுபற்றி நான் இப்போது வாதிடப் போவதில்லை. அவையினுடைய கவனத்திற்காகச் சொல்கிறேன். அதிலே சொல்லியிருப்பது, அகோபில மடத்தினுடைய அந்த ஜீயருடைய பேட்டியிலே கொடுத்திருப்பது, இரண்டு செய்திகள். ஒன்று, 'தமிழகத்திள்ள கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது'. கவனிக்க வேண்டும். தமிழில் மட்டும் என்று போடவில்லை. தமிழில் அர்ச்சனை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. அடுத்தவரியில் இதே அகோபில மடம் ஜீயர். 'கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்வதை நாங்கள் எதிர்க்கிறோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு அடுத்த வரியில்—இப்போது நான் எடுத்துக் கொள்ளாதது, காலப்போக்கில் தேவைப்பட்டால் எடுத்துக்கொள்ள வேண்டியது. 'கோயில்களில் சமபந்தி போஜனம் நடத்தப்படுவது சரியல்ல; இதனால் கோயில்கள் களங்கப்படுத்தப்படுகின்றன' என்றும் சொல்லியிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டிவிட்டு அந்த வழக்கறிஞர், 'இதைக் கண்டு மானமுள்ள தமிழர்கள் கொதித்தெழுந்து அக்கினிக் குஞ்சை எந்தப் பொந்தில் வைப்பார்களோ' என்றும் கேட்டிருக்கிறார். இப்படிக் கேட்டதை நான் பார்த்தது காலையிலே 6.30 மணிக்கு. நானே அந்த அக்கினிக் குஞ்சைப் பொந்திலே வைக்க நேர்ந்தது. அன்றைக்கு நண்பகல் 12 மணிக்கு.

அதனால்தான் பேச்சைக் கடுமையாகச் சொன்னேன். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் சில விளக்கங்களையும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இதில் எப்போது பதற்றம் நேர்ந்தது, எப்போது பிரச்சினை எழுந்தது என்று சொன்னால் ஒருவர் வழக்கு தொடர்ந்து 'தேவனாகிரிதான் தெய்வத்திற்கு உகந்த மொழி என்று சொன்னதனாலும், அகோபில மடம் ஜீயர் போன்றவர்கள் இதுபோன்ற கருத்துக்களைத் தெரிவித்ததாலும்' எங்களுடைய கருத்தை நாங்கள் திருப்பிப் புலப்படுத்த வேண்டிய தேவை நேர்ந்தது என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

பல கருத்துக்கள்—அண்மையில்கூட ஓர் இதழில் திரு. சின்னக் குத்தூசி அவர்கள், 'இன்று தமிழ் அர்ச்சனை பற்றித் தமிழ்க்குடிமகன் கூறிய கருத்திற்காக அவர்மீது பாயும் சோ, அறிவு ஜீவிகளுக்கே உரிய சாமர்த்தியம்—தந்திரத்தோடு, தமிழ்க்குடிமகன் அப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதைப் பற்றி ஒரு வரிகூட எழுதாமல் இருட்டடிப்புச் செய்துவிட்டு, தமிழ்க்குடிமகன் ஏதோ சொல்லக்கூடாததைச் சொல்லிவிட்டதைப் போல அவர் அந்த வாசகப் பெருமக்கள் மத்தியில் ஒரு பிரமையை உருவாக்க முயல்கிறார்' என்று குற்றம் சாட்டியிருக்கிறார். எனவே, இப்படிப்பட்ட நிலையில்தான் இந்தச் சிக்கலை நாங்கள் எதிர்கொள்கிறோமே தவிர, நாங்களாகச் சிக்கலை உண்டாக்கவில்லை. அதுமட்டுமல்ல. இது, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் காலத்திலேயே, 1960ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்ட முயற்சி என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த முயற்சியைத் தொடங்கி வைத்த பெருமகனார் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்—அதுவும் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில். எனவே, 1960-ல் தமிழ் அர்ச்சனையைத் தொடங்கி வைத்த பெருமகன் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் 1971-ல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய காலத்தில் மீண்டும், நரசிம்மன் என்று சொல்லப்படுகிற இந்து சமய அறநிலையத் துறையினுடைய ஆணையாளர் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு பெருமளவுக்கு சிறப்புச் சேர்த்தார்கள். இந்தக் காலகட்டத்தில்தான் தவத்திரு குன்றக்குடி அடிகளார் போன்றவர்களும் தமிழ்நாட்டில் இருக்கிற பிற மடங்களின் ஆதின கர்த்தர்களும் இதற்கான முயற்சிகளை எடுத்து இதை ஒரு பெரிய இயக்கமாகவே 1960 ஆம் ஆண்டிலிருந்தே நடத்திக்கொண்டு வருகிறார்கள்



என்பதையும் நான் இன்று இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்தில் அதைக் கொண்டுவருவதற்குக் காரணம், இதை முறைப்படுத்த வேண்டும் என்பதுதான். அப்படி முறைப்படுத்துகிறபோது உங்கள் கவனத்திற்கு இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். எங்களுக்கு எதிர்க் கருத்து தெரிவிப்பவர்கள் அடிக்கடி சொல்வது என்னவென்றால், 'இது ஆகமங்களில் இல்லை, இது வேதத்தில் இல்லை' என்பதுதான். இன்னும் வெளிப்படையாகச் சொன்னால், என் கையிலே டாக்டர் எஸ். மகராசன் அவர்களுடைய அறிக்கை இருக்கிறது. 1982-லேயே இந்தக் குழுவை அமைத்தவரே மாண்புமிகு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். அவர்களுடைய காலத்தில் வந்த அறிக்கை. எனவே, எல்லோரும் இதில் முயன்றிருக்கிறார்கள், மறந்துவிடக் கூடாது. எல்லோருக்குமே இதில் உடன்பாடுதான். அவர் சொன்ன கருத்துக்களையே நான் பின்னால் சொல்கிறேன். எந்த ஆகமத்திலும் அர்ச்சனை மொழி எது என்று சொல்லப்படவே இல்லை. அதைத் தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டும். எனவே, ஆகமத்தைக் காட்டியும், வேதத்தைக் காட்டியும் திருப்பித் திருப்பி எங்களை மிரட்ட முற்படுவதை நாங்கள் எந்தக் காலத்திலேயும் ஏற்கமாட்டோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. அருள்மிகு அகோபில மடத்தினுடைய அந்த ஜீயர் சொல்வதைப் போலவே இப்போது அக்கினி கோத்திரம் இராமானுஜ தாத்தாச்சாரியார் அவர்களும் ஓர் இடத்திலே அருமையாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் இந்து இதழிலே வந்திருக்கிறது. அவரே சொல்லியிருக்கிறார், 'இந்தப் பிரச்சினையை அமைச்சர் எழுப்பியதிலே தவறு இல்லை. அமைச்சர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி. எனவே, இது மக்களின் குரல். இன்னும் சொல்லப்போனால், இப்போது இதற்கு ஒப்புக்கொள்ளக்கூடிய சூழ்நிலை கனிவாகியிருக்கிறது. இந்தக் கனிவாகியிருக்கிற சூழ்நிலையில் தமிழில் அர்ச்சனை செய்வதால் எந்தத் தவறும் இல்லை' என்று சொல்லிவிட்டு தலைப்பிலே போட்டிருக்கிறார்கள் 'Archanas in Tamil should not be opposed; இது எதிர்க்கப்படக்கூடியது அல்ல; ஏற்கப்படக் கூடியதுதான் என்று அக்கினி கோத்திரம் இராமானுஜ தாத்தாச்சாரியார் சொல்லியிருக்கிறார். இதைச் சொல்வதற்குக் காரணம், இவர்களும் அதை சிறப்பான முறையில் பயன்படுத்திக்கொண்டு எங்களுக்கு ஆதரவாகக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதற்காகத்தான்.

அதற்கடுத்து, இன்னொன்றையும் பார்க்க வேண்டும். இராமானுஜர் திருக்கோட்டியூரில் சுவரில் ஏறி நின்று வைணவ மந்திரங்களை மிகப் பெரிய அளவிலே மக்களுக்கு எடுத்துச் சொல்லிய பெருமைக்குரியவர். இந்த மக்களுக்கு எடுத்துச்சொன்ன இராமானுஜரே தமிழ் அர்ச்சனையைத்தான் வலியுறுத்தியிருக்கிறார் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்மையில் இந்திரா பார்த்தசாரதி நடத்திய இராமானுஜர் நாடகத்தில் அந்தக் கருத்துக்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. மற்றொன்றையும் பார்க்க வேண்டும். இந்த ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்னால் கோயில்களில் 'தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்' என்று இருந்தது. நாங்கள் வந்தவுடனேயே தமிழிலும் என்ற சொல்லில் உள்ள 'உம்'-மையை எடுத்துவிட்டோம். நான் கொஞ்சம் ஆழ்ந்த இலக்கணத்தோடு சொல்வதற்காக அன்பர்கள் பொறுத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். 'உம்' என்பதில் உயர்வு சிறப்பும் உண்டு; இழிவு சிறப்பும் உண்டு. இது இழிவு சிறப்பு 'உம்மை'. 'தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்' என்று சொன்னால் இது தமிழுக்கு இழுக்கு என்று கருதி அதை எடுத்துவிட்டு, 'தமிழில் அர்ச்சனை செய்யப்படும்' என்று ஒரு பலகையிலும், 'சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யப்படும்' என்று பக்கத்திலே இன்னொரு பலகையிலும் எழுதியிருப்பதை இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நீங்கள் எல்லாக் கோயில்களிலும் சென்று பார்க்கலாம் என்பதை உறுப்பினர்களுக்கு நான் புலப்படுத்த விரும்புகிறேன்.

முற்பகல் *10-35*

அது மட்டுமல்ல. ஏற்கெனவே நான் பலமுறை பேசியிருக்கிறேன்; நேரிடையாகவும் சொல்லியிருக்கிறேன். குறிப்பாக, இராமேஸ்வரம் கோயில், மதுரையில் இருக்கிற கோயில்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற சுசீந்திரம், கன்னியாகுமரி போன்ற கோயில்கள், இன்னும் சொல்லப்போனால் பழனியில் இருக்கிற சுப்பிரமணிய சுவாமி கோயில். இவற்றுக்கு எல்லாம் வெளி மாநிலத்தவர்கள் ஏராளமான பேர் வருகிறார்கள், வடநாட்டவர்கள் வருகிறார்கள். குறிப்பாக, பழனிக்குக் கிடைக்கிற பெரிய வருமானமே கேரளத்து மக்களால்தான் ஏற்படுகிறது. எனவே, தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். வெளி மாநிலங்களிலேயிருந்து வருகின்றவர்களுக்காக, வெளி மாநிலங்கள் மட்டுமல்ல, இங்கேயே யார் விரும்புகிறார்களோ இவர்களுக்காக, இவர்கள் கேட்கிறபோது சமஸ்கிருதத்தில் அர்ச்சனையைத் தெளிவாகச் செய்து கொடுங்கள், அவர்களை அப்படிச் சொல்லி மகிழ்வித்துத்





திருப்பியனுப்புங்கள் என்று சொல்லியிருக்கிறோமே தவிர, அதற்கு மாறுபாடான கருத்தை எங்கேயும் சொன்னதில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இரண்டு வகை அர்ச்சனைகளுக்கும் இடம் தருகிறபோது, சில பேர் என்ன சொல்கிறார்கள் என்றால் இதைத் திணிப்பு என்கிறார்கள். இது அடிக்கடி தமிழுக்கு ஏற்படுகிற ஒரு கோளாறு. தமிழ்நாட்டிலே மட்டும்தான் இந்தக் கோளாறு இருக்கிறது. கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யுங்கள் என்று சொன்னால் அது எப்படித் திணிப்பாகும்? இதைச் சொல்பவர்கள் யார்? அவர்கள் தங்களை அடையாளம் காட்டவேண்டும். நாம் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறோம். அதற்கு இன்றுவரைக்கும் பதில் வரவில்லை. திரும்பவும் அதையே வைக்கிறேன். சொல்பவர்கள் யார்? சொல்பவர்களுடைய தாய்மொழி தமிழா, சமஸ்கிருதமா என்பதை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். 'நீ யார் என்று சொல்வதற்கு முன்னால் உன் நண்பன் யார் என்று சொல், நீ யார் என்று நான் சொல்லிவிடுகிறேன்' என்பது தமிழ்ப் பழமொழி. எனவே, அப்படிச் சொல்பவர்கள், திணிப்பு என்று சொல்பவர்கள், தங்களுடைய தாய்மொழி எது என்பதைத் தெளிவுபடுத்திவிட்டால், அவர்கள் யார் என்பதை என்னால் அடையாளம் காட்டிவிட முடியும். அது இந்த நாட்டுக்கு நல்லது என்று நான் கருதுகிறேன். இன்னும் நான் வைத்த கேள்விக்குப் பதில் வரவில்லை. வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். அதேநேரத்தில் எங்களுடைய பணியை நாங்கள் தெளிவாகச் செய்து வைத்திருக்கிறோம்.

18-11-1997-லே குழு அமைத்த பிறகு, ஆறு முறை குழு கூடி, முழுக்க முழுக்கத் தமிழறிஞர்கள்--இன்னும் சொல்லப்போனால், எடுத்துக்காட்டாக ஒருவரை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்--சுப. அண்ணாமலை, தியாகராசர் கல்லூரியினுடைய முதல்வர், அவர் முற்றிலும் சைவ இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர். அதைப்போலவே, பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் ஞானசுந்தரம் என்பவர், நாலாயிர திவ்யப்பிரபந்தத்தை எழுத்து எண்ணிப் படித்தவர் மட்டுமல்ல, மூன்று ஆண்டுகள் அதை ஆய்வு செய்து விரல் நுனியிலே வைத்துக் கொண்டவர். அவர்கள் எல்லாம் சேர்ந்து அதை உருவாக்கினார்களே தவிர, தனிப்பட்ட முறையிலே நாங்கள் எதையும் எழுதவில்லை. ஒரு முறை, யாரோ ஒரு தோழர், புலவர், கபாலீசுவரர் கோயிலிலே சில வரிகளைச் சேர்த்து அர்ச்சனை மொழியிலே எழுதிவிட்டார். எங்களது

கவனத்திற்கு வராமலே அவர் எழுதிவிட்டார். உடனே, ஒரு இதழ் எழுதியது. "நம் மயிலை கபாலீசுவரர் தி.மு.க.-வில் சேர்ந்து விட்டார்', என்று எழுதிவிட்டார்கள். உடனே, நாங்கள் அன்றைக்கே நடவடிக்கை எடுத்தோம். அப்போது அந்தப் புலவரை இடைநீக்கம் செய்தோம். ஏனென்றால், அது முறையற்றது. அதனாலேதான், இப்போது இங்கே கையிலிருக்கிற நூல்களிலே பார்த்தால் முழுக்க முழுக்க அனைத்துமே தேவாரத்திலிருந்து, திருவாசகத்திலிருந்து, திருமுருகாற்றுப்படையிலிருந்து, நாலாயிர திவ்யப்பிரபந்தத்திலிருந்து எடுத்த வரிகள் இதில் இடம் பெற்றிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு நான்கு வரிகளைப் படிக்க விரும்புகிறேன். மூவர் தேவாரம், திருவாசகத்திலிருந்து இங்கே போற்றிகளை அப்படியே போட்டிருக்கிறார்கள். அருள்மிகு சிவபெருமான் 16 போற்றிகள், 8 போற்றிகள், 108 போற்றிகள் என்று போட்டுவிட்டு, அதிலே மூவர் தேவாரம், திருவாசகத்திலிருந்து தொகுக்கப்பட்டவை என்று போட்டிருக்கும். இரண்டு வரிகளை நான் ஓதினால் தப்பில்லை என்று கருதுகிறேன்.

**"ஓம் அடியார் பெருமை அறிவாய் போற்றி",**

இது திருநாவுக்கரசருடைய தேவாரத்தில் இருக்கிற வரி;

**"ஓம் அடியவர்க்கு ஆரமுது ஆனாய் போற்றி"**

இதுவும் திருநாவுக்கரசர் வரிதான். சற்று தள்ளிப்போகிறேன்.

**"ஓம் ஆசைதீரக் கொடுப்பாய் போற்றி",**

இது சம்பந்தர் வரி. அதற்குப் பிறகு

**"ஓம் எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி",**

இது மாணிக்கவாசகர் வரி. இந்த வரிகள் எல்லாமே அவற்றிலிருந்து எடுக்கப்பட்டவையே தவிர, எங்களுடைய சொந்த வாக்கியங்கள் அல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இதிலே தவறுகள் நேரலாம் என்பதற்காக இந்த அரசு மிகுந்த கவனத்தோடு இருக்கிறது. தமிழ்நாட்டிலிருக்கிற 16 வகை ஆதீனகர்த்தர்களுக்கும் அவை அனுப்பப்பட்டன. அந்த 16 வகை ஆதீனகர்த்தர்களும் இதிலே தேவையான திருத்தங்களைச் செய்தார்கள்; சில திருத்தங்களை அதிலே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டார்கள். அவை, அவையிலே வைக்கப்பட்டன. அந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பிறகுதான் இந்த நூல் வெளிவந்திருக்கிறது. அதுமட்டுமல்ல. இதை யார் ஓதுவார்களோ அவர்களையும் வைத்துக்கொண்டோம். சிவாச்சாரியார்கள் சைவக்



கோயில்களுக்காக; பட்டாச்சாரியார்கள் வைணவக் கோயில்களுக்காக; ஓதுவார்கள் இரண்டுக்கும் பொதுவான நிலையில். இவர்களில் குறிப்பிடத்தக்க 10, 12 பேரை அவைக்கு அழைத்து அவர்களையும் வைத்துக் கொண்டுதான் இதை அரங்கேற்றி இருக்கிறோமே தவிர, இது எங்களுடைய சொந்தக் கருத்துக்கள் அல்ல என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 10-40*

அந்த அடிப்படையில் 2,500 ஆண்டுகளுக்கு முன்னாலேயே தொல்காப்பியர் தெளிவாகச் சொன்னார்:

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**

என்று. ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு தெய்வம் உண்டு, இந்தத் தெய்வங்களை அவர்கள் வடமொழியாலா வணங்கியிருப்பார்கள்? அப்பொழுது தமிழே தெரியாமலா வணங்கியிருப்பார்கள்? இதை நாம் சிந்திக்க வேண்டாமா? சேயோன் என்பவன் முருகனாக, மாயோன் என்பவன் திருமாலாக இருக்கிறபோது நம்முடைய அழகிரிக்கு ஏன் இந்த ஐயப்பாடு? மாயோன், 2,500 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்தத் தமிழ்நாட்டுத் தெய்வமாக இருக்கிறபொழுது அதுவும் சிறந்த ஒரு முற்போக்காளருடைய பெயரை வைத்து இருக்கின்ற அழகிரியிடமா இந்த (குறுக்கீடு) நான் தொடரை முடிக்கவில்லை. இருந்தாலும் முடிக்க விரும்புகிறேன். மாயோன் உங்களால் வணங்கப்படுகிற தெய்வம் - நீங்கள் ஏன் வடநாட்டுக்குப் போகிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், அப்புறம் பேசலாம்; தொடர் விட்டுப்போய்விடும். அப்புறம் பேசுங்கள். எனவே, இவற்றையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொன்னேன்.

அதுமட்டுமல்ல. ஏற்கெனவே பல கோயில்களில் நான் பார்க்கிறேன். பல கோயில்களில் ஓதுகின்ற — அதிலே நான் பிராமணர், பிராமணர் அல்லாதவர் என்ற வேறுபாட்டைக் காட்டவில்லை; கண்டிப்பாகச் சொல்கிறேன், இதை எதிர்ப்பவர்கள் சிலபேர் பின்னணியில் இருந்து செய்கிறார்களே தவிர, கோயில்களிலே ஓதுகின்ற—அத்தனை பிராமணர்களும் இதை விருப்பத்தோடு ஏற்றுக்கொண்டு நிறைவோடு செய்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

உங்களுக்கு எடுத்துக்காட்டு வேண்டுமானால் அருள்கூர்ந்து ஈச்சனாரிக்குப் போங்கள். அங்கே பிள்ளையாரை வணங்குகிற அந்த ஓதுவார் மிக அருமையாக தமிழில் 108 போற்றிகளைச் சொல்வார். நம்முடைய இலக்குவன் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அதேநேரத்திலே குமாரவயலூருக்குப் போங்கள் அங்கே முருகனை வணங்குகிற அந்தப் பிராமண ஓதுவார் மிக அருமையாக 108 போற்றிகளை ஓதுவார். இவை நாங்கள் தந்த போற்றிகள் அல்ல; அதையும் மறந்து விடக்கூடாது. அவர்கள் ஏற்கெனவே தயார் செய்து வைத்து நீண்டகாலமாக அதைப் பழக்கத்திலே வைத்திருக்கிறார்கள். எனவே, யாரும் இதற்கு மாறுபட்டவர்கள் அல்ல. மாறுபட்டவர்கள் யாரோ சிலர், அவர்கள் இன்னும் தங்களுடைய முகங்களை அடையாளம் காட்டாமல் இருப்பவர்கள் என்றுதான் பொருள்.

அதுமட்டுமல்ல. நம்முடைய பேரறிஞர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள் மிகச் சிறந்த இலக்கிய மேதை. அந்த இலக்கிய மேதை சொல்கிறார்; ஆகமங்களில் எங்கும் அர்ச்சனை பற்றிச் சொல்லப்படவில்லை என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் எவ்வளவு நேரம் எடுக்கப் போகிறீர்கள்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** சில மணித்துளிகள். ஆகமங்களில் இது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உங்களுக்கு உகந்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு ரொம்பப் பிடித்தம்தான்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** இது என்றைக்காவது ஒருநாள் இந்த அவையில் பதிவு செய்யப்பட வேண்டியது ஒரு நாட்டின் கட்டாயம்; காலத்தின் கட்டாயம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே எனக்கொன்றும் கருத்து வேறுபாடு கிடையாது. இது அறநிலையத் துறை மானியக் கோரிக்கை என்றால் இன்னும் பிரமாதமாக இருந்திருக்கும்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** இருந்தாலும் சில மணித்துளிகளில் முடித்து விடுகிறேன். சில இன்றியமையாத செய்திகள். அதுமட்டுமல்ல. நம்முடைய எஸ். மகராசன் அவர்களுடைய குழு அறிக்கையிலே அவர்கள் மிகப் பலபடச் சொல்லியிருக்கிறார். நான்





அதிகச் செய்திகளை அதிலேயிருந்து சொல்லாவிட்டாலும் இரண்டொரு மேற்கோள்களைக் காட்டுவது என்னுடைய கடமை. அந்தக் குழுவிலேயேகூட - அதையும் சொல்ல வேண்டும்—மகராசன் தனியாகக்கூட எழுதவில்லை. அந்தக் குழுவிலே இருக்கிற பெயர்களைச் சொன்னால் உங்களுக்குத் தெரியும். சுவாமிநாத குருக்கள், தென்னிந்திய அர்ச்சகர் சங்கத் தலைவர்; விசுவநாத சிவாச்சாரியார், வேத பாடசாலையினுடைய முதல்வர்; ரங்கராஜ பட்டர், திருவரங்கம் கோயிலினுடைய பூஜகர்; வஜ்ரவேல் முதலியார், சைவ சிந்தாந்த மேதை; திருமுருக கிருபானந்தவாரியார், மறந்து விடக் கூடாது, அவருக்கு நான் விளக்கம் சொல்ல வேண்டிய தேவை இல்லை; சுந்தரராஜ பட்டர், தஞ்சையில் இருக்கின்ற சீனிவாசப் பெருமாள் கோயில், நாச்சியார்கோயிலிலே இருக்கிற ஓதுவார்; பி.ஏ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார், தென்னிந்திய அர்ச்சகர் சங்கச் செயலாளர்; அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார், தலைவர், இந்து ஆலயப் பாதுகாப்புக் குழு. இவ்வளவுபேரும் சேர்ந்துதான் இந்த அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அதிலே இரண்டொரு செய்திகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அவர் சொல்கிறார்.

“வடமொழியில் “ஓம் பவாய நம” என்று ஓர் அர்ச்சனைத் தொடர் இருக்குமானால், அதையே தமிழில் “ஓம் ஈசனடி போற்றி, ஓம் எந்தையே போற்றி” என்று அமைத்துக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை; காரணம், இவை திருவாசகத் தொடர்கள்” என்று குறிப்பிட்டார்.

அதனால்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் சொல்லும்பொழுதுகூடச் சொன்னார்.

“திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்”

என்று. வள்ளலார் சொன்னார்;

“வான் கலந்த மாணிக்க வாசக. நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
ஊண் கலந்து உயிர் கலந்து, உவட்டாமல் இனிப்பதுவே”

என்று சொன்னார். இதிலே வள்ளலார் சொல்வதிலே எனக்கு வியப்பு ஒன்றுமில்லை. ஆனால், இந்தத் திருவாசகத்தினுடைய பெருமையை ஜி.யூ. போப் உணர்ந்து மொழி பெயர்த்தார் அல்லவா, அவர்தான் திருவாசகத்திற்கு உருகியவர் என்று சொல்லலாம். எனவே அப்படிப்பட்ட

நிலையில் இதிலே எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. தமிழ்ச் சங்கத்தைப் பற்றி, முதல், இடை, கடைச் சங்கத்தைப் பற்றிச் சொல்கிறபோதுகூட, சிவபெருமான் இந்த தமிழ்ச் சங்கங்களிலேயிருந்து தமிழ் ஆராய்ந்தார் என்றுதான் இருக்கிறது.

(முற்பகல் 10-45

"கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமொடு அமர்ந்து" - கழகம் என்றால் அன்றைக்கிருந்த சங்கத்தையும் எடுத்துக்கொள்ளலாம். இன்றைக்கு ஆட்சியில் இருக்கிற தி.மு.கழகம் என்றும் எடுத்துக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, "கண்ணுதற் பெருங்கடவுளே" இந்தக் கழகத்திற்கு ஆதரவாக இருந்து தமிழ் ஆராய்ச்சி செய்திருக்கிறார். இப்போது எல்லாக் கழகங்களையும் எடுத்துக்கொள்ளலாம். எம்.ஜி.ஆர். கழகத்தையும் எடுத்துக்கொள்ளலாம்; அண்ணா தி.மு. கழகத்தையும் எடுத்துக்கொள்ளலாம்; த.மா.கா. வையும் எடுத்துக்கொள்ளலாம். எல்லாமே இப்போது அமைப்புகள்தான். இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், அன்றைக்கே, திருவிளையாடல் புராணத்தில் இருக்கிற வரி இது.

ஆகமத்தைப் பற்றிச் சொல்கிறபோது, மிகவும் முக்கியமாக நான் பதிவு செய்ய வேண்டிய கருத்து இதுதான். தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்கள் அனைத்தும் முறைப்படித்தான் நடக்கின்றன இருப்பினும் மூல ஆகமங்கள் பயில்வதற்குக் கிடைப்பதில்லை. சிவாச்சாரியார்கள் தங்களிடமுள்ள ஏடுகளையும், சில நூல்களையும் கொண்டு ஓரளவு பயின்று வருகின்றனர். மேலை நாட்டு அறிஞர்கள் வேதங்களைப் பயில்வதில் பெரிதும் ஆர்வம் காட்டுகிறார்கள். பல மொழி பெயர்ப்புகள், திறனாய்வுகள், வேதங்கள், உபநிஷத்துக்கள் ஆகியவற்றில் பல்வேறு பதிப்புகள் வந்தன. இதற்கு முக்கியமான காரணம் ஆகமங்கள் அனைத்தும் வடமொழியில் இருந்தாலும் பெரும்பாலும் கிரந்த மொழியில் இருந்ததுதான். அவை தமிழில் எழுதப்படாமல் இருந்தமையால், தமிழர்களும் அவற்றைப் பயிலாமல் புறக்கணித்து விட்டார்கள். அவை பெரும்பாலும் ஓலைச் சுவடிகளிலிருந்து தாள்களில்கூட பெயர்த்து எழுதப்படாமல் விடுபட்டுப் போயின.

இந்து சமயத்தையும் குறிப்பாக வேத நூல்களையும் பரப்ப எழுந்த காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் ஓர் ஆகம ஏடுகூட இல்லை என்று வங்காளப் பேரறிஞர் தாஸ் குப்தா குறிப்பிட்டிருப்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, ஆகமங்கள் என்ற பெயராலும், வேதங்கள் என்ற பெயராலும் அவ்வப்போது மிரட்டுவது என்பது பொருத்தமாக இராது, இனியும் அது எடுபடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





அதேநேரத்தில் சில பேர் தங்களுடைய கருத்துக்களை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் நான் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அழகியசிங்கர் அவர்களே, முன்னால் சொன்ன கருத்து அப்படியிருந்தாலும், அவரே மறுபடியும் திருப்பிச் சொல்கிறார். 'அழகியசிங்கரின் அமுத மொழிகள்' என்பதிலே அவர் சொல்லியிருக்கிறார். இறைவன் அதுவும் குறிப்பாக திருமால்—முதலிலே தமிழ் போகிறது, பிறகு திருமால் போகிறார், பிறகுதான் வேதம் போகிறது என்று சொல்லியிருக்கிறார். 'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே' என்ற வரியை மேற்கோள் காட்டிவிட்டு அவர் இப்போது சொல்கிறார். ஆதலால்தான் தமிழ், சமஸ்கிருதம் இரண்டையும் இரு கண்களாகப் போற்றி வருகிறோம் என்று சொல்கிறார். நான் இதை வரவேற்கிறேன். காரணம், அவர் முதலில் சொல்லிய கருத்திற்கும், இதற்கும் மாறுபாடு இருந்தாலும்கூட அவர் தெளிவுபடச் சொல்லியிருக்கிறார்; இதுபோன்ற கருத்துக்கள் ஒரு காலத்தில் சொல்லப்பட்டன.

நான் பெயரைச் சொல்லாமலே சொல்கிறேன்.ஒரு பெரியவர் 25 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் அர்ச்சனையை எதிர்த்து இருக்கிறார். அப்போது நம்முடைய கடலூர் ஞானியாரடிகள், அதேநேரத்திலே உ.வே.சா. ஆகியோருடைய மாணவரான அ. நடேச முதலியார், அவர் தமிழ் ஆசிரியராக இருந்தகாலத்தில் அவருடைய தலைமையில் ஒரு தீர்மானம் போடப்பட்டது. அந்தத் தீர்மானத்தை மட்டும் படிக்கிறேன். நான் சொல்வது 25 ஆண்டுகளுக்கு முன்னால். "தமிழ்நாட்டு திருக்கோயில்களில் தமிழ் போற்றி வழிபாடு கூடாது என்றும் வடமொழி அர்ச்சனையே வேண்டுமென்றும் அவ்வப்போது திட்டமிட்டு நிகழ்த்தும் முயற்சிகளை இச்செயற்குழு கண்டிக்கிறது. தென்னாட்டுத் திருக்கோயில்கள் அனைத்தும் ஆகம முறைப்படி அமைந்தவை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள். அதன் வழிபாடு ஆகம முறைப்படியே நடக்க வேண்டுமென்பது உடன்பாடு. அதேபோன்று தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் வழிபாட்டு முறைகள் தமிழ் மொழி அடிப்படையிலே தொன்றுதொட்டு நிகழ்ந்து வருவதை வடமொழியாளர்களும் ஏற்றுக்கொண்டார்கள்" என்றுகூட அந்தத் தீர்மானத்தில் உள்ளது. "தஞ்சைப் பெரிய கோயிலில் தேவாரம் பாடுவதற்கு 10 நூற்றாண்டுகளுக்கு முன்னால்—தஞ்சை, பெரிய கோயிலில் தேவாரம் பாடுவதற்கு—48 ஓதுவார்களுக்கும் 2 இசைக் கருவி வாணர்களுக்கும் ஊதியம் வழங்கியதாக இராஜராஜ சோழன் கல்வெட்டு சொல்வதையும் நினைவில் கொள்ள வேண்டும்" என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, இந்த அடிப்படையில் சில நண்பர்கள் எழுந்து ஆதரித்ததை இந்தநேரத்திலே அவையிலே சொல்ல வேண்டும். ஒரு வரியில் சொல்லி நான் என் உரையை முடிக்கிறேன்.

பிரபஞ்சன் என்ற எழுத்தாளர் சொல்கிறார். "தமிழ்நாட்டில் இருக்கும் கோயில்களில் தமிழ் வழிபாட்டு மொழியாக இருப்பதைவிடவும் இயற்கை, இயல்பு வேறு என்ன இருக்க முடியும்" என்றும், இன்னும் சற்று மேலே போய் "தமிழ்நாட்டுத் திருக்கோயில்களிலே தமிழே வழிபாட்டு மொழியாக இருக்க வேண்டுமென்று தமிழக அரசு சொன்னாலும் என்ன தவறிருக்க முடியும்; தமிழுக்கு வழிபாட்டு மொழியாக இருக்கத் தகுதி இல்லையென்றால், இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மொழிக்கும் இந்தத் தகுதி இல்லை" என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"எங்கும் தமிழ் என்பது கோயில்களிலும் அடங்கும். அலுவலகங்களில் தமிழைக் கொண்டு செல்ல விரும்பும் நாம், ஆட்சி, அதிகாரத்தில் தமிழைக் கொண்டு செல்ல விரும்பும் நாம், ஆலயங்களில் தமிழ் இருக்க வேண்டுமென்று கேட்கிறோம். அதில் என்ன தவறிருக்க முடியும்" என்று அவர் மேலும் கேட்கிறார். கேட்டுவிட்டு அவர் சொல்கிறார். "எமக்கும் எங்கள் இறைவர்க்கும் இடையே நாங்கள் உரையாட வேண்டுமெனில் எங்கள் தாய் மொழியிலேயே உரையாடக்கூடும்: எங்களுக்கும் கடவுளுக்கும் இடையில் ஒரு மொழி பெயர்ப்பாளர் தேவையில்லை" என்று அவர் குறிப்பிடுகிறார். இங்கே இருக்கிற உறுப்பினர்களும் அப்படி மொழி பெயர்ப்பாளரைத் தேடமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்திரா பார்த்தசாரதி அவர்கள் குறிப்பிடுகிறார். "சமஸ்கிருதத்தினை சடங்கு மொழியாகக் கொண்டார்களே அன்றி இறைவனோடு பக்தனைத் தொடர்புபடுத்தக்கூடிய வழிப்பாட்டு மொழியாக அவர்கள் நினைக்கவில்லை; அதிலே தமிழைத்தான் அவர்கள் கொண்டார்கள்" என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட எல்லா நிலைகளிலும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு செய்தியைச் சொல்லி இருக்கிறார்கள். அதைச் சொல்லி நான் முடித்துவிடுகிறேன்.

(முற்பகல் 10-50)

இப்போது தமிழ் அர்ச்சனை தொடர்பாக யாருக்கும் மறுப்பு இல்லை. எல்லாக் கோயில்களிலும் நூல்கள் கிடைக்கின்றன. நீங்கள் அர்ச்சனையை விரிவாகச் செய்ய வேண்டுமென்பதல்ல; 8 வரி போற்றிகளும் தரப்பட்டு இருக்கின்றன; 16 வரி போற்றிகளும் தரப்பட்டு இருக்கின்றன. நீங்கள் கோயிலுக்குப் போகும்போது அருள்கூர்ந்து



தமிழில் அர்ச்சனை செய்யுங்கள் என்று கேட்டால் போதும். தமிழ் தானே வந்துவிடும். அவர்களும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதேநேரத்தில் உங்களுக்கு வடமொழிதான் தேவை என்று கருதினால், இந்த அரசு உங்களுக்குக் குறுக்கே நிற்கவில்லை. யாருடைய உள்ளத்தையும் இதுவரைக்கும் புண்படுத்தியதுமில்லை; புண்படுத்தப் போவதுமில்லை. எங்களுடைய நோக்கம் இந்த மண்ணைப் பண்படுத்துவதே தவிர, புண்படுத்துவது அல்ல என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கடைசியாக ஒன்று. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன ஒரு கருத்தை மட்டும் சொல்லி நான் முடித்துவிட விரும்புகின்றேன். "வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்று முழங்குபவர்கள் நாங்கள். இந்த முழக்கம் வெறும் உதட்டு வெளிப்பாடு அல்ல, உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பும் உணர்வின் வெளிப்பாடு. எனவே, தமிழைச் சாக விடமாட்டோம். 1938 ஆம் ஆண்டில் மொழிப் போரில் தாளமுத்து-நடராஜன் கண் கலங்க கதறிக்கொண்டு தமிழ் காக்க ஏந்திய கொடி இன்னும் எமது கரங்களில் தூக்கிப் பிடித்தபடிதான் கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது. இது எல்லா நிலைகளிலும் கம்பீரமாக நிற்கும்; வெல்லும். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. இன்னும் இதிலே போய் என்ன Point of order ?

## 3. தகவல் கோரல்

### மதத் தீவிரவாதிகளால் நவம்பர் 29 மற்றும் டிசம்பர் 6 தேதிகளில் ஏற்படக்கூடிய அசம்பாவித நிகழ்ச்சிகளைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு விஷயம் குறித்து நான் மாநில அரசிடமிருந்து சில விளக்கங்களைப் பெற விரும்புகிறேன். வருகிற 29 ஆம் தேதியும் டிசம்பர் 6 ஆம் தேதியும் கோவை மாவட்டம் முழுவதும் ஏதாவது ஒருவகையில் விபரீதம் நடக்கக்கூடும் என்கிற முறையிலே பதற்றம்

நிலவுகிறது. எனக்குக் காலையிலேகூட தொலைபேசிச் செய்திகள் வந்தன. 29 ஆம் தேதியிலிருந்து டிசம்பர் 6 ஆம் தேதி வரை திருப்பூர் நகரத்திலேகூட பல இடங்களில் குண்டுகள் வெடிக்கக்கூடும் என்று வாக்குமூலம் கொடுத்ததை அடிப்படையாக வைத்து, பல இடங்களில் பீதியும் அச்சமும் நிலவுகிறது; இது கோவை மாவட்டம் முழுவதிலும் நிலவுகிறது. பொது மக்கள் மத்தியில், உண்மையிலேயே ஏதாவது நடந்துவிடும் என்ற ஒரு பீதி நிலவுகிற நிலைமையில் காவல் துறையினுடைய முன் ஏற்பாடுகள் என்ன செய்யப்பட்டு இருக்கின்றன? தமிழகத்தின் புலனாய்வுத் துறை உரியபடி முடுக்கி விடப்பட்டு இருக்கிறதா? தமிழ்நாட்டில் எந்த ஒரு விஷயத்தையும் குறுகிய அரசியல் நோக்கத்தோடு அரசியல் ஆதாயம் தேட முயலுகிற முயற்சியில் தீராப் பசி கொண்டு நிற்கிற ஒரு சக்தி இந்த விஷயத்தைப் பயன்படுத்திக்கொண்டு தன்னுடைய அரசியல் திருவிளையாட்டை அரங்கேற்றிவிடுமோ என்ற அச்சமும் நிலவுகிறது. இந்த நிலைமைகளை எல்லாம் உணர்ந்து, மாநில அரசு என்ன முன் தயாரிப்புகளைச் செய்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு, மூன்று நாட்களாகவே தங்களுடைய அறையில் இதுகுறித்து ஒரு பிரச்சினையை எழுப்பி அதற்குப் பதிலை அரசின் சார்பாகப் பெறவேண்டும் என்ற நிலையை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் எடுத்து, இன்றைக்கு அவர் அதனை எழுப்பி, அதற்கான விளக்கத்தைத் தருவதற்கு நான் முன்வந்து இருக்கிறேன்.

வருகிற 29 ஆம் தேதி, டிசம்பர் 6 ஆம் தேதி ஆகிய நாட்களில் தமிழகத்திலே அசம்பாவிதம் எதுவும் நிகழாமல் இருப்பதற்குப் பல நடவடிக்கைகள் அரசின் சார்பில் காவல் துறை வாயிலாக, புலனாய்வுத் துறை வாயிலாக எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு ஒத்துழைக்கின்ற வகையில் அரசியல் கட்சிகளையும் வேண்டிக் கேட்டு, அத்தகைய அரசியல் கட்சிகள், சமுதாய இயக்கங்கள் ஓரளவு அரசினுடைய வேண்டுகோளை ஏற்று தங்களுடைய முடிவுகளையும் மாற்றி அமைத்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த இயக்கங்கள், அதிலும் குறிப்பாக இந்திய யூனியன் முஸ்லீம் லீக் நடத்த இருந்த மாநாட்டுத் தேதிகளை எல்லாம் அடுத்த மாதத்திற்குத் தள்ளிவைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டு, அவர்களும் தள்ளி வைத்து இருக்கின்றார்கள். திராவிடர் கழகத்தின் சார்பாக 28, 29 அல்லது 27 ஆகிய நாட்களில் கோவையிலே நடைபெற இருந்த அவர்களுடைய நிகழ்ச்சிகளையும் தள்ளிவைக்க வேண்டுமென்று கேட்டு, அவர்களும் தள்ளிவைக்க இணக்கம் தெரிவித்து இருக்கின்றார்கள். நம்முடைய அருமை நண்பர் அப்துல் லத்தீப் அவர்களும் ஏதோ உண்ணாவிரதம் இருப்பதாகச் செய்திகள் வந்தன. அதையும் அவர்கள் எங்களுடைய வேண்டுகோளை ஏற்று தள்ளிவைப்பார்கள் என்றே நான் நம்பிக்கொண்டு இருக்கின்றேன்.



எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை இங்கே பட்டியலிட்டுக் காட்ட விரும்புகிறேன். அசம்பாவிதம் ஏதும் நடந்துவிடாமல் இருக்க கவனத்தோடு விழிப்புணர்வுடனும் செயல்பட வேண்டுமென காவல் துறைக்கு அரசு அறிவுரைகளை வழங்கி உள்ளது.

மதத் தீவிரவாதிகள் இருக்கக்கூடிய சந்தேகத்திற்குரிய இடங்களிலுள்ள வீடுகள் காவல் துறையால் தீவிரமாகச் சோதனையிடப்படுகின்றன. இந்தப் பணி மேலும் தீவிரப்படுத்தப்படும். பல இடங்களில் வாகனங்கள் தணிக்கை செய்யப்பட்டு, சந்தேகத்திற்குரிய பொருட்கள் இருக்கின்றனவா, நபர்கள் இருக்கிறார்களா என்பது கண்டறியப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-55

இரயில் நிலையங்களில் முன்னெச்சரிக்கையாக பயணிகளுடைய பொருட்களும், இரயில் பெட்டிகளும்கூட சோதிக்கப்படுகின்றன; தணிக்கை செய்யப்படுகின்றன. இரயில்வே நிர்வாகத்திற்கும் இதுகுறித்து எச்சரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதுகாப்பு ஏற்பாட்டுக்காக ஒரு தனித் திட்டம் தயார் செய்யப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்துக் காவல் துறை சரகங்களின் தலைமை இடங்களிலும் குண்டுகளைக் கண்டுபிடிப்பதிலும், குண்டுகளைச் செயலிழக்கச் செய்வதிலும் திறமை பெற்ற நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கூடுதல் மத்திய ரிசர்வ் படை, குண்டுகளைக் கண்டுபிடித்து அவற்றைச் செயலிழக்கச் செய்யும் நிபுணர் குழு ஆகியவற்றைக் கோரி மாநில அரசு மத்திய அரசுக்குக் கடிதமும் எழுதியுள்ளது. இந்தத் தருணத்தில் மிக்க கவனத்தோடு செயல்பட வேண்டுமென காவல் துறை உயரதிகாரிகள் அனைவருக்கும் காவல் துறை இயக்குநர் அறிவுரைகளை வழங்கியுள்ளார். இந்த அறிவுரைகள் சீரிய முறையில் பின்பற்றப்படுகின்றனவா என்பதை

நேரடியாகக் கண்டறிவதற்கு காவல் துறை இயக்குநர் கோவை, மதுரை, மற்றும் திருச்சி ஆகிய நகரங்களுக்குச் சென்று மேற்பார்வையிட்டுள்ளார்.

கோவை குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான 193 குற்றவாளிகளில் 171 பேர் காவல் துறையால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். குற்றவாளிகள்மீது முதல்கட்ட குற்றப் பத்திரிகை 28-9-1998 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 8 பேர் இறந்து விட்டார்கள். தலைமறைவாக உள்ள மீதிக் குற்றவாளிகளைப் பிடிக்க, தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. காவல் துறை விழிப்புடன் செயல்படுகின்ற அதேநேரத்தில் பொதுமக்களும் விழிப்புடன் செயல்பட்டு அரசுக்கு உறுதுணையாக இருந்தால், மதத் தீவிரவாதிகள் யாராயினும் அவர்களுடைய சதித் திட்டம் முறியடிக்கப்படும். மதங்கள் ஆயினும், சாதிகள் ஆயினும் அவற்றிலே உள்ள வன்முறைத் தீவிரவாதிகளைப் பாரபட்சமின்றி அடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்போது, அந்த நடவடிக்கை குறிப்பிட்ட எந்த மதத்தினருக்கும், எந்த வகுப்பினருக்கும் விரோதமானது என்று கருதாமல், சமூகவிரோதச் செயலுக்கு விரோதமானது எனக் கருதி, பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள். நான் மதுரைக்குச் சென்றபோது, சுவர்களிலெல்லாம் ஒரு மதத்தின் சார்பிலே டிசம்பர் 6 ஆம் தேதி வெற்றி நாள் என்றும், இன்னொரு மதத்தின் சார்பிலே அன்று துக்க நாள் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்ற கட்சிகளிடமெல்லாம் நவம்பர் 29 மற்றும் டிசம்பர் 6 ஆகிய இரண்டு நாட்களிலும் உண்ணாவிரதமோ ஆர்ப்பாட்டமோ எதுவும் வேண்டாமென்று வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால் எல்லாக் கட்சிகளுடைய ஒத்துழைப்பும் நிச்சயமாக இருக்கும். அது இந்து மதமாக இருந்தாலும் சரி, இஸ்லாமிய மதமாக இருந்தாலும் சரி அந்த இரண்டு நாட்களிலும் வீதிக்கு வந்து எந்தவிதமான உண்ணாவிரதமோ ஆர்ப்பாட்டமோ இதுபோன்ற எந்த நிகழ்ச்சிகளும் இருக்கக் கூடாது என்று அந்த இரண்டு நாட்களுக்கும் தடை விதித்து அரசாங்கம் ஓர் உத்தரவு போடுமேயானால் அதை எல்லாக் கட்சியினரும் நிச்சயமாக வரவேற்பார்கள். அந்த நிலையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அவ்வாறு அனுமதி கேட்டதற்குத் தர இயலாது என்று ஏற்கெனவே கூறப்பட்டிருக்கிறது. அதையொட்டி இன்றைக்குக்கூட காலையில் பத்திரிகையை நமது திருநாவுக்கரசு பார்த்திருக்கக்கூடும். அப்படி அனுமதி கொடுக்காத காரணத்தால், முதலமைச்சர் வீட்டு வாசலிலேயே மறியல் செய்யப் போகிறோம் என்று ஒரு தீவிரவாத இயக்கம் இன்றைக்கு அறிக்கை வெளியிட்டு இருக்கிறது. கண்டிப்பாக நவம்பர் 29 ஆம் தேதியை ஒட்டியோ, அதைப்போல டிசம்பர் 6 ஆம் தேதியை ஒட்டியோ-இந்தத் தேதிகள் மாத்திரமல்ல, அதையொட்டி - நடைபெறுகிற எந்த நிகழ்ச்சிகளையும் மிகக் கூர்ந்து கவனித்துத்தான் அனுமதி வழங்கப்படும். இல்லாதபட்சத்தில், நிச்சயமாக அனுமதி வழங்கப்படமாட்டாது. அது தடுக்கப்படும். அதனுடைய விளைவுகள் எதுவாயினும் அரசும், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஏற்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் பிரகடனபபடுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தமிழ்நாடு எங்கும் 29 ஆம் தேதியும் 6 ஆம் தேதியும் சில அசம்பாவிதங்கள் நடக்கக்கூடும் என்று முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழக அரசு எடுக்கக் கூடிய நடவடிக்கையை நாம் பாராட்டுகிறோம்.**

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதுபோன்ற பேச்சுக்கள்தான் தூண்டிவிடுகின்ற பேச்சுக்களாக அமைந்து விடுகின்றன. எனவே, இதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதி காக்க வேண்டும். நீங்கள் இந்தச் சூழ்நிலையில் இப்படிப் பேசுவது முறையல்ல. அப்படி ஏதாவது உங்களுக்குத் தகவல் வந்திருந்தால் நேரடியாக முதலமைச்சர் அவர்களிடம் சொல்லுங்கள். திரு கிருஷ்ணசாமி சொன்ன வாக்கியங்களை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகின்றேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பத்திரிகைகளில் வந்ததைத்தான் சொல்கிறேன். மக்கள் மத்தியில்...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி ஏதாவது உங்களுக்குத் தகவல் தெரிந்தால் அதை நேரடியாக முதலமைச்சர் அவர்களிடம் சொல்லலாமேயொழிய பத்திரிகையில் வந்ததையெல்லாம் வேதவாக்காக நீங்கள் நினைத்துப் பேசக்கூடாது. சூழ்நிலையை மோசமாக்காதீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள். (குறுக்கீடு) அப்படி உங்களுக்குத் தகவல் வந்தால் அதை முதலமைச்சரிடம் நேரடியாகச் சொல்லுங்கள் என்கிறேன். நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) திரு. லத்தீப் எழுந்து நிற்கிறார், நீங்கள் வேண்டாம் என்கிறீர்களே?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதுபோல், குறிப்பிட்ட அதிகாரிகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு பொதுவாக நடக்கும் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். உங்களுக்கு அந்த ஐயப்பாடு தேவையில்லை, உட்காருங்கள். திரு. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுவான வேண்டுகோளை விடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய கடமை, நாமெல்லாம் அறிந்த ஒன்று. ஆகையினால் எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் தமிழ்நாட்டில் மட்டும் உண்ணாவிரதம் என்று அறிவிக்கவில்லை. எங்களுடைய அகில இந்திய செயற்குழு இந்தியா முழுவதும் உள்ள மாவட்டங்களின் தலைநகர்களில் — அதுவும் பாபர் மசூதியை அதே இடத்தில் கட்ட வேண்டுமென்றோ, இராமர் கோவிலைக் கட்டக்கூடாது என்றோ—எந்தக் கோஷமும் இல்லாமல், ஊர்வலம் இல்லாமல், ஜனநாயக முறையில், அரசமைப்புச் சட்டப்படி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதை மட்டும் வலியுறுத்தித்தான் இந்த உண்ணாநோன்பு என்று நாங்கள் தெளிவாக அறிவித்திருக்கிறோம். இது இந்தியா முழுவதும் எல்லா மாவட்டங்களின் தலைநகர்களிலும் நடைபெறுவதாக அறிவித்து அதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. எனவே நாங்கள் குறிப்பிட்ட ஜாதியினரையோ குறிப்பிட்ட மதத்தினரையோ, கட்சிக்காரர்களையோ அழைக்கவில்லை. பத்திரிகைகளில் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறோம். அதற்கான விளக்கங்களும் வந்திருக்கின்றன. எல்லா மக்களும் – அரசமைப்புச் சட்டப்படி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அக்கறை உள்ளவர்களும், மதச்சார்பின்மையில் அக்கறை உடையவர்களும் – இப்படி இவர்கள் எல்லாம் — கலந்துகொள்ள வேண்டுமென்றுதான் அறிவித்திருக்கிறோம்.





அதைப்போலத்தான் இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய பொதுவுடைமைக் கட்சி, மற்ற மற்ற கட்சிகள் எல்லாம் டிசம்பர் 6ஆம் தேதி குறித்து இதே கருத்தை வெளியிட்டு அவர்களும் அந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். வங்காளத்தில் மம்தா பானர்ஜி அதைக் கறுப்பு நாள் என்று சொல்லி இருக்கிறார். அப்படியும் நாங்கள் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும், நாங்கள் எப்படிப் பிரச்சினைகளை அணுகுவோம் என்று. அது எங்களுக்கும் தெரியும். இதிலே இன்னொரு நோக்கமும் உண்டு. யார் யாரோ எதையெதையோ செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்கு எல்லாம் ஒரு வடிகால் அமைக்கும் வகையில்தான் நாங்கள் இதைச் செய்கிறோம் என்பதையும் நான் முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இதைக் குறிப்பிட்டு உண்ணாவிரதத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று சொன்னார்கள். இது என்னுடைய தீர்மானமல்ல. இது அகில இந்திய செயற்குழுவின் தீர்மானம். எனவே, அவர்களையும் கலந்து பேச வேண்டும். இருந்தாலும் அன்றைக்கு அந்த உண்ணாவிரதம் இருப்பது எல்லா வகையிலும் பயனுள்ளதாகும், சாலச்சிறந்ததாகும் என்பதுதான் என்னுடைய கருத்து என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அது எல்லா வகையிலும் பயனுடையதாக இருக்கும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதுபோன்ற வாதத்தைச் சொல்லி, இப்போது அனுமதி கேட்டு, அது தேவையில்லை, ஒத்திவைத்துவிடுங்கள் என்று சொல்லி, அதற்கிணங்கி ஒத்திவைத்துள்ள மற்ற இயக்கங்களும், குறிப்பாக, இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கும், திராவிடர் கழகம் போன்ற இயக்கங்களும் இதே வாதங்களை எடுத்து வைக்கக்கூடும். இப்போதே, அந்த ஒருநாள் இந்திய தேசிய லீகின் சார்பாகக் கடைப்பிடிக்கப்படுமேயானால் அதற்கு மாற்றாக அல்லது அதற்கு எதிராக அதே நாளில் அல்லது வேறு நாளில் வேறு சிலராலும் கடைப்பிடிக்கப்படும் என்ற அறிவிப்புகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன.

முற்பகல் 11-05

திரு. லத்தீப் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்—அவர் பொதுவாக, பொது மக்களிடத்திலே வேண்டுமானால் சொல்லலாம். எல்லோரும்

நம்புவார்கள். நான் நம்புவதற்கு இல்லை—இது அகில இந்திய அளவிலே எடுக்கப்பட்ட முடிவு என்று. அவரே அகில இந்திய பொதுச் செயலாளர் அந்தக் கட்சிக்கு. அதனால், அவர் நிலைமையை விளக்கி, தமிழ் நாட்டிற்கென்று ஒரு தனி நிலைமை இருக்கிறது. அதை மறந்துவிடக்கூடாது. மற்ற இடங்களில் அவ்வப்போது ஏற்படுகின்ற பூசல்களின் காரணமாக சில நிலைமைகள் உருவாகின்றன. ஆனால், தமிழ்நாட்டில் இப்படி ஒரு நிலைமை வராதா என்று எதிர்பார்க்கின்ற பலபேர் இருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் மீண்டும் இரத்த ஆறு ஒன்று ஓடவோ, அதன் காரணமாக அப்பாவி பொதுமக்கள் அவதிக்கு ஆளாகவோ நேரிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த வேண்டுகோளை நான் வைக்கின்றேனே அல்லாமல் வேறு அல்ல. இதை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதியான ஓர் உண்ணாவிரதம் வைப்பதால் இரத்த ஆறு ஒன்று ஓடும் என்று சொல்வதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. அமைதியான ஓர் உண்ணாவிரதத்தை நாங்கள் நடத்துகிறோம். அப்படியென்றால், எங்களுடைய ஜீவாதார உரிமை பாதிக்கப்படுகிறபோது பிறர் என்ன செய்கிறார்கள் என்று பார்த்துக்கொண்டு செயல்படுவது முறையல்ல.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அமைதியான முறையிலேதானே டிசம்பர் 6 ஆம் தேதி நடத்தப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். அமைதி உருவாவதற்காகவும், அமளிகள் இருக்கக்கூடாது என்பதற்காகவும் கடைப்பிடிக்கின்ற அந்த நாள் 10 ஆம் தேதியாக இருக்கட்டும்; அல்லது அதற்கு முன்பு 29 ஆம் தேதி அல்லாமல் வேறு ஒரு தேதியாக இருக்கட்டும். 6 ஆம் தேதி அல்லாமல் வேறு தேதியாக இருக்கட்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேனே தவிர, நீங்கள் எந்தவித இயக்க நடவடிக்கைகளையும் நடத்தக்கூடாது என்று யாரும் சொல்லவில்லை.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ப. ரங்கநாதன்.



**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1998-99 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து நான்கு முதல் நூற்று நாற்பத்தி மூன்று வரையிலான 10 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஆ. நடராசன்.

***திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1998-99 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து ஆறு முதல் அறுபத்து ஒன்பது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் பன்னிரண்டாவது மற்றும் பதிமூன்றாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிகள் (அறிமுகம் செய்தல்). 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. ஆலடி அருணா] [1998 நவம்பர் 26

"1998ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



1998 நவம்பர் 26] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1998-99, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998-99 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby give my recommendation for the Demands for Further Grants for the year 1998-99, being moved in the Tamil Nadu Legislative Assembly."

முற்பகல் 11-10

## 7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998-99 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 23-11-1998ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள்

ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1998-99 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 25, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் R.T.O. Office, ராணிப்பேட்டை, வாணியம்பாடி M.V.I. ஆய்வாளர்கள் அலுவலகங்களில் கம்ப்யூட்டர்கள் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,50,000-ல் ரூ.1 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 672, திரு பி. வெங்கடசாமி.

**Thiru B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to constitute a Committee of experts not connected with Government to determine the quantity and the firm from which numbering machines are purchased", I move—

"That the sum of Rs.38,88,000 allocated under Demand No.2 - State Excise be reduced by Re.1."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 45, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியைச் சேர்ந்த முத்தனேந்தலில் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,82,23,000-ல் ரூ.1 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 62, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி ஒன்றினை பள்ளிப்பட்டில் அரசு சார்பில் கட்ட வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,43,00,000-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 87, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொகுதிக்கும் வழங்கப்படும் தொகை ரூ.35 இலட்சம் என்பதை உயர்த்தி ரூ.50 இலட்சமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,00,14,000-ல் ரூ.1 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 117, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, மறுகால்குறிச்சி பஞ்சாயத்திற்கு திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை ஓரமாக (N.H.7) சமத்துவபுரம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,43,09,000-இல் ரூ.1 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 120, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொடுங்கையூரில் தீவிரவாதிகளிடமிருந்து தன் உயிரைப் பொருட்படுத்தாமல் நவீன வெடிகுண்டுகளைப் பிடித்த காவலர்களுக்குப் பதவி உயர்வு மற்றும் வெகுமதி கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,82,23,000-ல் ரூ.1 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 202, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிரச்சினைக்குரிய ஏல நடவடிக்கைகளை வீடியோ படம் எடுப்பதற்குப் பதில், அனைத்து ஏலம் நடைபெறும் நடவடிக்கைகளையும் வீடியோ படம் எடுக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,88,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 209, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 239, திரு. அ.வ. அப்துல் நாசர்.

* **திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தாலுகாவை இரண்டாகப் பிரித்து பரங்கிப்பேட்டையைத் தலைமையகமாகக் கொண்டு புதிய தாலுகா உருவாக்கப்படுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000-ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 293, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், சங்ககிரியில் உள்ள இயக்கூர்தி ஆய்வாளர் அலுவலகத்தில் இயக்கூர்திகளைப் பதிவு செய்ய கணினி வசதி செய்து கொடுப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,50,000-ல் ரூ.1 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 415, திரு. வி. அய்யலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 470, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் மனு செய்த கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் விதவைகள், ஏழைப் பெண்கள் ஆகியோருக்கும் இலவசமாகத் தையல் இயந்திரங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய [illegible] ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,43,68,000-ல் ரூ.1 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 551, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மிகவும் பின்தங்கிய பகுதியான ஆண்டிமடம்

சட்டமன்றத் தொகுதிக்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு ரூ. 1 கோடியாக உயர்த்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,00,11,000-ல் ரூ.1 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 733, திரு. ந. கருப்பண்ண உடையார்

* **திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் தாலுகாவிற்குப் பதிலாக நிர்வாக வசதிக்காக கபிஸ்தலம் ஊராட்சியைத் தாலுகா தலைநகராக மாற்றுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000-ல் ரூ.1 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 563, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதி, ஒட்டங்காடு கிராமத்தில் புறக்காவல் நிலையம் தொடங்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,82,23,000-ல் ரூ.1 குறைகக வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 221, திரு. என்.ஆர். அழகுராஜா, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானமும், மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. பேரவை விதிகளின்படி இன்று விவாதமும் பதிலுரையும் சரியாக 1-30 மணிக்குள் முடிந்து, வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் என்பதை உறுப்பினர்கள்



மனதில்கொண்டு சுருக்கமாகப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். 11 உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள். எந்த உறுப்பினரும் 7 முதல் 8 நிமிடங்களுக்குமேல் பேசக்கூடாது என்று அறிவித்து, விவாதத்தை முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு அழகிரி அவர்களைத் தொடங்குமாறு அழைக்கின்றேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின்மீது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்பாக, காவிரிப் பிரச்சினையில் தமிழக அரசாங்கமும், கர்நாடக அரசாங்கமும், மத்தியிலே இருக்கின்ற பாரதிய ஜனதாவினுடைய பிரதமரும் ஒருங்கே நின்று ஆற்றியிருக்கின்ற நல்ல பணிகளைப் பாராட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இதுவரை ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருந்ததை, சுமூகமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் என்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கியதற்காக, இரண்டு மாநில முதலமைச்சர்களையும், பாரதிய ஜனதாவினுடைய பிரதமரையும் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதேபோல் கடந்த ஓராண்டுக் காலத்தில் பாசன வாய்க்கால்களைச் சீரமைப்பதிலே ஒரு மகத்தான முன்னேற்றத்தைக் கண்டிருக்கின்ற, வீராணம் ஏரியிலிருந்து பிரிந்து செல்கின்ற வாய்க்கால்களில் தூர் வாருவதிலே ஒரு நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருக்கின்ற, சிதம்பரம், காட்டுமன்னார்குடி பகுதிகளில் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையிலே 500 மின்சாரப் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிற தமிழக அரசைப் பாராட்டுவதற்கு நான் பெருமைப்படுகிறேன். அதேபோல நேற்று மின் துறை மானியத்திலே கோயில்களுக்கு ஒரு விளக்குக்கு இலவச மின்சாரமும், வெல்லம் காய்ச்சுகின்ற சர்க்கரைத் தொழிலாளர்களுக்கு மின்சார உதவியும் செய்திருக்கின்ற மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 11-15

அதேபோல கடந்த இரண்டு ஆண்டுகளில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் மகத்தான காரியங்களைச் செய்திருந்த அந்தத் துறையினுடைய அமைச்சரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனென்றால், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்பது இதுநாள்வரை தொழில் அதிபர்களுடைய கையிலே இருந்த ஓர் இலாகாவாக இருந்தது

ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளில் அந்தத் துறை ஒரு பெரிய முன்னேற்றத்தைக் கண்டு, மிக மோசமாக, மாசுக் கட்டுப்பாட்டிற்கான நடைமுறைகளைக் கடைப்பிடிக்காமல் இருந்த பல்வேறு தொழிற்சாலைகளை ஓர் அடக்கத்திற்குக் கொண்டு வந்து அதன்மூலமாக சுற்றுச்சூழலைச் செம்மைப்படுத்திய அந்தத் துறையினுடைய பழைய அமைச்சரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேற்கொண்டு அரசாங்கம் செய்திருக்கின்ற பல்வேறு காரியங்களைப் பற்றி விவாதிப்பதற்கும் பாராட்டுவதற்கும் ஆளுகின்ற கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் நல்ல தயாரிப்புகளோடு இருப்பார்கள் என்ற காரணத்தால், அரசாங்கம் இதுவரை செய்யத் தவறிய, செய்ய வேண்டிய சில காரியங்களை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சமீபகாலமாக, என்னுடைய தலைவர் திரு. மூப்பனார் அவர்களோடு பல்வேறு மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணம் சென்றபோது அங்கேயிருக்கின்ற பொதுமக்கள் கூறியிருக்கின்ற பல்வேறு கருத்துக்களை இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முதல் பிரச்சினை, கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினை. இங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பாக, கைத்தறித் துறையிலே ஏற்பட்ட நெருக்கடியின்போது தங்களுடைய தோள்களிலும், தலையிலும் கைத்தறித் துணிகளை சுமந்து சென்று தமிழகம் முழுவதும் விற்பனை செய்து, அதன்மூலமாக இந்தப் பிரச்சினையை ஒருவாறாகச் சமாளித்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு கைத்தறி நெசவாளர்களோடு தொடர்புடைய ஒரு கட்சி, இப்போது ஆட்சிக்கு வந்தபிறகு ஏற்பட்டிருக்கின்ற பூதாகரமான நெருக்கடியை இதுவரை கண்டுகொள்ளாமல் இருக்கிறது என்றால் அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். கிராமப்புறங்களிலும் சரி, நகர்ப்புறங்களிலும் சரி, கைத்தறி நெசவாளர்கள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையை இந்த அரசாங்கம் இதுவரை கண்டுகொள்ளவில்லை; அதைத் தீர்ப்பதற்கு எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

இன்னும் சொல்லப்போனால், கைத்தறித் துறையிலே பிரச்சினை இருக்கிறது என்றுதான் அரசாங்கம் சொல்லி வருகிறது. இந்த அரசாங்கம் ஒரு கட்டியக்காரனாக இருப்பதை நான் விரும்பவில்லை. மாறாக



செய்திருக்கிறீர்கள் என்கிற கேள்வியை எழுப்புவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கு முன்பு, மத்திய கூட்டுறவு வங்கிகள், கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான காசுக் கடனை அளித்து வந்தார்கள். ஆனால், இப்போது அதைப்போல அளிக்கின்ற ஒரு முறையை இந்த அரசாங்கம் நிறுத்தியிருக்கிறது. 50 சதவிகிதம் தருகிறார்கள்; ஆனால் அது போதுமானது அல்ல. 100 சதவிகிதம் காசுக் கடனை வழங்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இலவச சீருடைத் திட்டம் இருக்கிறது; இலவச வேட்டி-சேலைத் திட்டம் இருக்கிறது. இவற்றிற்கு கைத்தறித் துணிகளை நீங்கள் பயன்படுத்துவீர்களானால் கைத்தறித் தொழிலாளர்களுடைய பிரச்சினை 90 சதவிகிதம் தீர்க்கப்படும். உதாரணமாக, ஒவ்வொரு ஆண்டும் நாம் இலவச வேட்டி—சேலை தருகிறோம். இந்த ஆண்டு 75 இலட்சம் வேட்டிகள் தருவதாக அரசாங்கம் உறுதி அளித்திருக்கிறது. ஆனால் 15.6 இலட்சம் வேட்டிகளைத்தான் கைத்தறியிலிருந்து பெறுகிறோம். மீதமுள்ள 59.4 இலட்சம் வேட்டிகள், விசைத்தறி நெசவாளர்களிடமிருந்து பெறப்படுகின்றன. நான் இந்த அரசாங்கத்தைப் பார்த்துக் கேட்கிறேன்; கைத்தறியிலே இவ்வளவு பெரிய பிரச்சினை இருக்கும்போது, கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கிறபோது, நீங்கள் 59.4 இலட்சம் வேட்டிகளை விசைத்தறி நெசவாளர்களிடமிருந்து பெறுவதனுடைய நோக்கம் என்ன? உண்மையிலேயே இந்த அரசாங்கத்திற்கு கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆர்வம் இருக்குமானால், கைத்தறி வேட்டிகளை வாங்கி இலவச சீருடையாகத் தரலாம், இலவச வேட்டி-சேலை வழங்கும் திட்டத்தில் தரலாம். எனவே இதை அரசாங்கம் கவனத்திலே கொள்ளவேண்டும். இரண்டாவதாக, அரசாங்கத்திலே, அந்தத் துறையிலே இருக்கிறவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், 'எங்களுக்குத் தேவைப்படுகிறபோது அந்த அளவுக்கு, கைத்தறி வேட்டிகள் கிடைப்பதில்லை' என்கிறார்கள். இது ஒரு தவறான வாதம்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ச. அழகிரி:** நான் முடித்து விடுகிறேன். இலவச வேட்டி-சேலை தருவது என்பது, அரசாங்கத்தினுடைய கொள்கை. அவற்றை

ஒவ்வோராண்டும் நாம் தருகிறோம். எனவே, கைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு, இந்த ஆண்டு இவ்வளவு கைத்தறி வேட்டி - சேலைகள் தேவைப்படுகின்றன; அவற்றை உற்பத்தி செய்து தாருங்கள் என்று சொன்னால், ஒரு சரியான உற்பத்தி முறை அங்கே இருக்கும். ஆனால், அரசாங்கத்திலே என்ன செய்கிறார்கள்? இன்னும் ஒரு மாதத்திலே எங்களுக்கு 10 இலட்சம் வேட்டிகள் வேண்டும் என்று சொன்னால், நிச்சயமாக அவர்களால் தர முடியாது. அவர்களால் முடியாது என்பதைத் தெரிந்து கொண்டுதான் சம்பந்தப்பட்ட துறையிலே இருக்கிற அதிகாரிகள், கடைசி நேரத்தில் வேட்டியை உற்பத்தி செய்து தர வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களால் தர இயலவில்லை. எனவே, அந்தவகையில், அரசாங்கம் தன்னுடைய தவறைத் திருத்திக் கொண்டு....

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான செய்தி. ஏனென்றால், கைத்தறித் துணிகள் தேக்கம் இருக்கிறபோது, விசைத் தறியிலே ஏன் உற்பத்தி செய்யவேண்டுமென்ற கேள்வி இங்கே எழுப்பப்பட்டு இருக்கிறபோது, அதற்கு ஒரு முறையான நிலையை எப்படி எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்தாக வேண்டும். ஆட்சிப் பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொண்ட நேரத்திலே ஒரு குறுகிய காலத்திலேயே துணிகளை உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டது. அன்றுகூட, கைத்தறிக்கு எந்த அளவுக்குத் தேவையோ அதை அந்த ஆண்டு முழுவதற்கும் ஒதுக்கிவிட்டு, அதற்குமேல் தேவைப்பட்டதைத்தான் விசைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நாம் உற்பத்தி செய்தோம். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், நமக்கு 12 மாத காலம் அவகாசம் இருந்த காரணத்தினால், தொடர்ந்து கைத்தறிக்குத் தேவையான அளவுக்கு உற்பத்தியைக் கொடுத்துவிட்டு, அதற்குமேல் தேவைப்பட்டவற்றைத்தான நாம் விசைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்திருக்கிறோம். இந்த ஆண்டு கடைசி நேரத்திலே திடீரென்று 10 இலட்சம், 15 இலட்சம் வேட்டிகள் வேண்டும் என்று கேட்ட காரணத்தினால், விசைத்தறிக்குத் தர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்ற நிலை இல்லை. ஏனென்றால் ஆரம்பத்திலேயே திட்டமிடப்பட்டுவிட்டது. 75 இலட்சம் வேட்டி-சேலைகள் என்ற அளவிற்கு ஏற்கெனவே ஒரு புள்ளிவிவரம் கையில் இருந்த



காரணத்தினால், தொடர்ந்து 12 மாத கால அளவு உற்பத்தி செய்ய வாய்ப்பு இருந்தது. கைத்தறிக்கு ஒதுக்கப்பட்டது போக மீதிதான் விசைத்தறிச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டது. ஏதோ குறுகிய காலத்திலே கேட்ட காரணத்தினால், அதையொட்டி நாங்கள் வேறுவிதத்திலே ஒரு அணுகுமுறையைக் கையாளவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தேக்கம் அடைந்த கைத்தறித் துணிகள் தமிழகத்திலே ஏறத்தாழ 350 கோடி ரூபாய் அளவிலே இருந்தன. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 சதவிகிதத்தை அதற்காக கூட்டி அளித்தார்கள். அவ்வாறு கூட்டி அளித்தும் 3 மாத காலத்தில் ரூ. 100 கோடி அளவிலேதான் விற்பனை நடைபெற்றது. மீண்டும் முதல்வர் அவர்களுக்கு இதுகுறித்து நான் எழுதிக் கேட்டு, மீண்டும் மூன்று மாத காலத்திற்குத் தள்ளுபடி கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இன்று ஏறத்தாழ 250 கோடி ரூபாய் அளவுக்கு, கைத்தறித் துறையிலே உற்பத்தி செய்யப்பட்டு தேங்கியிருந்த துணிகள் கொடுக்கப்பட்டு விட்டன. இனிமேல் 10 சதவிகிதம் தள்ளுபடி கூட்டிக் கொடுக்கத் தேவையில்லை என்ற நிலைமைக்குப்பின் காஞ்சிபுரம், சேலம், மற்றும் அனைத்துப் பகுதிகளிலும் தேக்கம் என்ற நிலை இன்று கைத்தறியிலே இல்லை. ஆனால், குறிஞ்சிப்பாடியிலே, ஏற்றுமதிக்கு உற்பத்தியாகும் லுங்கிகளிலேதான் தேக்கம் ஏற்பட்டிருக்கிறதேயொழிய வேறல்ல. அதையும்கூட நான் நம்முடைய முதன்மைச் செயலாளருக்கு ஒரு கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறேன். வங்காள தேசம் போன்ற நாடுகளிலே பெரும் சேதம் ஏற்படுகிறபோது, நமது அரசு கொடுக்கின்ற அந்த நிதியைக்கூட இப்படி லுங்கிகளாக வழங்கிவிட்டால் அப்படிப்பட்ட தேக்கம் ஏற்படாது; அதை எதிர்காலத்தில் யோசிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். குறிஞ்சிப்பாடியிலே லுங்கிகள் தேக்கத்தைத் தவிர, தமிழகத்திலே கைத்தறியிலே இன்று எந்தத் தேக்கமும் இல்லை; நெசவாளர்கள் மனநிறைவோடு இருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுகின்ற விளக்கம் முற்றிலுமாகப் புரியவில்லை. இலவச வேட்டி-சேலைகளாக 75 இலட்சம் கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. இவற்றை அரசு கொள்முதல் செய்கிறது. எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொல்லும்போது, 15 இலட்சம் மட்டும்தான் கைத்தறியிலேயிருந்து வாங்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் 12

மாத காலத்திற்கும் அவர்களிடம் உற்பத்தி செய்யச் சொல்லி, கொடுக்கச் சொல்லியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், தமிழகத்திலே கைத்தறித் துறையால் 15 இலட்சம் வேட்டிகளுக்கு மேல் அவர்களால் தயார் செய்ய முடியவில்லையா? அது ஏன்? 75 இலட்சத்திற்கும் அவர்களுக்கு order கொடுக்கப்பட்டதா என்பதை விளக்கினால் நன்றாக இருக்கும்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 15 இலட்சம் என்பதுபற்றி என்னிடம் உள்ள புள்ளி விவரத்தைக் கொண்டு இப்போது என்னால் சொல்ல இயலாது. ஆனால், 12 மாத கால அளவிற்குக் கைத்தறித் துறைக்கு எவ்வளவு தேவையோ அவற்றை ஒதுக்கி விடுகிறார்கள். அதற்குமேல் தேவைப்படுகிறவைகளுக்குத்தான் நாம் விசைத் தறியினுடைய உதவியை நாடுகிறோமே ஒழிய இதில் ஏதோ காலதாமதமோ அல்லது திடீரென்று கேட்டு நாம் அதனுடைய உற்பத்தியை அதிகப்படுத்த முடியாமல் வெளியில் வாங்கக்கூடிய சூழ்நிலையோ முற்றிலும் இல்லை. உண்மையான புள்ளிவிவரங்கள் துல்லியமாக வேண்டுமென்றால் மாதா மாதம் எவ்வளவு உற்பத்தி, எப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது, எப்படி அந்த உற்பத்தி நடைபெறுகிறது என்ற விவரத்தை—ஒரு கேள்விக்கு பதிலளிப்பதன் மூலமோ அல்லது ஒரு கவன ஈர்ப்புக்கு பதிலளிப்பதன் மூலமோ நாளையோ அல்லது நாளை மறுநாளோ நீங்கள் அதற்காக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக அது எப்படி நடைபெற்றிருக்கிறது, அது எப்படி நடைபெற்று வருகிறது என்ற முழு விளக்கத்தை என்னால் அளிக்க இயலும். நான் இப்போது சொல்வது எந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையை அணுகிக்கொண்டு இந்தத் துறை செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்ற அடிப்படையிலேதான் எண்ணிக்கையைச் சொல்லியிருக்கிறேனே ஒழிய, முழுமையான விவரம் தெரிய வேண்டுமென்றால் மாத வாரியாக எந்தெந்த சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட பின்பு மீதியை நாம் விசைத் தறிக்கு தேவைக்கேற்றபடி ஒதுக்க இருக்கிறோம் என்பதை கவன ஈர்ப்புக்கு பதிலளிப்பதன் மூலம் விளக்கமாகத் தெரிவிக்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச வேட்டி-சேலைகளுக்கு 157 கோடி ரூபாயை நாம் ஒதுக்கியிருக்கிறோம். இந்தத் தொகையை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு துறை பிரித்துக் கொடுத்திருக்குமேயானால் இன்றைக்கு



கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே பணப் பற்றாக்குறை என்பதே இருக்காது. ஒன்றை மட்டும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த விவாதத்தை நீட்டிக்க நான் விரும்பவில்லை. நீங்கள் சொல்வது போல எல்லாம் நடந்திருக்குமேயானால் கைத்தறித் துறையிலே இந்தத் தேக்கமே வந்திருக்காது. கைத்தறித் துறையில் இப்போது ஏற்பட்டிருக்கிற தேக்கம் என்ன? நெசவாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள்; கண்ணீர் சிந்துகிறார்கள். தற்கொலைக்குச் சமமான சூழ்நிலை அங்கே நிலவுகிறது. எனவே, அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தி இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று முடிவு செய்யுமேயானால் நிச்சயம் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும். இது அரசாங்கத்தால் முடியக்கூடியது. முடியாது, முடியாது என்று சொல்லிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? எப்படியாவது முடித்துக் கொடுக்க வேண்டும். கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டியது ஓர் அரசாங்கத்தினுடைய கடமை. அந்தக் கடமையிலிருந்து அரசு தவறுமேயானால் அது செயல்படவில்லை என்றுதான் அர்த்தமே யொழிய அதற்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருப்பது முறையல்ல என்பதை நான் இந்தநேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் இன்னும் பேசவே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறுக்கீடுகள் எல்லாம் சேர்த்து 15 நிமிடங்கள் ஆகின்றன. இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ச. அழகிரி:** நான் இன்னும் நிறைய பேச வேண்டியிருக்கிறது. இரண்டு நிமிடத்தில் முடிப்பது கடினம். அடுத்ததாக விவசாயிகளுடைய பிரச்சினை இருக்கிறது. விவசாயிகளுடைய பிரச்சினையிலே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாக, கரும்பு விவசாயிகளுக்கு முழுமையான பணத்தை கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தருவது கிடையாது. அதிலே பாக்கி வைத்து விடுகின்றன. ஆனால், அதேநேரத்தில் கரும்பு விவசாயிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் பெறுகிறபோது எப்போது அவர்கள் அதைத் திருப்பிச் செலுத்துகிறார்களோ அதுவரை அவர்கள் வட்டி தர வேண்டியிருக்கிறது. எனவே அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தி, கரும்பு விவசாயிகளுக்கு முழுமையான பணத்தை எப்போது கொடுக்கிறார்களோ அப்போது அதற்கான வட்டியையும் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் கரும்பு விவசாயிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு பணம் செலுத்துகிறவரை அதற்கு வட்டி செலுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் கரும்பு

விவசாயிகளுடைய பணம் கூட்டுறவு ஆலைகளிலே இருப்பதற்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் வட்டி கொடுப்பது கிடையாது. எனவே, அதற்கு வட்டி தருவதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேற்றே சொன்னேன். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்கூட பதில் சொன்னார்கள். 1996 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பினால் பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டது. அதற்கான Insurance தொகை இதுவரை வழங்கப்படவில்லை. பொது Insurance நிறுவனத்தைக் கேட்டால் அவர்கள் கொடுத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். மாநில அரசாங்கத்தினுடைய பங்குத் தொகை போதாத காரணத்தால் விவசாயிகளுக்கு இதுவரை அந்த Insurance தொகை கிடைக்கவில்லை. அது கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பொது விநியோகத் திட்டத்திலே கடலூர் மாவட்டத்தில் 70 சதவிகிதம் அரிசிதான் வழங்கப்படுகிறது. 100 சதவிகிதம் வழங்கப்படுவதில்லை. எனவே அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மூன்றாவதாக கூட்டுறவுத் தேர்தல் நடைபெற்றது. கூட்டுறவுத் தேர்தலை நடத்தியதிலே அரசாங்கம் முறையாக நடந்துகொள்ளவில்லை என்பது எங்களுடைய கருத்து. நாங்கள் இப்படிச் சொல்கிறபோது ஆளுகிற தரப்பைச் சேர்ந்த நண்பர்கள், 'தமிழ் மாநில காங்கிரசுக்கு பங்கு தரவில்லை என்பதற்காக நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்கள்' என்று சொல்கிறார்கள். எங்களுடைய நோக்கம் அதுவல்ல. அரசியல் ரீதியாக அதில் யாரும் பங்கு கேட்கவில்லை. எங்களுடைய கோரிக்கை எல்லாம் கூட்டுறவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே இடம் பெற வேண்டும் என்பதுதான்; முறையாக அந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்பதுதான்.

முற்பகல் 11-30

உதாரணமாக ஈரோடு மாவட்டத்திலே தேர்தல் நடைபெற்றது. தேர்தல் அறிவித்தபிறகு, சற்றேறக்குறைய 40 கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களை புதியதாக அமைப்பதற்கு அங்கே அனுமதியளித்திருக்கிறார்கள். தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு எப்படி அந்த மாதிரி அனுமதி வழங்கலாம்? எனவே, அரசாங்கம் இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் அரசாங்கம் பல நல்ல விஷயங்களைச் செய்து, நல்ல நிர்வாகத்தைத் தந்து, நல்ல பெயரை எடுத்திருந்தது. இந்தக் கூட்டுறவுத் தேர்தலிலே



அது பாழ்பட்டுப் போயிருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டு, பத்திரிகைகளிலும் சரி, மற்ற இடங்களிலும் சரி, தொடர்ந்து தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், மற்றவர்களும் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் சரியாக நடைபெறவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். தொடக்க அளவிலே நடைபெறுகின்றபோது அந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலே அவர்கள் பங்கு பெற்றிருப்பார்களேயானால் தொடர்ந்து பல இடங்களிலே அவர்களால் வந்திருக்க முடியும். குறிப்பாக, தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின் நேரடிக் கண்காணிப்பிலே 7,600-க்கும் மேற்பட்ட சங்கங்கள் இயங்குகின்றன. அதிலே, ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்றது என்பது 48 சதவிகிதம் மட்டும்தான். சுயேட்சையாளர்கள் கிட்டத்தட்ட 30 சதவிகிதம் வெற்றி பெற்றிருக்கிறார்கள். மற்ற கட்சியினைச் சேர்ந்தவர்கள், பிற இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆனால், ஒட்டுமொத்தமாக கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலே முறைகேடு நடைபெற்றிருக்கிறது என்று சொல்கிறார்கள். குறிப்பிட்டு ஏதாவது ஓரிடத்தில் நடந்த சம்பவத்தைச் சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். இதிலேகூட, பல இடங்களிலே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் இணைந்தே தேர்தலை நடத்தியிருக்கிறோம். எனவே, அங்கேயிருக்கின்ற உங்களுடைய உறுப்பினர்களை, உங்களுடைய தலைவர்களைக் கேட்டால், அந்தத் தேர்தலிலே தவறு நடைபெற்றிருக்கிறதா என்பதை நீங்கள் அறிந்துகொள்ள முடியும். கிட்டத்தட்ட தமிழ்நாட்டிலே 30 ஆயிரம் இடங்களிலே 30 ஆயிரம் சங்கங்கள் தொடக்க நிலையிலே இருந்து, அவைகளுக்குத் தேர்தல் நடைபெற்று வருகிறது. ஏதாவது ஓரிடத்திலே தவறு நடந்திருக்குமானால்கூட, நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். குறிப்பாக, பல இடங்களிலே தேர்தல் நேரத்திலே மனு செய்ய வந்தவர்கள், மனு செய்யாமல் போய், நீதிமன்றத்திலே தடையாணை வாங்குகின்ற நிலையெல்லாம் இருந்துகொண்டிருக்கிறது. நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். எந்த இடத்திலே, எந்த மாதிரி தவறு நடந்திருக்கிறது என்று சொன்னால், அது தவறு என்றால், நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்.

[1998 நவம்பர் 26

**திரு. ச. அழகிரி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஈரோடு மாவட்டத்திலே, தேர்தல் அறிவித்தபிறகு புதிய சங்கங்களைத் தோற்றுவிப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள். அது தவறு. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எல்லோரும் ஓர் அணியிலேதான்....

**திரு. ச. அழகிரி :** தமிழ் மாநில காங்கிரஸ் பற்றிப் பேசவில்லை. நான் அரசியல் ரீதியாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** தவறு நடக்கவில்லை. எந்த சங்கமுமே பால் வழங்காத சங்கம் இல்லை. அதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். பால் உற்பத்தி செய்து, பால் கொடுக்கின்ற சங்கம்தான் இருக்கின்றதேயொழிய, ஈரோடு மாவட்டத்திலே வெத்துச் சங்கங்கள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) 20, 21 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். பிற்பகல் 1.30 மணிக்குள் மற்ற உறுப்பினர்களும் பேசி முடிக்க வேண்டும். (குறுக்கீடு) சரி, நீங்கள் இன்னும் ஒரு நிமிடத்திலே பேசி முடித்துக்கொள்ளுங்கள். திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இரண்டு பெரிய பிரச்சினைகள் என்னவென்றால், ஜவுளித் தொழிலும், சர்க்கரைத் தொழிலும்தான். ஜவுளித் தொழிலைப் பொறுத்தவரை, இந்தியாவினுடைய மொத்த நூல் உற்பத்தியிலே 50 சதவிகிதத்தைத் தமிழ்நாட்டிலிருந்து நாம் தருகிறோம். ஆனால், இன்றைக்கு அந்த ஜவுளித் தொழில் பெருவாரியாகச் சிதைந்து போயிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும். குறைந்தபட்சம் அவர்களுக்கென்று ஒரு சலுகை அளிக்கலாம். உதாரணமாக, நடைமுறை மூலதனம் குறையாமல் இருக்க, மின்சார வாரியம் கேட்கும் கூடுதல் வைப்புத் தொகை (Additional Security Deposit) வசூலை 5 ஆண்டுகள் தள்ளி வைக்கலாம். அதேபோல மின்சார வாரியத்திலே Sur-charge வாங்குகிறார்கள். காலை 6 மணியிலிருந்து 9 மணி வரையும், மாலை 6 மணியிலிருந்து 9 மணி வரையும் ஓட்டுகின்றவர்களுக்கு 20 சதவிகிதம்



1998 நவம்பர் 26] [திரு. ச. அழகிரி]

Sur-charge போடுகிறார்கள். அதற்கு ஒரு நீக்கம் கொடுக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ச. அழகிரி:** நான் ஐந்து நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படிச் சொல்லிச் சொல்லி, உங்களுடைய உரையை நீட்டிக்கொண்டே போகிறீர்கள்.

**திரு. ச. அழகிரி:** குறுக்கீடுகள் வந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) குறுக்கீடுகளையெல்லாம் சேர்த்து எவ்வளவு நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள் என்பதைப் பாருங்கள். 22 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. பிற்பகல் 1-30 மணிக்குள் எல்லோரும் பேசி முடிக்க வேண்டும். திரு. ஜி. பழனிசாமி அவர்களைப் பேச அழைக்கின்றேன். (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, நீங்கள் பேசவில்லையென்றால், அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டிவரும். (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11-35

**திரு. ச. அழகிரி:** உரிமையை மறுப்பது ஜனநாயகம் ஆகாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 22 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். அப்படியிருக்கும்போது ஜனநாயக உரிமையை மறுக்கிறேன் என்று கூறுகிறீர்கள். இருப்பினும் ஒரு நிமிடத்திற்குள் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சட்டமன்ற முற்றுகைப் போராட்டம் என்று சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் கூறுகிறார்கள். அந்தப் பிரச்சினையெல்லாம் இங்கே விவாதிக்கப்பட்டது. அவர்களுடைய பிரச்சினையை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதிலே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாம் நிறைய புதிய தொழில்களை கொண்டுவருவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில் நம்மிடம் இருக்கின்ற பழைய தொழில்கள் நம்முடைய கையைவிட்டுப் போய்க்கொண்டிருக்கின்றன. ஏராளமான ஜவுளி ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதேபோல சர்க்கரைத் தொழிற்சாலைகள்

மூடப்படுகின்ற சூழ்நிலை வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அரசாங்கம் அதிலும் கவனம் செலுத்த வேண்டும். ஒரு பாடல்கூட உண்டு.

"பொய்நெல்லைக் குத்தியே பொங்க நினைப்பவள்
கைநெல்லும் இழந்தாள் அம்மா"

என்று. அதுபோல இருக்கின்ற தொழிற்சாலைகளை விட்டுவிட்டு, புதிய தொழிற்சாலைகளைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லிக் கொண்டிருப்பது ஏற்புடையதல்ல. எனவே இருக்கின்ற தொழிற்சாலைகள் காப்பாற்றப்பட வேண்டும். சர்க்கரைத் தொழிலிலே இன்றைக்கு இருக்கின்ற நெருக்கடி என்னவென்றால், பாகிஸ்தானிலிருந்து சர்க்கரையை குறைந்த விலைக்கு இறக்குமதி செய்கிறோம். அப்படிச் செய்கிறபோது, இந்திய சர்க்கரை, இந்திய மார்க்கெட்டில் விற்பனை ஆகாமல் இருக்கிறது. எனவே பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்கிற சர்க்கரைக்கு ஓர் இறக்குமதி வரியையாவது விதிக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி இல்லையென்றால் இந்திய சர்க்கரைத் தொழில் முழுவதுமாக நசிந்துவிடும். குறிப்பாக தமிழகத்திலே, அதனுடைய பாதிப்பு அதிகமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்: சர்க்கரைத் தொழில் கசக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீட்டின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை நான் கூற விழைகிறேன். பொதுவாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்துள்ள இந்த முதல் துணை மதிப்பீட்டில் என்றும் இல்லாத அளவுக்கு தேவையற்ற செலவுகள் இல்லாமல் தேவையான செலவுகளை மட்டுமே காண முடிகிறது. பொதுவாக ஏழையெளிய மக்களுடைய பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, பால் விலையிலிருந்து இலவச மின்சாரம், நெசவாளர்களுக்கு, முதியோர்களுக்கு உதவித் தொகை, நலிந்திருக்கக்கூடிய கூட்டுறவு நூற்பாலைகளைச் சீரமைக்கின்ற பணிகள் போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து இந்தத் துணை மதிப்பீட்டில் செலவு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

இதுபோன்று முன்பு இருந்த அரசு அளித்த துணை மதிப்பீட்டைப் படித்தோம் என்றால், செலவு செய்யப்பட்டிருக்கின்ற செலவினங்களைக்கூட புரிந்துகொள்ள முடியாத காலம் இருந்தது.



எனவே தேவையான செலவுகளை மட்டும் செய்திருப்பதை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவிரிப் பாசனம் பெறக்கூடிய பகுதிகளின் உயிர்நாடிப் பிரச்சினையான காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணுவதற்கு கர்நாடக அரசோடு சேர்ந்து பாரதப் பிரதமர் அவர்களிடத்திலே அந்தப் பிரச்சினையைப் பற்றி பேசி சுமூகமான முறையில் தீர்வு கண்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில், நாகை மாவட்டத்தில், திருவாரூர் மாவட்டத்தில், வேளாண்மை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் நித்தம் நித்தம் செத்துக்கொண்டிருந்த நிலைமைகளை மாற்றி— முழுவதுமாக காவிரிப் பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டாலும்—இடையிலே ஏற்பட்ட அந்த உடன்பாட்டினால், விவசாயிகளுடைய வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. முதல்வர் அவர்களுடைய இந்த முயற்சியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்; வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, நெசவாளர்கள் பிரச்சினை, நீண்டகாலமாக தீர்வு காண முடியாமல் இருந்தது. அதற்கு இந்த அவையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு நலிந்திருக்கின்ற நெசவுத் தொழில்களை பாதுகாக்கின்ற வகையில் பரிந்துரை செய்திருப்பதும், அதை இந்த அரசு பரிசீலித்திருப்பதும் வரவேற்கத்தக்கது. அதற்கு 43 கோடியே 26 இலட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய குறிப்பின்படி 30 கோடியே 76 இலட்சம் முன்பணமாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்பட வேண்டிய பாக்கி சுமார் 8 கோடி ரூபாய் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பதாகத் தெரிகிறது. 1996-97 ஆம் ஆண்டுக்கு என்று இருக்கின்ற தொகையை உடனடியாக வழங்க வேண்டும். அப்படி வழங்குவதன் மூலமாக நலிந்திருக்கின்ற கூட்டுறவு அமைப்புகள் இன்னும் தெளிவுபடுத்தப்படுகின்ற நல்ல வாய்ப்புகள் உருவாகும். அதை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

அதேபோன்று கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களின்

தொகுதிகளில் ஓரிடத்தில் அலுவலகம் கட்டுவது குறித்து அறிவித்தார்கள். அதுகுறித்து இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் விவரம் தென்படவில்லை அதற்குரிய தொகையை ஒதுக்கித்தர வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கென ஓர் இடம் இருந்தால் மக்களுடைய பிரதிநிதிகளை பொதுமக்கள் அணுகி குறைகளைச் சொல்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டிற்காகத் தரப்படும் தொகையை 25 இலட்சத்திலிருந்து 35 இலட்சமாக அதிகப்படுத்தியிருப்பதனால், மக்களுடைய மனுக்களைப் பெற்று உரிய செலவுகளைச் செய்வதற்கு நல்ல வாய்ப்பை உருவாக்குவதாக அது அமையும் என்று நான் கருதுகிறேன்.

அதேபோல எங்களுடைய மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் ஆறுகளில் தூர் வாரும் பணி சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. அதிலே முழுமையாகப் பார்த்தால் பெரிய பணிகளிலிருந்து சிறிய வேலைகள் வரை, கால்வாய்களில் தூர் எடுப்பதிலே முற்றிலுமாக இயந்திரங்கள் மூலமாகச் செயல்படக்கூடிய நிலையை நம்மால் காண முடிகிறது. வேளாண்மைத் தொழிலைச் சார்ந்திருக்கின்ற பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய வாழ்க்கைக்கு உதவும் வகையில், 'Man power' பயன்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று சொன்னால், சிறிய கால்வாய்களை தூர் எடுக்கிறபோது ஆட்களை வைத்து அந்தப் பணியிலே அரசு ஈடுபட வேண்டும். முற்றிலுமாக இயந்திரங்களைப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு இருக்கிறது. இதன்மூலமாக தமிழகத்திலே வறுமையைப் போக்க முடியாத நிலையிருக்கிறது. எனவே சிறிய கால்வாய்களை, வாய்க்கால்களை, ஆறுகளைத் தூர் எடுக்கிறபோது, சீமைக்காட்டாமணக்குகளை அகற்றுகிறபோது 'Man power' பயன்படுத்துவதுதான் சரியாக இருக்கும். இதனால் நலிந்த தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்க முடியும். இதை அரசு உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். எதிர்காலத் திட்டங்களிலே அதுபோன்று செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்றுதான் தஞ்சை, நாகை மாவட்டங்களில் தொடர்ந்து இதுபோன்று தூர் எடுக்கின்ற கால்வாய்களைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால், நல்ல பழம் தரக்கூடிய மரங்களை நடுவதற்கான முயற்சியிலே அரசு ஈடுபட வேண்டும். பனங்கன்று போன்ற கன்றுகளை அங்கே நட்டோம் என்று சொன்னால்



ஆண்டுதோறும் ஏற்படுகின்ற பல கோடி ரூபாய் நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு, கரையைப் பாதுகாப்பதற்கு வசதியாக அமையும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல விவசாயத் தொழிலாளர்களுக்காக—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் மாவட்டத்தில் நடந்த மாநில மாநாட்டில் கலந்துகொண்டபோது—ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் 'Kolappan Committee' என்று ஒன்று அமைக்கப்பட்டு, அதனுடைய சிபாரிசுகள் அரசுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த சிபாரிசுகள் அமல்படுத்தப்படாமல் இருக்கின்றன. அவற்றை அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். ...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இடையிலே பதில் சொல்வதற்கு நேரம் இருக்காது என்ற காரணத்தினால், துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகச் சொல்ல விரும்புகின்றேன். கோலப்பன் குழுவினுடைய சிபாரிசு அண்மையிலே அமைச்சரவையிலே வைத்து விவாதிக்கப்பட்டது. விரைவில் அதுபற்றிய அறிவிப்பை வெளியிட அரசு மேலும் பரிசீலனையிலே ஈடுபட்டிருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சருக்கு மிக்க நன்றி.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதேபோல நம்முடைய பழனிசாமி அவர்களும் நல்லக்கண்ணு அவர்களும் சந்தித்து உடனடியாக அதுபற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அமைச்சரவையிலே விவாதிக்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மிக்க நன்றி அதேபோல எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். கூட்டுறவு அமைப்புகளில் பல்வேறு கட்டங்களில் தேர்தல் நடந்திருக்கிறது. அது ஏதோ ஒரு பக்கத்தினுடைய நாணயம் போன்று அமைந்திருக்கிறது. அந்த நிலை மாற்றப்பட வேண்டும். குறிப்பாக, மனு செய்யக்கூடியவர்கள், இயக்குநராக ஆகக்கூடியவர்கள்கூட, மனுக்களைப் பெற்று, அவர்கள் Nomination போடும்போது, சில இடங்களிலே அனுமதிக்க முடியாத நிலையிருந்தது. எல்லா மாவட்டங்களையும் நான் ஒட்டுமொத்தமாகக் குறிப்பிடவில்லை. சில இடங்களிலே கட்டாயமாக ஒரு தோழமைக் கட்சி, கூட்டணிக் கட்சி என்று அப்படியொரு வாய்ப்பு கொடுத்திருந்து

அந்தத் தேர்தல் நடந்திருந்தால், அது ஒரு பக்கத்தினுடைய நாணயமாக இருந்திருக்காது; இருபக்க நாணயமாக அமைந்திருக்கும். எனவே அரசு வரக்கூடிய காலங்களிலே அதுபோலச் செய்ய வேண்டுமென்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* முடித்துவிடுகிறேன்.

*முற்பகல் 11-45*

மாண்புமிகு முதல்வர் அவர்கள் துணை நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கின்றார்கள். இருந்தாலும் தமிழக அரசு வருவாயினை ஈட்டுவதற்கு ஓர் ஆலோசனையைக் கூற நான் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழகம் முழுவதும் மதுக் கடைகள் இருக்கின்றன. இந்த மதுக்கடைகளில் அரசு, 'Bar'–களை அனுமதித்தால் சுமார் அறுபது கோடி ரூபாயிலிருந்து எழுபத்தைந்து கோடி ரூபாய் வரை அரசு கஜானாவிற்கு நிதி வரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இப்போது அந்தப் பணம் வராமல் வேறு வகையிலே செல்கின்றது. அதனால், 'Bar'–களை அனுமதித்தால் அரசுக்குக் கிட்டத்தட்ட எழுபத்தைந்து கோடி ரூபாய் கிடைக்கும். அந்தப் பணம் அரசாங்கத்தின் கண் எதிரே கிடைக்காமல் போகிறது. எல்லா வருவாய்களையும் கூர்ந்து கவனிக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை ஏன் விட்டு வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே, இதையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப அட்டைகளைப் பொறுத்தவரையில் சில இடங்களில் தாமதமாகக் கிடைத்திருந்தாலும் ஒரு நபர் உள்ள குடும்ப அட்டைகளை வழங்கக்கூடாது என்ற ஓர் உத்தரவு இருக்கிறது. அதனால் தனி நபர் சில பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே ஒரு நபர் இருக்கக்கூடிய குடும்பத்திற்கும் குறிப்பாக, பெண்களாக இருக்கக்கூடியவர்களுக்கும் குடும்ப அட்டைகளை வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தருமபுரி மாவட்டத்தில் தொப்பையூருக்கு அருகே தருமபுரிக்கும் சேலத்திற்கும் இடையிலான பாலத்தைப் பற்றி பத்திரிகைகளிலே பிரச்சினையாக வந்து கொண்டிருக்கிறது. இதனால் அந்தப் பகுதியிலே ஆயிரக்கணக்கான மக்கள் நடப்பதற்குப் பாலம் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே பாலத்தினை உடனடியாக அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.... *(மணியடிக்கப்பெற்றது)*



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

***திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாக பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற இந்த நிலையில், 50 ஆண்டுகால சுதந்திர வரலாற்றில் இல்லாத மாபெரும் சாதனைகளை, யாரும் செய்யாத சாதனைகளைச் செய்து, அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்காமல், அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்தித்து நிதிநிலை அறிக்கையினை வெளியிட்டு, இப்போது ரூ.848.56 கோடிக்கு முதல் துணை மானியக் கோரிக்கையினை வெளியிட்டிருக்கின்றார்கள். மூன்று முறை முதல்வராக இருந்ததைவிட இந்த நான்காவது முறை முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் வரலாற்றில் இல்லாதவற்றைச் செய்திருக்கிறார் என்று நான் சொல்வதற்குக் காரணம் பலபேர், முடியவே முடியாது என்று வைத்திருந்த காவிரிப் பிரச்சினையை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசியல் அணுகுமுறையால், அரசியல் தந்திரத்தால் வெகு சாமர்த்தியமாகத் தீர்த்திருக்கிறார். விவசாயிகள் அதனால் முழுமையாகப் பலனடைந்திருக்கிறார்கள். மேலும் வரலாறு காணாத அளவிற்கு கால்வாய்கள், கண்மாய்கள் ஏரிகள் மற்றும் குளங்கள் எல்லாம் தூர் வாரப்பட்டு, அதன் காரணமாக தமிழ்நாடு உணவு உற்பத்தியிலே தன்னிறைவு பெறுவதற்கு விவசாயிகளுக்கு ஓர் ஊக்கத்தையும் மகிழ்ச்சியையும் முதல்வர் அவர்கள் அளித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

அதுபோல கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரவே வராது, அதை வைத்து அரசியல் நடத்தலாமா என்று எண்ணிக்கொண்டிருந்தவர்கள் ஏமாறுகிற அளவிற்கு கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வந்திருக்கிறது. அது மட்டுமல்ல. கிருஷ்ணா நதி நீரைத் தேக்கி வைப்பதற்கு இடம் இல்லாத அளவிற்கு தண்ணீர் வந்ததால், புறநகர்ப் பகுதிகளிலே இருக்கின்ற தாம்பரம் பகுதியைச் சேர்ந்த பம்மல், அனகாபுத்தூர், பொழிச்சலூர், கவுல் பசார், புழுதிவாக்கம் மற்றும் உள்ளகரம் போன்ற பகுதிகளுக்கெல்லாம் கிருஷ்ணா நதிநீரை வழங்குவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல கிருஷ்ணா நதி நீரை பம்மல் செல்கின்ற வழியில் நான் வசிக்கின்ற

மீனம்பாக்கம் பகுதிக்கும் தருவதற்கு உத்தரவிட வேண்டுமென்று இந்தநேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

தமிழகத்தை கணினி துறையில் முதல் மாநிலமாகக் கொண்டுவர வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியின் விளைவாக மிகப்பெரிய 'Software Park' ஒன்றை தாம்பரம் தொகுதியில் உருவாக்கித் தந்து இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே, பள்ளிக்கரணை பகுதியிலே ரூ.18 கோடி செலவில் மலர் பதனிட்டு ஏற்றுமதி செய்கிற நிறுவனத்தை ஆரம்பிப்பது குறித்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை விரைவுபடுத்தித் தரவேண்டுமென்று இந்தநேரத்தில் வேண்டி விரும்பிகேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள். ஜனநாயகத்தின் ஆணி வேராகத் திகழ்கின்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடந்தால்தான் மக்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும் என்ற எண்ணத்தோடு நம்முடைய முதல்வர் அவர்கள் சொன்னதைச் செய்வேன்; செய்வதைத்தான் சொல்வேன் என்ற தாரக மந்திரத்தை நிரூபித்துக்காட்டினார்கள்; உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்தினார்கள். அப்படி நடத்தியது மட்டுமல்ல, 50 ஆண்டுக் கால சுதந்திர வரலாற்றில் இதுவரையில், வருகிற வருவாயில் 8 விழுக்காடுகளை உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கித் தந்துள்ளார்கள். அதனுடைய விளைவாக உள்ளாட்சி மன்றங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், காரியங்களை ஆற்றுவதற்குரிய நிதியினையும் பல்வேறு தலைப்புகளிலே தந்ததனுடைய விளைவாக இப்போது தமிழ்நாட்டில் எந்தப் பக்கம் திரும்பினாலும், ஏரிகள் தூர் வாரப்படுகின்றன; கால்வாய்கள் தூர் வாரப்படுகின்றன; இல்லையென்றால் சாலைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற சுகாதார நிலையங்கள் சொந்தக் கட்டடங்கள் பெறுவதோடு மட்டுமல்ல, 384 ஒன்றியங்களிலேயும் 24 மணி நேரம் இயங்குகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்குகிற அந்தத் திட்டத்திலே வெற்றி பெறுகிறவகையில் அதற்குரிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.



நேற்றுகூட தாம்பரம் தொகுதியிலே அடங்கிய மேடவாக்கத்திலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடத்தினை நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர், அன்பிற்குரிய டி.ஆர். பாலு அவர்களும் சேர்ந்து திறந்து வைத்தனர். அங்கேயிருப்பது 4 ஏக்கர் இடம். ரூ.10 இலட்சத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான அந்த சிறிய கட்டடமானது, 20, 25 கிராமங்களுக்கு உதவுகிற வகையில் போதுமானதாக இல்லை என்ற காரணத்தினால், குறைந்தபட்சம் ரூ.20 இலட்சத்தை ஒதுக்கி ஒரு பெரிய மகப்பேறு அறையினை கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் நான் இந்தநேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. அரசு மருத்துவமனைகளில் மக்களுக்குத் தேவைப்படுகின்ற மருத்துவம் சரியான முறையிலே கிடைக்காதது மட்டுமல்ல, போலி மருந்துகள் வழங்கப்பட்டது மட்டுமல்ல, மருத்துவமனைகளுக்கு வருகிற புற நோயாளிகள் அல்லது ஆபத்தான நிலையிலே வருகிற நோயாளிகளுக்கு உதவ அவசர ஊர்திகள்கூட இல்லாமல் இருந்த நிலையினை மாற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோடிக்கணக்கான ரூபாயை அளித்து, அவசர ஊர்திகளை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், அந்த ஊர்திகளுக்கு Petrol, Diesel-க்கு ஒரு கட்டுப்பாடு வைத்திருக்கிறார்கள். எனவே சிகிச்சைக்காக வருகின்றவர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கூட, கட்டுப்பாடு இல்லாமல் ஊர்திகள் இயங்குவதற்கான வாய்ப்பினை அருள்கூர்ந்து உருவாக்கித் தரவேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களைக் கட்டிக்கொண்டு வருகிறீர்கள். தாம்பரம் தொகுதியிலே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. ஒன்று, 24 மணி நேரம் இயங்குகின்ற ஆரம்ப சுகாதார நிலையமாகும். அருள்கூர்ந்து மகப்பேறுக்கூடம் ஒன்றை அமைத்திடும் வகையில் அந்தப் பணியினை வெகு வேகமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரலாற்றிலே இல்லாத பணிகளைச் செய்கிறபோது 153, 154-வது வட்டங்களில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுடைய பெருமுயற்சியோடு மழைநீர் கால்வாய்களுக்கு எல்லாம் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகளை விரைவுபடுத்துவதன் மூலமாக வெள்ளப் பெருக்கத்தைத் தடுக்க முடியும். இன்றைக்கு நம்முடைய

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியில் தாம்பரம் தொகுதியிலே அடையாற்றில் ஏற்படுகின்ற வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்கு, தடுப்புச் சுவர்கள் மட்டுமல்ல, தாம்பரம் தொகுதியிலே அடங்கிய திருநீர்மலைப் பகுதியில், அடையாற்றில் ஒரு பெரிய அணையை அமைப்பதற்காக நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள், முதல்வர் அவர்களுடைய உத்தரவோடு பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். சற்றொப்ப 800 ஏக்கர் நிலப்பரப்பிலே அமைய இருக்கின்ற அந்த அணையின் பணிகளை விரைவுபடுத்தி, ஒரு மாத காலத்திலே மதிப்பீடுகள் தயார் செய்யச் சொல்லியிருப்பதாக அதிகாரிகள் மாண்புமிகு அமைச்சரிடத்திலே கூறினார்கள். ஒரு மாத காலம் ஆகிறது. அவற்றை விரைவுபடுத்தி செய்து தரவேண்டுமென்று நான் இந்தநேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தாம்பரம்-வேளச்சேரி சாலையை இணைக்கின்ற ஒரு மேம்பாலத்தை நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை விரைந்து முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை Budget-ல் எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் என்னுடைய தொகுதியில், ஸ்ரீவில்லிபுத்தூரில் இயங்கும் அனைத்து கட்டடங்களும் வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. அரசு நிலம் ஒதுக்கியிருக்கிறது. 12 ஏக்கர் சொச்சம். இது சம்பந்தமாக நான் சட்டமன்றத்தில் பலமுறை பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரிடம் மனு கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சரிடம் மனு கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு சபாநாயகர், திரு. பழனிவேல் ராஜன் அவர்கள்கூட பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆகவே, High Court–டினுடைய பரிந்துரையின் பேரில், Norms-படி எல்லாத் துறைகளினுடைய அதிகாரிகள் பரிந்துரை செய்தும், எங்கள் ஸ்ரீ வில்லிபுத்தூரில் உள்ள Court-ற்கு நிதி ஒதுக்கீடு வந்தும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக நீங்கள் நிதி ஒதுக்கமாட்டீர்கள்.



முற்பகல் 11-55

ஏற்கெனவே நான் இதுசம்பந்தமாக எங்கள் ஊரிலுள்ள பொதுமக்கள், வக்கீல்கள் போன்றவர்களோடு முதலமைச்சரையும் பார்த்து, அங்கேயும் பல போராட்டங்கள் நடத்தினோம். கடைசியாக, முதலமைச்சருடைய கவனத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று சொல்லி உண்ணாவிரதம் இருந்தோம். அவர்கள் கவனத்திற்குச் சரியாக வரவில்லைபோல் தெரிகிறது. இல்லாவிட்டாலும், மறுநாள் வீட்டுக்குப்போய் மனு கொடுப்போம் என்று சொன்னால், போலீஸ்காரர்கள் முதலமைச்சரின் வீட்டிற்கு முன்னால் உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன் என்று சொல்லி என்னை ஜெயிலிலே போட்டு அடைத்துவிட்டார்கள். நான் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்; அதைத்தான் செய்ய முடியும். ஜெயிலிலே என்னை அடைத்துப் போட்டு—மற்றவர்களையெல்லாம் காலையிலே பிடித்து இரவிலே விட்டுவிடுகிறார்கள். ஆனால் என்னைப் பழி வாங்க வேண்டுமென்று சொல்லி—நிதியும் கொடுக்கமாட்டோம்—பழி வாங்க வேண்டுமென்று நினைத்து ஜெயிலிலே போட்டுவிட்டார்கள். வேலூருக்குக் கொண்டு போகிறேன் என்று சொல்லி, சென்னை சிறைச்சாலையிலே போட்டுவிட்டார்கள். என் உயிருக்குத் தீவிரவாதிகளால் ஆபத்து இருக்கிறது என்று தெரிந்தும், நீங்கள் யாரோடு போட்டீர்கள், விடுதலைப் புலி, வெல்டிங் குமார், சேரா, அருமை அண்ணன் பாட்ஷா, ஆசிட் பேர்வழி சுர்லா ரூமிலே போய் என்னை அடைத்து வைத்துவிட்டீர்கள். இரண்டு நாள் முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. கடைசியிலே, தொகுதிக்கு நிதி கேட்டால் ஆளைக் கொன்றுவிட ஏற்பாடு செய்துவிட்டீர்கள். ஓர் எதிர்க்கட்சி சட்டமன்றத் தலைவர் என்னதான் செய்யமுடியும்? கொஞ்சம்கூட கருணை செய்யமாட்டீர்களா? அதனாலே Norms–படி எங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

**திரு. இரா. தாமரைக்கனி:** எனக்குக் கிடைக்கிறதே 10, 15 நிமிடங்கள்தான். இதிலே குறுக்கிடுவதை நான் விரும்பவில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுதியினுடைய தேவைகளைக் கேட்க, தாமரைக்கனி அவர்கள் ஒரு காரிலே வந்து, கோபாலபுரத்திலே என்னுடைய வீட்டு வாசலிலே இறங்கி, என்னைப் பார்க்க வேண்டுமென்று, ஏற்கெனவே

Interview Fix செய்து கொண்டு வந்து கேட்டால் யாரும் சிறையிலே பிடித்துப் போடமாட்டார்கள். மறியல் செய்வேன் என்று வந்தபோதுதான் அந்த நிலைமை ஏற்பட்டது.

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் மறியல் செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. உண்ணாவிரதம் என்றுதான் சொன்னேன். அன்றைக்குக் காலையிலே சேப்பாக்கத்திலே உண்ணாவிரதம் இருந்தேன். இருந்துவிட்டு, நான் வீட்டிலே இருந்தேன். மழை பெய்துகொண்டே இருந்தது. நான் சும்மா இருந்தாலும் பாருங்கள், இந்தப் போலீஸ்காரர்கள் வந்து நீங்கள் எப்போது புறப்படப்போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். 9 மணி ஆகிவிட்டது ஐயா, மழை பெயது கொண்டு இருக்கிறது, ஆட்களை எல்லாம் ஊருக்கு அனுப்பிவிட்டேன் என்று சொன்னாலும், நான் சர்க்கரை வியாதிக்கு Insulin போட்டுக்கொள்ளப்போனால், அங்கே வருகிறார்கள். Shaving செய்யப் போனால் பின்னால் வருகிறார்கள், எப்போது புறப்படுகிறீர்கள் என்று கேட்டு, போகவில்லை ஐயா என்று சொன்னாலும், என்னைப் பிடித்து வம்பிலே மாட்டிவிட்டு, கடைசியிலே நானும் Auto பிடித்துக்கொண்டு வாருங்கள் என்று வீறாப்பாக கோஷம் எல்லாம் போட்டோம். கடைசியிலே நீங்கள் என்னை ஒன்றுமே கவனிக்கவில்லை, நிதியும் ஒதுக்கவில்லை. இது முதலமைச்சருக்கு நன்றாக இல்லை. எல்லா Departments-ம் பரிந்துரை செய்திருக்கின்றன, High Court-ம் பரிந்துரை செய்திருக்கிறது. தமிழக சர்க்கார் நிதியிலும் கொடுங்கள், மத்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கிற நிதியிலும் Priority கொடுங்கள் என்று சொல்லி High Court-ம் பரிந்துரை செய்திருக்கிறது. ஏன்தான் இந்தமாதிரி செய்கிறீர்கள்? மத்திய சர்க்காரிடமிருந்து 10 கோடி நிதி வந்திருக்கிறது தமிழக சர்க்காருக்கு. நானும் 2 1/2 வருடமாக நாய் மாதிரி கத்துகிறேன். நீங்கள் ஒன்றும் கவனிக்கமாட்டேன் என்கிறீர்கள். எதிர்க்கட்சி என்றால் அப்படித்தான் செய்வீர்களா? (குறுக்கீடு) நாய் குரைக்கிறது என்று சொன்னாலும், கத்துகிறது என்று சொன்னாலும் எல்லாம் ஒன்றுதான். அதனாலே, நான் மனுஷனாகப் பேசுகிறேன். பேசிப் பேசிப் பார்த்தாகிவிட்டது. என்னதான் சொல்கிறீர்கள்? ஒன்று, உண்டு என்று சொல்லுங்கள், இல்லாவிட்டால், இல்லை என்று சொல்லிவிடுங்கள், நான் பேசாமல் இருந்து விடுகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாமரைக்கனி அவர்கள் அந்தப் பட்டியலை என்னிடத்திலே உடனடியாகத் தருவாரேயானால், ஏற்ற முடிவு, உரிய நேரத்திலே



எடுக்கப்பட்டு, அவர் மகிழத்தக்க அளவிற்கு எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்ற பாரபட்சம் இல்லாமல் இந்த அரசு செயல்படுகிறது என்பதை மெய்ப்பிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றாகத்தான் பேசுகிறீர்கள். பத்திரிகையிலே வருகிறது. காதில் கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. நானும் பலதடவை மனு கொடுத்துவிட்டேன். Chief Secretary-ஐப் பார்த்து விட்டேன். Finance Secretary-ஐப் பார்த்துவிட்டேன். உங்களையும் வந்து பார்த்து, எத்தனை தடவை அறையிலும், கோட்டையிலும், Bar Association-உடன் வந்து பார்த்து மனு கொடுத்தாகிவிட்டது. P.W.D. Minister ** உங்கள் பக்கத்திலே இருக்கிறார். அவரிடம் நீங்கள் Eye-wash பண்ணச் சொல்லி, அடுத்த தடவை சேர்த்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டீர்கள். நாங்களும் ஏமாந்து போய், அங்கே போய், இங்கே போய், C.M.-ஐயும் பார்த்துவிட்டோம். Bar Association–லே 'என்ன தாமரைக்கனி உடம்பு நன்றாக இருக்கிறதா' என்றெல்லாம் அவர் விசாரிக்கிறாரே என்று சொல்லி, கடைசியிலே பார்த்தால் Minister ஆலடி அருணா சொல்கிறார், அவர் எந்த இடத்திலே எப்படி சுழி வைப்பார் என்று எனக்குத்தான் தெரியும்; உங்கள் ஊருக்கு நிதியும் கிடையாது, ஒன்றும் கிடையாது என்று அவர் அன்றைக்குச் சொன்னார். நானும் சட்டசபையிலே பேசியிருக்கிறேன். இந்த மாதிரி சின்னப் பிள்ளையை ஏமாற்றுகிற மாதிரி நீங்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினரை ஏமாற்றுகிறீர்கள். ஆகவே, எங்கள் ஊருக்கு நிதியைக் கொடுங்கள். அதுபோலவே 1996-97 ஆம் வருடம் 57 இலட்சம் கொடுப்பதாக இருந்தது. அதையும் நீங்கள் கொடுக்கவில்லை. Norms இல்லாமல் எல்லா Municipality–களுக்கும் கொடுத்திருக்கிறீர்கள். Norms அடிப்படையிலே எதிர்க் கட்சி சட்டமன்றத் தொகுதி என்று, எதிர்க்கட்சி நகரசபை என்று சொல்லி நீங்கள் கொடுக்கவில்லை. ஏற்கெனவே, நான் சட்டமன்றத்திலே பேசியிருக்கிறேன். ஆகவே, இந்த மானியக் கோரிக்கையில் எங்கள் ஊருக்கு நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கான தொகையும் சேர்க்க வேண்டும் 1996-97-க்குள்ள பாக்கியையும் நீங்கள் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

அப்பொழுது வெள்ளம் வந்து சாலைகளெல்லாம் போய்விட்டன. இப்பொழுதும் பாருங்கள். வெள்ளம் வந்துவிட்டது. வெள்ளம் வந்து 2 கோடி ரூபாய்க்கு சாலை வீடு எல்லாம் என் தொகுதியிலே சேதாரம்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆகியிருக்கிறது. ஏற்கெனவே சேதாரம் அடைந்தது. அதுபற்றியும் அரசு அதிகாரிகள் செயற்குறிப்பு எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அதையும் சேர்த்துக் கொடுங்கள். இல்லையென்றால், எதிர்க்கட்சித் தொகுதி. உங்களுக்குக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டாலும் நான் அங்குள்ள பொதுமக்களுக்குச் சொல்லிவிடுவேன். அதை நீங்கள் சட்டசபையிலே சொன்னால் நன்றாக இருக்கும். நீங்கள் மனதிற்குள்ளேயே வைத்து செய்யமாட்டேன் என்கிறீர்கள். அதுதான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஏன் தலைவரே, இப்படிப் பழி வாங்குகிறீர்கள்? (சிரிப்பு) ஜனநாயக நாட்டில் எல்லாக் கட்சிகளுக்கும் ஒதுக்க வேண்டும். தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்குத்தான் ஒதுக்க வேண்டும், எதிர்க்கட்சித் தொகுதிக்கு ஒதுக்கக்கூடாது என்று ஏதாவது Norms இருக்கிறதா? (மணியடிக்கப்பெற்றது) நீங்கள் என்ன மோட்டுவளையைக் காண்பிக்கிறீர்கள்?

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் மோட்டுவளையைக் காண்பிக்கவில்லை; கடிகாரத்தைக் காட்டினேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். சாத்தூரிலே ஒரு கூட்டுறவு மாணவர் தொழிற் பயிற்சி மையம் இருக்கிறது. மாணவர்களை அதிலே Mark அடிப்படையிலே சேர்க்க வேண்டும்; தகுதி அடிப்படையிலே சேர்க்க வேண்டும். அரிசன மாணவர் என்றால் சேர்க்க வேண்டும். ஓர் அரிசன மாணவருக்கு Mark-ம் இருக்கிறது; தகுதியும் இருக்கிறது. ஆனால் J.R. அவர்களோ அந்த முதல்வரோ முறைப்படி Tick பண்ணுவது கிடையாது. கோபித்துக்கொள்ளமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். உங்கள் கட்சி மாவட்டச் செயலாளர்தான் அந்த List-ஐயே வாங்கி, தகுதி இல்லாதவர்களுக்குப் போடுகிறார். அந்தப் பையன் வந்து அழுகிறான், 5,000, 10,000 ரூபாய் கொடுப்பதற்கு நான் எங்கே போவேன் என்று. நீங்கள் இதிலே நடவடிக்கை எடுங்கள். பாருங்கள், Affidavit அந்த மாணவனுடைய அப்பாவிடமிருந்து வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். அந்தப் பையன் பேர் எல்லாம் இருக்கிறது. (ஓரிரு தாள்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளித்தார்.)

Court-க்குப் போனால் உங்கள் அரசாங்கத்திற்குத்தான் அசிங்கம். Affidavit-உடன் கொடுத்திருக்கிறேன். அதனால் நீங்கள் அந்த ஏழை எளிய அரிசன மாணவருக்கு உதவி செய்யுங்கள்.



அதேமாதிரி நம்முடைய மாநிலத்தில் உளவுத் துறை செயல்படாமல் போய்விட்டது. டெல்லி உளவுத் துறை சொல்லித்தான் (மணியடிக்கப்பெற்றது) பாருங்கள், Point-க்கு வரும்போது மணியடித்து விடுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருக்கும் ஒதுக்கிய மாதிரிதான் உங்களுக்கும் நேரம் ஒதுக்கினோம். உங்கள் நேரம் முடிந்துவிட்டது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** T.M.C.-க்கு 1/2 மணி நேரம் கொடுத்தீர்கள். எனக்கும் கொடுங்கள். இன்னும் 4, 5 Points தான் இருக்கின்றன. நான் Point-க்கே வரவில்லை. என் தொகுதியைப்பற்றித்தான் பேசியிருக்கிறேன். காமராஜர் மாவட்டத்திலே Function நடக்கிறது. மாண்புமிகு அமைச்சர் பொன்முடி வருகிறார். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் வருகிறார். முன்னிலை என்று சொல்லி உங்கள் மாவட்டச் செயலாளர் பெயரைப் போடுகிறீர்கள். அரசாங்க Function-ஐ அரசியல் Function ஆக்குகிறீர்கள். அரசாங்கம் கொடுத்திருக்கிற விளம்பரத்திலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற அரசு நிகழ்ச்சிகளிலே-வேண்டுமானால் அரசு பதவியிலே இருக்கின்றவர்களைத் தவிர-மற்றவர்கள் பெயரைப் போடுவது என்பது அது அரசு சட்டப்படி நடைபெறும். ஆனால் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தளவில் ஒவ்வொரு கூட்டுறவாளருக்கும் அதிலே பங்கேற்கக்கூடிய தகுதி உண்டு. அந்தக் கூட்டுறவாளர் மூத்த கூட்டுறவாளர், முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் என்ற அளவிலேதான் அவருடைய பெயர் போடப்பட்டிருக்குமே தவிர, தனிப்பட்ட முறையிலே எங்கள் கட்சியினுடைய மாவட்டச் செயலாளர் என்ற முறையிலே போட்டிருக்கமாட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, பொதுப் பணித் துறை அமைச்சரைப்பற்றி குறிப்பிடும்போது ஓர் அடைமொழி வார்த்தையைச் சொன்னார். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு திரு. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் கலந்து கொள்ள வந்த நிகழ்ச்சியின் Invitation Card-லேயும் அந்த மாதிரி போட்டிருக்கிறது. அதேமாதிரி மாண்புமிகு திரு. கோ.சி. மணி அவர்கள் கலந்து கொள்ள வந்த நிகழ்ச்சியின் Invitation Card-லேயும் அந்த மாதிரி போட்டிருக்கிறது. அப்பொழுது பழைய கூட்டுறவுத் துறை அமைச்சர் என்றால் எங்கள் கட்சியின் பழைய கூட்டுறவுத் துறை அமைச்சர், மற்ற கட்சிகளில் உள்ள கூட்டுறவுத் துறை அமைச்சர் பெயர்கள் எல்லாம் அரசாங்க Function-ல் அந்தந்த மாவட்டங்களிலே போடுவீர்களா என்று அறிய விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே உளவுத் துறை சீர்கேடாக இருக்கிறது. டெல்லி உளவுத் துறை சொல்லித்தான்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

**திரு. இரா. தாமரைக்கனி:** இரண்டு வரிகள் உளவுத் துறைபற்றி மட்டும் சொல்லிவிடுகிறேன். வேறு ஒன்றும் வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** கொஞ்சம் நேரம் கொடுங்கள். எதிர்க் கட்சி என்ற முறையில் யோசனைதான் சொல்கிறேன். குறை சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உங்களுக்கு ஒதுக்கிய நேரத்திற்கு மேலே பேசிவிட்டீர்கள். திரு. பி.என். வல்லரசு அவர்களைப் பேச அழைக்கிறேன். நீங்கள் பேசவில்லையென்றால் நான் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டியிருக்கும்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய Forward Bloc கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவரே உட்கார்ந்து விட்டார். நீங்கள் என்ன சொல்ல வேண்டும்? உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிடுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். திரு. பி.என். வல்லரசு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.என். வல்லரசு:** துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் வாயிலாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 848 கோடி ரூபாயினை இன்று வழங்கியிருக்கிறார்கள். இந்த 848 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்ட விதத்தைப் பார்க்கின்றபோது டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு ஏழை எளிய, நடுத்தர மக்களுக்காகவே பல திட்டங்களைத் தீட்டி வருகிறது என்பது தெரிகிறது. (குறுக்கீடு)

(திரு. பி.ஆர். சுந்தரம் மற்றும் திரு. சொ. கருப்பசாமி ஆகியோர் எழுந்து நின்றார்கள்).

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது இந்தமாதிரி எழுந்து நின்று இடைஞ்சல் செய்யக் கூடாது. (குறுக்கீடு) திரு. கருப்பசாமி உட்காருங்கள். முதலில் திரு. வல்லரசு பேசட்டும். (குறுக்கீடு) முதலில் சபையினுடைய மரபைத் தெரிந்துகொள்ளுங்கள். ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது இப்படி அடிக்கடி எழுந்து குறுக்கிட்டு இடைஞ்சல் செய்யக்கூடாது. உட்காருங்கள் உங்கள் கட்சித் தலைவர் பேசினார். அவரே எல்லா விவரங்களையும் சொல்லிவிட்டார், உட்காருங்கள். திரு. வல்லரசு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான், அமைச்சர் பேசியதில் Point of Order கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நீங்கள் உட்காரவில்லையென்றால், நான் உங்களை வெளியேற்ற வேண்டியதிருக்கும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், காலையிலேயே நம்முடைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் 1.30 மணிக்குள்ளாக முதலமைச்சர் அவர்களுடைய பதிலும் அமைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வாக்கெடுப்பு இருக்கிறது. எனவேதான் இவ்வளவு கண்டிப்பாக இருக்க வேண்டிய ஒரு நிலைமை உங்களுக்கும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் தயவுசெய்து இன்று ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒத்துழைப்பதற்கு நாங்கள் தயாராகத்தான் இருக்கிறோம். ஆனால் நான் அமைச்சர் பேசியதில் Point of Order கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சித் தலைவர் பேசினார். அமைச்சர் பேசியதிலே என்ன Point of Order? (குறுக்கீடு) சரி, என்ன Point of Order சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் பேசுகின்றபோது கூட்டுறவுச் சங்க விழாக்களிலே மாவட்டச் செயலாளர்கள் பெயரைப் போடுவதில்லை என்று கூறியிருக்கிறார்கள். என்னுடைய இராசிபுரம் தொகுதியில் கடந்த மாதம் Kerosene Bunk திறப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டச் செயலாளரை அழைத்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினரான என்னை அழைக்கவில்லை. வேண்டுமென்றே அழைப்பிதழில் அச்சிடப்படாமலேயே, அவர்களையெல்லாம் Phone மூலமாகக் கூப்பிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. உங்கள் பெயர் போட வில்லை என்று சொல்கிறீர்கள், அவ்வளவுதானே? அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதிகளிலே விழாக்கள் நடைபெறுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர் அவசியம் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்களுடைய பெயர் விடுபட்டிருக்குமேயானால் அதற்குத் தகுந்த விளக்கங்கள் கேட்க முடியும். அவர் சொன்னார், நாமக்கல் மாவட்டச் செயலாளர் அழைக்கப்பட்டார் என்று. அவரும் ஒரு சட்டமன்ற உறுப்பினர். அதனால் அவரும் ஒரு சட்டமனற உறுப்பினர் என்ற அளவிலே....(குறுக்கீடு).

**மாண்புமிகு் பேரவைத் துணைத் தலைவர்:** பொதுவாக, ஒழுங்குப் பிரச்சினை என்பது இந்த அவையிலே நடந்த பிரச்சினை பற்றி, அதிலே ஏதாவது ஒழுங்கு தவறியிருந்தால், நீங்கள் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பலாம். திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். விளக்கம் கேட்கிறேன் என்றும் சொல்லிவிட்டார். நீங்கள் உட்காருங்கள்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் தொகுதியிலே நான் சென்ற நிகழ்ச்சியிலே திரு. சுந்தரம், எம்.எல்.ஏ. அவர்களுடைய பெயர் போடப்பட்டிருந்தது. இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் அவர் வரவில்லை என்பதை அவருக்கு நான் நினைவூட்டுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படிச் சொல்லிக்கொண்டே போனால் நாங்களும் சொல்ல முடியும். சென்ற ஆட்சிக் காலத்திலே என் தொகுதியில் நடந்த விழாவிலே முதலமைச்சர் வந்திருந்தார். ஆனால், என் பெயரைப் போடவே இல்லை. உட்காருங்கள். திரு. வல்லரசு, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. பி.என். வல்லரசு:** இந்தத் துணை மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற 848 கோடி ரூபாயை அரசு செலவு செய்திருக்கின்ற முறையைப் பார்க்கின்றபோது ஏழை எளிய நடுத்தர மக்களுக்காகவே கலைஞருடைய அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது என்பதை நம்மால் காணமுடிகிறது. அதுமட்டுமல்லாமல், ஏழை எளிய மக்களையே மையமாகக் கொண்டுதான் கலைஞருடைய ஆட்சிச் சக்கரம் சுழன்று வருகிறது என்பதற்கு இது ஓர் உதாரணமாகவும் அமைந்துள்ளது.

இன்று தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற பால் உற்பத்தியாளர்கள் தமிழக அரசிடம் ஒரு கோரிக்கையை வைத்தார்கள், பால் உற்பத்தியாளர்களுக்கு விலை கட்டுப்படியாகவில்லை என்று. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கருணையுள்ளத்தோடு அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்குக் கொள்முதல் விலையையும் உயர்த்தி, அதேசமயத்தில் மக்கள் வாங்குகின்ற பாலின் விலையையும் குறைத்து, அதனால் ஏற்பட்ட நட்டத்தை இந்த அரசே ஏற்று ஏழை எளிய மக்களுக்காகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்திலே வாழுகின்ற விவசாயிகளினுடைய Motor Pump Set-களுக்கு இலவச மின்சாரம் வழங்கி அதன் வாயிலாக 320 கோடி ரூபாய் இழப்பை இந்த அரசு ஏற்றிருக்கிறது. அதன்மூலம் விவசாயிகளை 'கண்ணை இமை காப்பதைப் போல' கலைஞருடைய அரசு காப்பாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நம்மால் காண முடிகிறது.

அடுத்தபடியாக, குடிசை மாற்று வாரியம் மூலமாக நலிவடைந்தோர் நலன், இன்னும் நெசவாளர்களுடைய பாதுகாப்பு இப்படியாகப் பல கொள்கைகளை இந்தத் திட்டத்தின் வாயிலாக அளித்திருக்கிறார்கள். அதை நான் சார்ந்திருக்கின்ற Forward Bloc இயக்கத்தின் சார்பில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்ற அசுவமா நதி அணையைக் கட்டித்தர வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று 4 வட மாநிலங்களிலே, சட்டசபைக்கான தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. இந்தத் தேர்தலில் விலைவாசி உயர்வு என்ற பிரச்சினைதான் முக்கியப் பங்கு வகித்தது. வெங்காயம்கூட மாபெரும் விவாதப்பொருளாகி, அந்த அளவிற்கு ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறது. இன்று அவர்களுக்கு, நாளை நமக்கு என்ற நிலையில் தமிழக அரசும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும்; முனைந்து செயலாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேசமயத்தில் தமிழக அரசு விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தி, பருப்பு, எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பண்டங்களை விலைக்கு வாங்கி நியாய விலைக் கடைகளின் மூலம் ஏழை எளிய மக்களுக்கு விநியோகிக்கும் ஒரு தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-10

தமிழகத்திலே இருக்கின்ற தலைமையாசிரியர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை அரசு கருணையுள்ளத்தோடு ஏற்று, அந்தப் போராட்டத்தை முடிவிற்குக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தென்மாவட்ட மக்கள் நீண்டகாலமாகக் கோரி வருகின்ற, மதுரையில் உயர்நீதிமன்றக் கிளையை அமைக்க வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் நடவடிக்கையைத் துரிதப்படுத்த வேண்டும். அரசு செயல்படுகிறது; அதற்கான முயற்சியை எடுக்கிறது; பாராட்டுகிறேன். ஆனால் நடவடிக்கையைத் துரிதப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



பெரியாறு அணையினுடைய நீர்மட்டம் உயர்ந்துகொண்டிருக்கிற காலகட்டம் இது. இந்த நிலையில் பெரியாறு அணையினுடைய நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கு தமிழக அரசு துரித நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களான நெல், கரும்பு ஆகியவற்றிற்குத் தகுந்த விலை கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். எனவே அவற்றிற்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டம்-ஒழுங்கு, பாதுகாப்பைப் பொறுத்தவரையில் இந்த அரசு நல்லமுறையில் செயலாற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால் ஒருசிலர் என்றைக்கும், எங்கு சென்றாலும் கலவரம், எங்கு நின்றாலும் கலவரம், உட்கார்ந்தால் கலவரம், எழுந்தால் கலவரம், கூட்டம் நடத்தினால் கலவரம் என்று கலவரத்தை ஏற்படுத்திக் கொண்டு, நடமாடும் கலவரமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள்மீது அரசு ஏன் நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது என்று தென் மாவட்டத்து மக்கள் தொடர்ந்து கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக கடந்த அக்டோபர் மாதம், இங்கே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூடி, அதிலே தலைவர்களுடைய சிலைகளை வைப்பதுபற்றி சில முடிவுகளை எடுத்தது. ஆனால் அந்த முடிவுகள் எடுக்கப்பட்ட ஒருசில நாட்களிலேயே, அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவைத் தூக்கியெறிந்துவிட்டு, காலிலே போட்டு மிதித்துவிட்டு, கழுகுமலைக்குப் பக்கத்திலே ஒரு தலைவருடைய சிலையைத் திறந்திருக்கிறார்கள். எனவே, அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவு ஏற்கப்பட வேண்டுமா, இல்லையா என்பதை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இத்துடன் உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வல்லரசு பேசி முடித்துவிடட்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கழுகுமலை, ஒட்டப்பிடாரம் தொகுதியினுடைய ஒரு பகுதி. நான் சிலையைத் திறப்பதற்காக, தனியாக அப்படியொரு விழாவிற்குச் செல்லவில்லை. நீண்ட நாட்களுக்குப் பிறகு, தொகுதியிலே குறைகளைக் கேட்பதற்காகச் சென்றபோது 17, 18, 19 ஆகிய தேதிகளில் ஒட்டப்பிடாரம் ஒன்றியத்திலே இரண்டு நாட்களும், கழுகுமலை ஒன்றியத்திலே இரண்டு நாட்களும் நான் மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றேன். மாலை மூன்று மணிக்கு ஆரம்பித்து, நிகழ்ச்சி அடுத்த நாள் காலை ஆறு மணி வரையிலும் நடந்தது. போகிறபோது, திடீரென்று ஒரு கிராமத்திலே சிலையைத் திறக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த நேரத்திலே சிலையைத் திறக்க முடியாது என்று யாராலும் மறுக்க முடியாது என்பதை மாமன்றத்திலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் அறிவீர்கள். அப்படியொரு நிகழ்ச்சி, அதாவது சிலை திறப்பு விழா என்று போடப்பட்டு அதற்கு என்று தனியாகச் சென்றிருந்தால், உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவிற்கு எதிராக நடந்துகொண்டேன் என்று சொல்ல முடியும். ஆனால்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும்; இந்த விளக்கம் போதும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** எனவே மனு வாங்கச்சென்ற இடத்திலே அப்படியொரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அதோடு எப்போது சிலை உடைப்பு நடந்தாலும் சகோதரர் வல்லரசு அவர்கள் கிருஷ்ணசாமிதான் காரணம் என்று இதையே, பல்லி சொல்லுவதைப் போல பாட்டு பாடிக்கொண்டிருக்கிறார்கள். விருதுநகரிலேகூட ......

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பேரும் உட்காருங்கள். நேரம் அதிகமாகிவிட்டது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,—

*(திரு. பி.என். வல்லரசு, டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் நின்று கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பேரும் உட்காருங்கள். திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல் துணை நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பல்வேறு கருத்துக்களையெல்லாம் . . .



**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நீங்கள் உட்காருங்கள். உங்களை உட்காரச் சொல்லிவிட்டேன். உங்களை உட்காருமாறு உத்தரவிடுகிறேன். திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்தினுடைய வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களையெல்லாம் அறிவித்து, இன்று ஓரளவிற்கு நம்முடைய கிராமப் பகுதிகளிலே அதனுடைய வளர்ச்சிப் பணிகளை நாம் பார்க்கலாம். அந்த வகையிலேதான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், அதுபோன்று சமத்துவபுரம் போன்ற திட்டங்களையெல்லாம் இங்கே அறிமுகப்படுத்தி நம்முடைய மாநிலத்தினுடைய பல்வேறு பகுதிகள் இன்று சீரடைவதற்கான சில முயற்சிகளிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நாம் அதிலே குறைபட்டுக் கொள்வதெல்லாம் என்னவென்றால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கடந்த வருடத்திற்கு முந்தைய ஆண்டு அறிமுகம் செய்கின்றபொழுது, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற தூத்தூர் பஞ்சாயத்திலே அறிமுகம் செய்தார்கள். ஆனால், இதுவரையிலும் அதனுடைய, முக்கியமான வேலைகள் முடிவடையவில்லை என்பதை நான் மாண்புமிகு முதலமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.....

*பிற்பகல் 12-15*

சமீபத்திலே கலிங்கராஜபுரம் என்ற ஊரிலே சமத்துவபுரம் என்ற ஒரு திட்டத்தை அறிமுகம் செய்து 100 கட்டடங்களைக் கட்டியிருக்கின்றார்கள். சமீபத்திலே பெய்த கொடுமழையின் காரணமாக அதிலே 22 வீடுகள் தண்ணீரிலே மூழ்குகின்ற ஒரு துரதிருஷ்டவசமான நிலை ஏற்பட்டு இருக்கின்றது. இதையும் நான் நம்முடைய அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

25 இலட்சம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கு என்று ஒதுக்கியபோது முதன்முறையாக, மார்த்தாண்டத்தில் இருக்கின்ற மாதவிலாசம் அரசுப் பள்ளிக்காக நான் ஒன்றரை இலட்சம் ரூபாயை ஓர் அறை கட்டுவதற்காகக் கொடுத்தேன். இதுவரையிலும் அந்த வேலை ஆரம்பிக்கப்படவில்லை. இபபடி நம்முடைய திட்டங்கள் இன்று கிடப்பிலே போடப்படுகின்ற ஒரு சூழ்நிலையிருக்கிறது.

அவைகளையெல்லாம் வெகு விரைவாகச் செயல்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

நம்முடைய தானியங்கி பால் நிலையங்களிலெல்லாம் வாங்கக் கூடிய பாலினுடைய அளவு-அந்தப் பாத்திரத்திலே வாங்குகின்றபொழுது-கம்மியாக இருக்கிறது. இந்தப் பகுதியிலே, எல்லாப் பகுதிகளையும் நான் சொல்லவில்லை. அது ஏனென்று பரிசீலனை செய்ய வேண்டும்.

அடுத்து மது விலக்கு. இது பொதுவாக, இன்று வெற்றி பெறாத ஒரு சூழ்நிலையில் இருக்கின்றது. குறிப்பாகச் சொன்னால், நம்முடைய களியக்காவிளை காவல் நிலையம், அருமனை காவல் நிலையம், கடையால்மூடு காவல் நிலையத்தினுடைய ஒரு பகுதி, களியல் பகுதி போன்ற பகுதிகளெல்லாம் மிகப் பெரிய சாராய வியாபாரம் நடக்கின்ற பகுதிகளாக இருக்கின்றன. இதைக் கவனிக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

தீயணைப்பு நிலையங்களுக்காக பல கோடி ரூபாயை இந்த அரசு செலவிட்டிருக்கின்றது. கடந்த ஆண்டு கொல்லங்கோட்டிலே உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு ஒரு வாகனத்தைத் தந்தார்கள். அந்த வாகனம், இருக்கின்ற இடத்திலிருந்து நகர்வது இல்லை. புதிதாக ஒரு வாகனத்தைத் தர வேண்டுமென்றும், அரசுக்குச் சொந்தமான நிலத்தில் அதற்கான கட்டடத்தைக் கட்ட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

4 கோடி குழந்தைத் தொழிலாளர்களுடைய நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவது இன்னும் நடைபெறுகின்றதா என்று கேட்டால் அவை நடந்துகொண்டேதான் இருக்கின்றன. இந்த 4 கோடி குழந்தைத் தொழிலாளர்களினுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இன்னும் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடலூர் பகுதியிலே தூர் வாருவதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றார்கள்; வரவேற்கிறோம். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருக்கின்ற கால்வாய்களைத் தூர் வாருவதிலே, குளங்கள், மிகப் பெரிய குளங்களைத் தூர் வாருவதிலே, ஒரு மந்த நிலை இருக்கின்றது. அதற்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



கூட்டுறவு நூற்பாலைகளிலே உருவாகின்ற கைக்கறித் துணித் தேக்கம் என்பது பல கோடி ரூபாய் அளவிற்கு இருக்கின்றது. அதை விற்பனை செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சாத்தனூர், சோலையாறு பகுதிகளிலே 9 கோடி ரூபாய்ச் செலவில் பழைய அணைத் திட்டத்தை மாற்றி, புதிய அணை கட்டுவதற்காகப் பணத்தை ஒதுக்கியிருக்கின்றார்கள், வரவேற்கிறோம். அதுபோல, கன்னியாகுமரி மாவட்டத்திலே 100 வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்ட பேச்சிப்பாறை அணையினுடைய கொள்ளளவே குறைந்துபோய் இருக்கின்றது. ஆகவே அந்த அடிப்படையிலே அந்தப் புதிய அணையைக் கட்டுவதற்குக்கூட நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து நம்முடைய மாநிலத்திலே முந்திரி ஆலைகளிலே சுமார் 50 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். இன்னும் அவர்களுக்கு E.S.I. திட்டம் வழங்கப்படவில்லை. அவர்கள் மிகக் குறைந்த சம்பளத்தைப் பெறுகின்றவர்கள்

அதேபோன்று அரசு ரப்பர் தோட்டக் கழகத்திலே உள்ள மூவாயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு 2 வருடங்களுக்கு முன்னால் வழங்கிய சம்பளத்திலே எந்த உயர்வும் இல்லை; இன்னும் அதுபோன்று bonus பிரச்சினையும் தீர்க்கப்படாமல் உள்ளது. அந்தப் பிரச்சினையிலே நம் அரசு ஆழமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத்தின்போது எங்களுடைய மாவட்டத்திலே இருக்கின்ற ரப்பர் தொழிற்சாலை சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்லியிருந்தார்கள். அங்கே இடப் பற்றாக்குறை இருக்கின்றது என்ற ஒரு கருத்து இருக்கின்றது. கீரிப்பாறை அரசு ரப்பர் தோட்டத்திலேயே அதற்கான இடமிருக்கின்றது. நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற, அரசுக்குச் சொந்தமான வாகனங்களுக்குத் தேவையான Tyre-ஐயும், Tube-ஐயும் உற்பத்தி செய்வதற்கு அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக நம்முடைய உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுடைய பிரச்சினையிலே ஓரளவுக்குப் பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது. இருந்தாலும் அந்தப் பேச்சுவார்த்தையிலே 5 சதவிகிதம் என்பதை 10 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலே உள்ள மாணவர்களுடைய பிரச்சினை என்பது இன்றையதினம் உண்ணாவிரதப் போராட்டத்திலே அவர்களுடைய குடும்பத்தாரோடு கலந்துகொள்கின்ற அளவுக்கு வந்து இருக்கிறது. அந்தப் பிரச்சினை என்னவென்று அணுகி, தீர்வு காண வேண்டும்.

78 Sub-Inspector-கள், முந்தைய ஆட்சிக் காலத்தில் தேர்வு செய்யப்பட்டவர்கள் இன்னும் பணியில் அமர்த்தப்படவில்லை. ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் பிரச்சினையையும் அரசு கவனித்து தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசி முடியுங்கள்.

**திரு. டி. மணி:** அதேபோன்று 28 போலீஸ்காரர்களுடைய பிரச்சினைக்கும் தீர்வு வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் 1991 ஆம் ஆண்டு அமைத்துத் தருவதாக உறுதியளித்து, பூர்வாங்கப் பணிகள் அனைத்தும் முடிந்த நிலையிலுள்ள மாம்பழத்து அணைத் திட்டத்தினை சென்ற ஆண்டிலேயே நிதிநிலை அறிக்கைகளில் எதிர்பார்த்தேன்; ஏமாந்து போனேன். கன்னியாகுமரி மக்களின் மீது கருணை காட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரக்கூடிய நிதிநிலை அறிக்கையிலாவது நிச்சயமாக இந்தத் திட்டத்தினைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் Station-க்கு என்று கொடுக்கப்பட்ட ஒரு வாகனம், அதிகாரிகளால், அவர்களுக்காகவே பயன்படுத்தப்படுகிறது. காவல் நிலையத்திற்கு ஏதாவது பிரச்சினை குறித்து அல்லது மனு கொண்டு வரக்கூடிய பொது மக்களிடம் வாடகைக்கு வண்டி எடுக்கச் சொல்வதால், பொது மக்கள் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. இதை கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று



78 S.I.-க்கள் 4 ஆண்டுகளுக்கு முன்னால் தேர்வு செய்யப்பட்டும், அவர்களுக்குப் பணி வழங்கப்படாத நிலை உள்ளதை கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும். தேர்ந்தெடுக்கப்பெற்ற 1,000 காவலர்களில் 360 பேர் பணியில்லாமல் இருக்கிறார்கள். இதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் தற்போது முக்கியமான பிரச்சினை ஜாதி மதப் பிரச்சினைதான். இது முற்றுப்புள்ளி இல்லாமல் சென்று கொண்டிருக்கிறது அரசியல் தலைவர்களானாலும் சரி, சமயத் தலைவர்களானாலும் சரி, ஜாதித் தலைவர்களானாலும் சரி, அவர்கள் தங்களுடைய செயல்பாடு மூலம், தாங்கள் பேசக்கூடிய வார்த்தை மூலம், எந்தப் பிரச்சினையும் வரக்கூடாது; அமைதிக்கு குந்தகம் வரக்கூடாது என்ற அளவில் ஓர் ஒழுங்கை தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக்கொண்டு, தங்களுடைய வாழ்க்கையை, வழிப்படுத்தலை அமைத்துக்கொள்வார்கள் என்று சொன்னால் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வரும் என்று கருதுகிறேன். உண்மையாக இருந்தாலும்கூட அதைச் சொல்வதால் ஒரு பிரச்சினை வருமென்று கருதினால், அதைக்கூட மறைத்து வைக்கக்கூடிய சமுதாய நோக்கோடு நம்முடைய சாதி மதத் தலைவர்களின் செயல்பாடுகள் இருக்கும் என்று சொன்னால், இந்தப் பிரச்சினைக்கு நிச்சயமாக முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்று நம்புகிறேன்.

இந்த அரசு பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்கிறது. அதற்காக அல்லும் பகலும் உழைக்கக் கூடியவர்களை ஊக்கப்படுத்துகிற வகையில், அதிகாரிகளை ஊக்கப்படுத்துகிற வகையில் பல சலுகைகள் வழங்கியதில் சில பாக்கியுள்ளன. 10-3-1997 அன்று கொடுங்கையூர் என்ற இடத்தில் ஏராளமான ஆயுதங்கள், வெடி மருந்துப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு அல்லது ஏதாவது வெகுமதி வழங்கப்பட வேண்டும். அதேபோன்று ஆந்திராவில், இராஜமுந்திரியில் 7 பயங்கரவாதிகளைக் கைது செய்ய நம்முடைய தமிழகக் காவல் துறையினருக்கு உதவிய ஆந்திர காவல் துறை அதிகாரிகளுக்கு ஆந்திர அரசு வெகுமதி வழங்கியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது. 27 நாட்கள் வெயிலிலும், மழையிலும் துன்பங்களை அனுபவித்த நம்முடைய அதிகாரிகளுக்கு, வெகுமதி அளித்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு துறைகளில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள், தவறு செய்திருந்தாலும், செய்யாவிட்டாலும், அவர்கள்மீது புகார் வந்து, அந்தந்தத் துறையே அதைப்பற்றி விசாரித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறு செய்யவில்லை என்று அறிவித்தும்கூட அவர்களுக்கு இன்னும் பணியில் சேர அனுமதி தரவில்லை. அவர்கள் வேலையில்லாமல் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். விசாரணை முடிந்து, புகாருக்குச் சம்பந்தம் இல்லை என்று சொன்னவுடனே, அப்படிப்பட்ட பணியாளர்களைப் பணியில் அமர்த்தினால்தான் ஆர்வமாகப் பணியாற்றக்கூடிய உந்துதல் அவர்களுக்கு ஏற்படும். அதேபோன்று சுமார் 200 Markers தமிழகம் முழுவதும் இருக்கிறார்கள். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 27 பேர் இருக்கிறார்கள். இதை அரசாங்கம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலில் R.T.O. அலுவலகம் இருக்கிறது. அதனுடைய செயல்பாட்டுப் பணி மிக அதிகமாக இருந்த காரணத்தினால், பத்மனாபபுரம் தொகுதியில் சுவாமியார்மடத்தில் துணை அலுவலகம் அமைக்கப்பட்டது. அதை மேம்படுத்தி R.T.O. அலுவலகமாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக சாலைகள் சேதமடைந்திருக்கின்றன. நெடுஞ்சாலைகளின் இருபுறங்களிலும் வடிகால்கள் சீராக இல்லாத காரணத்தினால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. எங்கெல்லாம் வடிகால்கள் சீராக இருக்கின்றனவோ அங்கெல்லாம் தண்ணீர் வடிந்துபோய் இருந்த காரணத்தால், அந்தச் சாலைகளெல்லாம் இந்தப் பெரிய மழையிலும்கூட நன்றாக இருக்கின்றன. எனவே வடிகால் அமைக்கக்கூடிய பணியையும் சேர்த்து இரண்டு பணிகளையும் நெடுஞ்சாலைத் துறையே செய்து முடிக்கின்ற வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஆத்திவிளை பஞ்சாயத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் செய்யப்பட்டுள்ள பணிகளில் ஏராளமான ஊழல்கள் நடைபெற்றுள்ளதாக பஞ்சாயத்துத் தலைவரே சொல்லியிருக்கிறார். இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாகர்கோவிலிலிருந்து நெய்வேலிக்குச் சென்று கொண்டிருந்த விரைவுப் பேருந்து 2 மாத காலமாக நிறுத்தப்பட்டு இருக்கிறது. கன்னியாகுமரி, திருநெல்வேலி



போன்ற மாவட்டங்களில் உள்ள மக்கள் கிட்டத்தட்ட 2 ஆயிரம் பேர் நெய்வேலியில் பணியாற்றுகிறார்கள். அவர்கள் திருச்சி வழியாக வருவதற்கு வேறு மார்க்கம் இல்லாததால் அந்தப் பேருந்தைத் தொடர்ந்து இயக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

என்னுடைய தொகுதியில் 311 கருக்கி பேருந்து; டி.எச்.எஸ். 7 வாழேடு வழி; 5-ஏ தக்கலை-குளச்சல் பேருந்து; 11 எச். தக்கலை-பிள்ளையார்புரம் போன்ற பேருந்துகள் நிறுத்தப்பட்டு இருக்கின்றன. நான் சட்டமன்ற உறுப்பினராக ஆனதற்குப் பிறகு இந்தப் பேருந்துகள் நிறுத்தப்பட்ட காரணத்தினால், மக்கள் மத்தியில் ஒரு வேதனையான சூழ்நிலை உள்ளது. எனவே, அந்தப் பேருந்துகளைத் திரும்பவும் இயக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தியாகிகள் ஓய்வூதியத்தைப் பொறுத்தமட்டில் அதை எந்த அளவுக்கு வழங்க சாத்தியம் உள்ளது என்பதைக் கண்டறிந்து அரசாங்கம் வழங்க வேண்டும். ஆனால், அது வசதியோடு வாழக்கூடிய பல தியாகிகளுக்குக் கிடைத்து இருக்கிறது. அதேநேரத்தில் வசதி இல்லாமல் கஷ்டப்படக்கூடிய, குடும்பத்தை அன்றாடம் நடத்தவே வழி இல்லாமல் இருக்கக்கூடிய பல தியாகிகளுக்கு Pension கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் பல சட்டதிட்டங்கள் குறுக்கே நிற்பதாக அவர்கள் வேதனைப்படுகிறார்கள். எனவே அரசு, வசதிபடைத்தவர்களுக்கு தியாகி என்ற ஒரு பட்டத்தைக் கொடுத்து அவர்களை கௌரவித்தால் மட்டும் போதும். அதேநேரத்தில் தியாகிகளாக வாழக்கூடிய ஏழைகளுக்கு சட்டத்தைச் சற்று தளர்த்தி அவர்களுக்கு pension வழங்க வாய்ப்பு அளிக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். பாரத் மாதா கி ஜே!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முதல் துணை மதிப்பீடுகளின் பேரில் ஒருசில கருத்துக்களை எடுத்து வைக்க அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். துணை மதிப்பீடுகள் என்பது — ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலும் மற்ற அமைச்சர்களாலும் அனுமதி பெறப்பட்டு சட்டமன்றம் நடந்த

நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தெரிவித்த வேண்டுகோள்களை, முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது ஏற்று, அதற்கென்று கூடுதலாகத் தேவைப்பட்ட நிதி; கடந்த 8 மாதங்களிலே அரசே முன்வந்து சில திட்டங்களை அறிவித்து அதற்காகத் தேவைப்படுகிற நிதி — இப்படி துண்டு விழுகிற ஏறக்குறைய 850 கோடி ரூபாய்க்கு இந்த மாமன்றத்தில் ஒப்புதல் பெறுவதற்காக இங்கே வைக்கப்பட்டு இருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வைக்கிற கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு செயல்படுத்த முற்படுகிறபோது, அடுத்த மாதத்திலே இன்னொரு துணை மதிப்பீடு ஏறக்குறைய ஓராயிரம் கோடி ரூபாய்க்கு அடுத்த Budget போடுவதற்கு முன்னாலே அறிவிக்க வேண்டிய நிலை இருக்கும் என்பது தெரியும் என்றாலும், இங்கு நானும் மற்ற உறுப்பினர்களும் சொல்வதை அடுத்த Budget-க்கு முன்னாலே இருக்கிற இந்த 2 மாத காலத்திலே நீங்கள் நிறைவேற்ற வேண்டும். அதற்கு இன்னும் ஓராயிரம் கோடி அல்லது 2 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்பதற்காக அல்ல; முடிந்தவற்றை நிறைவேற்றலாம். ஆனால், இப்போது நான் சொல்வது, நீங்கள் அடுத்த ஆளுநர் உரையிலே - அது இன்னும் 2 மாதங்களிலே வருகிறபோது, அடுத்த Budget-டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அமைச்சர்களும் தங்களுடைய இலாகாக்களிலே புதிய திட்டங்களைச் செயல்படுத்த முற்படுகிறபோது, அவற்றையெல்லாம் — முன்கூட்டியே தெரிவித்ததையும் கவனத்திலே கொண்டு திட்டங்களை உருவாக்கி, அதற்கேற்ப நிதிகளை நீங்கள் பெற்றுக்கொள்ள, அதிகாரிகளும் இதைக் கவனத்திலே எடுத்துக்கொண்டு, அமைச்சர்கள் தங்களது இலாகாக்களின் மூலமாக நடவடிக்கை எடுக்க, உதவியாக இருக்கும் என்ற அடிப்படையிலே இந்த வேண்டுகோளை நான் வைக்க முற்படுகிறேன்.

முதலில் என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்கிறேன்; ஏனென்றால் பின்னாலே நேரம் கிடைக்காது. என்னுடைய தொகுதியிலே மூடிக் கிடந்த, வேண்டுமென்றே கடந்த 5 ஆண்டுகளில் என்னுடைய தொகுதி என்கிற காரணத்தினாலே மூடப்பட்டிருந்த கூட்டுறவு நூற்பாலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்பேரில்-அந்தக் கூட்டுறவு நூற்பாலை மட்டுமல்லாமல்-தமிழ்நாட்டிலே மூடிக் கிடக்கிற மற்ற கூட்டுறவு நூற்பாலைகளையும் திறப்பதற்காக சுமார் 15 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்து, அந்த ஆலைகளை நவீனப்படுத்தவும், திறக்கவும் நீங்கள் எடுத்திருக்கிற முயற்சிகளுக்கு நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதேபோல் காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலேயும் இரண்டு மாநிலங்களும் ஒத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு சமரச முடிவை நீங்கள் எட்டியதற்கு, ஏற்படுத்தியதற்கு காவிரி நீர் பாய்கிற அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெருமக்களை மகிழ்ச்சி அடைகிறார்கள் என்கிற அடிப்படையில், அதிலே இன்னும் முழு கவனத்தோடு ஆணையம் அதிகாரபூர்வமான ஆணையமாக இருந்து, நமக்கு இடைக்காலத் தீர்ப்பிலே வழங்கப்பட்டு இருக்கிற Tribunal உத்தரவின்படி, அதன் மூலம் பெற வேண்டிய நீரைப் பெறுகிற முயற்சியிலே நீங்கள் முழுமையான கவனத்தைச் செலுத்துவீர்கள் என்கிற நம்பிக்கையோடு, செலுத்த வேண்டுமென்ற கோரிக்கையோடு, அந்த முயற்சியிலே நீங்கள் பெற்ற வெற்றியை நான் பாராட்டுகிறேன்.

*பிற்பகல் 12-30*

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு சர்க்கரை ஆலை தொடங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, இப்பொழுது 3 Budget முடிந்து, அடுத்த ஆண்டு வந்தால் நான்காவது Budget-ம் வரப் போகிறது. ஆனால், இன்னும் அதற்கான இடமே ஒதுக்கீடு செய்யப்பெறவில்லை. E.I.D. கம்பெனிக்கு நீங்கள் அனுமதி தந்திருக்கிறீர்கள். அவர்களும் ஆலையைத் தொடங்கத் தயாராக இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் துரும்பூர் என்ற இடத்திலே 100 ஏக்கர் நிலத்தை அந்த ஆலைக்கு ஒதுக்கீடு செய்து அனுப்பியபொழுது, வருவாய்த் துறை ஆணையரால் அதற்குத் தவறான காரணம் சொல்லப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டு, மீண்டும் இப்பொழுது நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே பேசியதன் அடிப்படையில் மீண்டும் பரிந்துரை செய்து வந்திருக்கிறது. எனவே உடனடியாக அந்த இடத்தை E.I.D. கம்பெனிக்கு அரசு ஒதுக்கித் தந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து அடிக்கல் நாட்டி, விரைவிலே அந்த ஆலை தொடங்க எல்லா வழிவகைகளையும் நீங்கள் செய்யவேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதிலே ஒரு பிரச்சினையும் கிடையாது. நிர்வாகம் தயாராக இருக்கிறது. நீங்களும் உத்தரவு போட்டுவிட்டீர்கள். Licence-ம் இருக்கிறது. 100 ஏக்கர் புறம்போக்கு இடம் இருக்கிறது. அந்த இடத்தைக் கொடுக்க வேண்டும், அவ்வளவுதான். மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்கிறார். ஆனால் வருவாய் வாரியத்திலே என்ன செய்கிறார்கள் என்றால், மறுத்துவிடுகிறார்கள். எனவே அங்கு

தொடர்புகொண்டு அந்த இடத்தைப் பெற்றுக் கொடுத்தால் ஆலை உடனடியாகப் பணியைத் தொடங்கத் தயாராக இருக்கிறது. எனவே இந்தப் பணியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக முடித்துத் தரவேண்டும்.

அடுத்து ஏராளமான மேல்நிலைப் பள்ளிகளை நீங்கள் தொடங்கியுள்ளீர்கள். என்னுடைய தொகுதியிலே இரண்டு இடத்திலே தொடங்கி இருக்கிறீர்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் சில மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களே இல்லை. உதாரணமாக என்னுடைய தொகுதியில் கோட்டைப்பட்டி என்ற இடத்தில் இரண்டு ஆண்டுகளாக மேல்நிலைப் பள்ளிக்கு தலைமையாசிரியர் கிடையாது. சில பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லை. இவற்றையெல்லாம் நீங்கள் கவனத்தில்கொள்ள வேண்டும். இன்னும் மீசல், கட்டுமாவடி போன்ற இடங்களில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இந்த மாமன்றத்தில் பேசுவதன் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நேற்று நான் பேசவில்லை. இதிலே பேச வேண்டுமென்பதற்காகத்தான் நேற்று பேசவில்லை. சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒவ்வொன்றாகச் சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன்.

அடுத்து இங்கே நெசவாளர்கள் பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அழகிரி பேசினார். அமைச்சரும் சொன்னார். உறுப்பினர் பக்கத்திலிருந்து பேசும்போது அவர் சொன்ன கருத்து, 'நெசவாளர்கள் உற்பத்தி செய்த துணியில் தேக்கம் இருக்கிறது என்று சொன்னார்.' அமைச்சர் 'தேக்கம் இல்லை, நாங்கள் அவர்களிடத்திலே பெற்றுவிட்டு அதற்குப் பின்னாலேதான் விசைத்தறிக்குப் போகிறோம்' என்று சொன்னார். இரண்டு பேர் சொல்வதிலும் உண்மை இருக்கிறது. என்ன உண்மை என்றால், மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டுச் சொல்வது, கூட்டுறவுச் சங்கங்கள். 1,200, 1,300 சங்கங்கள் இருக்கலாம். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் நீங்கள் உற்பத்தி செய்து முடித்துவிடுகிறீர்கள். ஆனால் நெசவாளர்கள் என்று சொல்கிறபோது, கூட்டுறவுச் சங்க நெசவாளர்கள் மட்டுமல்ல, கூட்டுறவுச் சங்கத்தில் வராத நெசவாளர்களும் உற்பத்தி செய்கிறார்கள். எனவே நீங்கள் சேலை, வேட்டிகளை இலவசமாக வழங்குகிறபோது, கூட்டுறவுச் சங்கத்திலேயிருந்து வாங்கிவிட்டு, பிறகு தனியார் நெசவாளர்களிடத்திலேயிருந்து பெற்றுவிட்டு, அதற்குப் பின்னாலே விசைத்தறிக்குப் போவீர்களேயானால் இந்தப் பிரச்சினை இருக்காது.



எனவேதான் இரண்டு பேர் சொல்வதிலும் உண்மை இருக்கிறது என்று சொல்கிறேன். நீங்கள் கூட்டுறவுச் சங்கத்தில் வாங்கியபிறகு கூட்டுறவுச் சங்கத்தில் வராமல் இருக்கிற தனியார் நெசவாளர்களிடத்தில் தேக்கம் இருக்கிற காரணத்தால் அங்கேயும் நீங்கள் பெற்றுக்கொண்டு, அதற்குப் பின்னால் தேவைப்பட்டால் நீங்கள் விசைத்தறிக்குச் செல்லுங்கள், ஆகவே தேக்கம் இருக்கிறது என்பது உண்மை. எனவே இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய கவனம் செலுத்த வேண்டும். அமைச்சரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

இன்னொன்று, நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இங்கே ஏறக்குறைய 40 இலாகாக்கள் தலைப்பிலே கூடுதல் நிதி, புதிய திட்டங்களெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நான்கூட இன்னொன்றை முதலமைச்சரிடத்திலிருந்து எதிர்பார்த்தேன். இளைஞர்களுக்காக 'சுய வேலைவாய்ப்பு நிதியுதவிக் கழகம்' (Youth Self - Employment Finance Corporation) என்று தொடங்க வேண்டுமென்று முதலமைச்சரிடத்திலே எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க. சார்பிலே ஊர்வலம் நடத்தி மனு கொடுத்தோம். அதைத் தலைமைச் செயலாளரிடம் கொடுத்துப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். அதற்கு ரூ. 100 கோடி ஒதுக்கியிருக்கலாம். இப்போது இல்லையென்றாலும், வருகின்ற நிதிநிலை அறிக்கையிலாவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு சமூகப் பிரச்சினை. ஏறத்தாழ 40 இலட்சம் இளைஞர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். நீங்கள் மட்டுமல்ல, யார் தலைமையிலே அரசாங்கம் அமைந்தாலும், 40 இலட்சம் பேருக்கு அரசாங்கம் வேலை கொடுக்க முடியாது. ஆயிரம், இரண்டாயிரம் பேருக்கு காவலர் வேலை கொடுக்கலாம், ஆயிரம், இரண்டாயிரம் பேருக்கு ஆசிரியர் வேலை கொடுக்கலாம்; அல்லது ஏதாவது தொழிற்சாலைகளில் பணி வாங்கிக் கொடுக்கலாம். இப்படித்தான் தர முடிகிறது. எனவே படித்துவிட்டு தங்கள் பெயரைப் பதிவு செய்கிறவர்களின் எண்ணிக்கை 40 இலட்சம், 50 இலட்சம் என்று உயர்ந்துகொண்டே போவதால், வேலை கிடைக்காமலேயே ஓய்வு பெறும் வயதைக்கூட பலர் அடைந்துவிடுகிறார்கள். ஆகவே இதுபோன்ற சூழ்நிலையை மாற்ற வேண்டுமென்று சொன்னால், இதை சமூகப் பிரச்சினையாகத்தான் நாம் கருத வேண்டும். அண்ணா அவர்கள் சொன்னதுமாதிரி, 'வேலையில்லா இளைஞர்கள் மடியில் கட்டிய வெடிகுண்டுகள்' என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். அதுமாதிரி

பல சமூகப் பிரச்சினைகளுக்கு இந்த வேலையில்லாத் திண்டாட்டமும், அதனால் ஏற்படுகிற வறுமை, விரக்தி, தீவிரவாதம், வன்முறை ஆகிய இவற்றுக்கெல்லாம் தாயாக, தொட்டிலாக அது அமைந்துவிடுகிறது.

நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இதற்காக ஒரு சுயநிதிக் கழகம் ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான். Youth Self-Employment Finance Corporation என்று பரிட்சார்த்தமாக 50 கோடி ரூபாயில்கூடத் தொடங்கலாம். அல்லது 2-3 I.A.S. அதிகாரிகளைக் கொண்ட ஒரு Committee-யைப் போட்டு, இதை எப்படிச் செய்ய முடியும் என்று பார்த்து, அவர்களுடைய சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு, முன்னுரிமை அடிப்படையில், அவர்களுக்குக் கடன் உதவி செய்ய அந்தச் சுயநிதிக் கழகத்தைத் தொடங்கவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களைப் பற்றிய ஒரு பிரச்சினை வந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீங்களே அழைத்துப் பேசுங்கள் என்று சொன்னார்கள். அந்த மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் என்னை வந்து பார்த்தார்கள். பெரிய பிரச்சினை எதுவுமே கிடையாது. அவர்கள் வைத்திருக்கின்ற 10-15 கோரிக்கைகளில் பிரதான கோரிக்கை ஒன்றுதான். இப்போது ஏறத்தாழ கால்நடைக் கிளை நிலையங்களில் 850 vacancies இருக்கின்றன. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், அதில் regular ஆகப் படித்துவிட்டு வருகிற எங்களைப் பணியில் அமர்த்துங்கள் என்று கோரிக்கை வைக்கிறார்கள். ஏற்கெனவே 1000 பேர் படித்துவிட்டு வெளியில் வந்திருக்கிறார்கள். இப்போது சென்னை மற்றும் நாமக்கல் ஆகிய இரண்டு கல்லூரிகளிலிருந்து ஆண்டுதோறும் 250 பேர் வெளியில் வருகிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையில் அவர்கள் விரும்புவது, எதிர்காலத்தில் மற்ற கிளை அமைப்புகளில் வேலைபார்த்துவிட்டு வெளியில் வரும்போது பிரச்சினை ஏற்படுகிறது. ஆகவே இப்போது இருக்கிற அந்த 850 vacancy-களிலும் எங்களை நியமிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், இது எளிதான காரியம் என்று சொல்கின்றார்கள். அவர்கள் கேட்பது, அந்த இடங்களில் எல்லாம் Doctor-க்குப் படித்தவர்கள் அந்த ஆய்வாளர் பணியைச் செய்வதாகச் சொல்கிறார்கள். முதலில் Doctor-க்குப் படித்துவிட்டு ஆய்வாளர் பணியைச் செய்ய முடியாது என்பது ஒன்று.



செய்யக்கூடாது என்று அல்ல. செய்ய இயலாது என்பது ஒன்று. அவர்கள் அந்தப் பணியில் சேர்ந்த பிறகு, Doctor-க்குரிய அதே சம்பளத்தை, அதே நிலையைத்தான் எங்களுக்கு ஏற்படுத்த வேண்டுமென்று அடுத்த குரலை எழுப்புவார்கள். இவைகளையெல்லாம் உத்தேசித்துத்தான் அரசு இதிலே தயக்கம் காட்டிக்கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 13 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்று வந்த கால்நடை ஆய்வாளர் பயிற்சி என்பது, பிளஸ் 2 முடித்தபிறகு ஓர் ஆண்டுப் பயிற்சியாகும். அது கடந்த 13 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. எப்போது பிரச்சினை வந்தது என்றால், இந்த அரசாங்கம் வந்தபிறகு ஒரு G.O. போட்டு, அந்தப் பயிற்சி திரும்பவும் தரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** கடந்த ஆட்சிக் காலத்தில் 1995 ஆம் ஆண்டு அந்த அரசாணை போடப்பட்டது என்பதைத் தங்கள் தகவலுக்காகச் சொல்லிக்கொள்கிறேன். புதியதாக இப்போது தொடங்கவில்லை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அந்தப் பயிற்சியைத் தொடங்க புதிதாக ஒரு G.O. போட்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) ஆண்டு வித்தியாசம் இருந்தால் அதைத் திருத்திக்கொள்கிறேன் 1996 என்பதற்குப் பதிலாக 1995 என்று இருந்தால் திருத்திக்கொள்கிறேன். அது ஏற்கெனவே இருந்த அரசு செய்தது. நீங்கள் அதைச் செய்யவில்லை. ஆனால் அதுவும் ஏற்கெனவே இருந்த ஆட்சி செய்த தவறு அது. ஆனால் அதற்கு முன்னாலே 13 ஆண்டுகளாக இல்லாதிருந்த ஒரு பயிற்சியை கடந்த ஆட்சியில் தொடங்குவதாக அறிவித்து, அதையொட்டி...

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது ஒரு கறையான முறையானதாக அல்ல. கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை முதன்முதலாக நியமிக்கிறபோது, ஐந்தாண்டுகள் வரை கால்நடை உதவி மருத்துவர்களாகப் பணியில் இருக்கிறார்கள். ஐந்தாண்டுக்காலம் முடிந்தவுடன், கால்நடை மருத்துவர்களாக கால்நடை மருத்துவமனைகளில் நியமிக்கப்படும்போது அவர்களுக்கு உதவியாக கால்நடை உதவியாளர்கள் அமர்த்தப்பட்டு, அவர்கள் ஊசி போடுவது, மற்ற சிகிச்சைகள் கொடுப்பது என்பது தொன்றுதொட்டு நடைபெற்று

வருவதாகும். ஆகவே அது தவறான முன்னுதாரணம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நான் சொல்ல வந்தது 13 ஆண்டுக்காலமாக பயிற்சி நடக்கவில்லை, பயிற்சியாளர்களை எடுக்கவில்லை. 13 ஆண்டுகளாக இந்த Course கிடையாது. 1995-ல்தான் இந்த G.O. போட்டு, Course-ஐ திரும்பவும் ஆரம்பித்து இருக்கிறார்கள்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** இல்லை. தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நீங்கள்தான் இப்போது சொன்னீர்கள், 1995-ல் ஆணை போடப்பட்டது என்று. 1995-ல் ஓர் ஆணை போடப்பட்டு அதற்குப் பிறகு பயிற்சியாளர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்தில், முடித்து விடுகிறேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், 250 காலி இடங்கள் இருக்கின்றன, ஆய்வாளர்கள் என்ன சம்பளம் வாங்குகிறார்களோ அந்தச் சம்பளத்தில் நாங்கள் பணியாற்றத் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள்; ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நாங்கள் பேசும்போது 5 நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். அவர் 20 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. இரா. தாமரைக்கனி:** திருநாவுக்கரசு ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருக்கிறார் என்பதற்காக அவருக்கு அதிக நேரம் பேச வாய்ப்பளிக்கிறீர்கள். எங்களுக்கு 7 நிமிடங்கள் கொடுக்கிறீர்கள். நீதி தவறாமல் நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீதி தவறாது. நீங்கள் உட்காருங்கள். நீங்கள் குறுக்கிடுவதால்தான் அவருக்கு நேரம் அதிகமாகிறது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்சியின் சார்பில் நேற்று இரண்டு பேரும் இன்று இரண்டு பேரும் பேசியிருக்கிறார்கள். நான் நேற்று பேசவில்லை. இன்றைக்குப் பேச வேண்டும் என்பதற்காக நேற்று நான் பேசவில்லை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்றையதினம் திருநாவுக்கரசு பேசுவதாக இருந்தது. நேரம் இல்லை என்று சொன்னவுடன் அதை ஒத்துக்கொண்டு நாளை பேசுகிறேன் என்று சொன்னார், அதனால்தான் நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) சுந்தரம் நீங்கள் உட்காருங்கள். நீங்கள் என்னை direct செய்ய முடியாது. Kindly resume your seat. நீங்கள் உட்காரவில்லை என்றால் வெளியேற்ற வேண்டியிருக்கும். திரு. திருநாவுக்கரசு, பேசுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நான் பேசுகின்றபோது குறுக்கிட்டு சத்தம் போட்டால் அம்மா சந்தோஷப்படுவார்கள் என்றால் அதற்காக இரண்டு நிமிடங்களை வேண்டுமானால் கொடுங்கள், சந்தோஷப்படட்டும், பரவாயில்லை; அதற்காகத்தான் சத்தம் போடுகிறார்கள் என்றால் இரண்டு நிமிடம் விடுங்கள், சத்தம் போட்டுவிட்டுப் போகட்டும். அதனால் பிரச்சினை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஏன் வம்பை வளர்க்கிறீர்கள்? நீங்கள் பேசி முடியுங்கள். நேரம் அதிகமாகிறது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் 2, 3 விஷயங்களை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து முடித்துவிடுகிறேன். ஆதிவாசிகள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்கள் தங்களை 5-வது Schedule-ல் சேர்க்க வேண்டுமென்று சொல்லியும், தாங்கள் வசிக்கின்ற இடத்தைப் பட்டா செய்து தரவேண்டுமென்று சொல்லியும் 10 ஆயிரம் பேர் சென்னையிலே ஊர்வலம் நடத்தினார்கள். இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்பப் படிப்பில் மாணவர்கள் சேர்க்கப்பட்டபின் A.I.C.T.E.-யிலிருந்து அதற்கான அனுமதி தரப்படவில்லை. அந்த ஒரே ஒரு காரணத்திற்காக —மற்ற எல்லா வசதிகளும் அந்தப் பல்கலைக்கழகத்தில் இருக்கின்றன—அந்தப் படிப்பு படித்த எல்லா மாணவர்களையும் வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். அந்த மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் A.I.C.T.E-யுடன் பேசி அதற்கான அனுமதியைப் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. அ.வ. அப்துல் நாசர் (குறுக்கீடு) சரி, conclusion-ஐச் சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** Introduction-ம் இல்லை, Conclusion-ம் இல்லை. தலைப்பை மட்டும் வாசித்து முடித்துவிடுகிறேன்.

அடுத்து தமிழ்நாடு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களை அழைத்துப்பேசி அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய தொழில்நுட்ப உதவியாளர்கள் சங்கத்தின் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் அந்த அலுவலர் சங்கம் கோரிக்கை வைத்திருக்கிறது. அதையும் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுபோனால் நடக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். இங்கே பேசினால் அது record-ஆகி, அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதற்காகத்தான் பேசுகிறேன்.

அடுத்து ஏற்கெனவே எடுக்கப்பட்ட 350 காவலர்களில், 98 நபர்களுக்கு Sub-Inspector பயிற்சி கொடுக்கப்பட்ட நிலையிலே வேலைக்கு உத்தரவாதம் இன்னும் வரவில்லை. இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு பேரூராட்சி தினக் கூலித் தொழிலாளர்கள் பிரச்சினையை கவனிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மற்றும் இதர நகராட்சிகளைப் பொறுத்தவரையில் Deposit தொகையாக வீடுகளுக்கு மாதம் ஒன்றுக்கு 60 ரூபாய், என்றும் தொழிற்சாலைகளுக்கு 120 ரூபாய் என்றும் வைத்திருக்கிறார்கள். ஆனால் புதுக்கோட்டை நகராட்சியைப் பொறுத்தவரையில் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், அத்தொகையை 5 ஆயிரம், 10 ஆயிரம், 20 ஆயிரம் என்று வைத்திருக்கிறார்கள். இதனை மாண்புமிகு



உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் படித்த மாணவர்களுடைய பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. ஏற்கெனவே உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதை முழுமையாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

***திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடலூர் மாவட்டத்தில் உள்ள பொதுப்பணித் துறை ஏரிகளை தூர் வாருவதற்காக கூடுதலாக 5 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலேயும், மாவட்ட மக்கள் சார்பிலேயும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு ஏரிகளும் வாய்க்கால்களும் தூர் வாரப்பட்டதால் இந்த ஆண்டு கடும் மழை பெய்தபோதும், நாங்கள் வெள்ளத்தில் சிக்காமல் தப்பித்தோம். அத்தகைய கஷ்டம் ஏற்படாவண்ணம் எங்களை எல்லாம் காப்பாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தொகுதிக்கு ஓர் ஏரி என்ற அளவில் தூர் வாரப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி அனைத்து உறுப்பினர்களுடைய தொகுதிகளிலும் ஏரிகள் தூர் வாரித் தரப்படுகின்றன. ஆனால் 1998-99 ஆம் ஆண்டுக்கான ஏரிகள் தூர் வாரும் திட்டத்தின்கீழ் என்னுடைய தொகுதியில் ஓர் ஏரியும் எடுக்கப்படவில்லை. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

கடந்த ஆட்சிக் காலத்திலே தொகுதியின் தலைநகரிலிருந்து மாவட்டத் தலைநகருக்கும், அதேபோல மாநிலத் தலைநகருக்கும் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. ஆனால் அதற்குப் பின்னர் அவை நிறுத்தப்பட்டு விட்டன. எனவே எனது தொகுதியின் தலைநகரான புவனகிரியிலிருந்து மாவட்டத் தலைநகரான கடலூருக்கும், தமிழ்நாட்டின் தலைநகராக

இருக்கின்ற சென்னைக்கும் போக்குவரத்தை ஆரம்பித்துத் தர வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எனது தொகுதியிலே இருக்கின்ற 9,000 கைத்தறி நெசவாளர்கள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் நெய்து வைத்திருக்கின்ற கைலிகள் எல்லாம் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடக்கின்றன. சுமார் 15 கோடி ரூபாய்க்கு மேல் அந்தக் கைலிகள் தேங்கிக் கிடக்கின்றன. அதனால் நெசவாளர்களெல்லாம் தங்களது கைத்தறி நெசவுத் தொழிலை விட்டுவிட்டு வேறு வேலைகளுக்கு—கட்டடம் கட்டும் சிற்றாளாகவும், வயல்வெளிக்குச் சென்று வேலை செய்யக்கூடிய விவசாயக் கூலித் தொழிலாளியாகவும்—செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, வருகின்ற ஆண்டுகளிலே இலவச வேட்டி-சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் கைலிகளையும் சேர்த்து வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எனது தொகுதியிலே SIPCOT மூலமாக தொழிற்பேட்டை அமைக்கப்பட இருக்கின்றது. 2,500 ஏக்கர் பரப்பில் உள்ள இடத்தில் அமைய இருக்கின்ற தொழிற்பேட்டையில் சுமார் 500 ஏக்கர் நிலத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலை ஆரம்பிப்பதாக இருக்கின்றார்கள். இதனால் இந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருமக்களும், எனது தொகுதியிலே இருக்கின்ற பொதுமக்களும் இதற்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற நிலை உள்ளது. எனவே அங்கே முறையாகத் திட்டம் தீட்டி, அந்தத் தொழிற்சாலை எனது தொகுதியில் வராமல் இருக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வருகின்ற டிசம்பர் 6 ஆம் தேதி இந்திய தேசிய லீக்கின் சார்பாக, நாகூரில் மட்டுமல்ல அகில இந்திய அளவில் மாவட்டத் தலைநகரங்களிலெல்லாம் உண்ணாவிரதம் இருக்கலாம் என்று அகில இந்திய செயற்குழுவிலே முடிவெடுக்கப்பட்டு உண்ணாவிரதம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த உண்ணாவிரதம் அறிவிக்கப்பட்டிருப்பது, Babir Masjid இடிக்கப்பட்டதைக் கண்டித்தும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வேண்டுகோள் விடுத்ததுடன், இதைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை இப்போது ஏன் எழுப்புகிறீர்கள்? துணை நிதிநிலை அறிக்கை மீது பேசுங்கள்.



**திரு. அ.வ. அப்துல் நாசர்:** ஒரேயொரு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுவதற்கு ஒதுக்கிய நேரம் முடிய இருக்கிறது. இன்னும் இரண்டு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** அந்த பிரச்சினைக்குரிய இடம் குறித்து சட்டத்திற்கு உட்பட்டு, நீதிமன்றம் எப்படித் தீர்ப்பு அளிக்கின்றதோ அந்தத் தீர்ப்பிற்கு அனைவரும் கட்டுப்படவேண்டும். அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே அந்த இடம் அமைக்கப்பட வேண்டும் என்றுதான் நாங்கள் கோரிக்கை வைத்து உண்ணாவிரதம் இருக்கப்போகிறோமேயொழிய, முஸ்லிம்களிடம் இதை ஒப்படைக்க வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தவில்லை. வேறு எந்தமாதிரியான வற்புறுத்தலும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உண்ணாவிரதம் இருக்கக்கூடாது என்று சொல்லவில்லை. தேதியை மாற்றிக் கொள்ளுங்கள் என்றுதான் முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். நீங்கள் அடுத்த Subject-க்கு வாருங்கள், இல்லையென்றால் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரம்ஜான் திருநாள் என்றால், அன்றைக்குத்தான் கொண்டாட வேண்டும். இன்னொரு நாள் கொண்டாடுவது என்பது இயலாத காரியம்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நம்முடைய மாநிலத்திலே தீவிரவாதிகள் தேடுதல் வேட்டை, வெடிகுண்டு தேடுதல் வேட்டை என்று ஒவ்வொரு முஸ்லிம்கள் வீட்டில் மட்டுமே சோதனை செய்யப்படுகிறது. இந்த நிலை எப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்குகிறது என்றால், அக்கம் பக்கத்திலே இருக்கக்கூடிய முஸ்லிம்கள் இந்துக்களுடன் சகோதர மனப்பான்மையோடு வாழ்ந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலையில், குறிப்பிட்ட ஒரு முஸ்லிம் வீட்டில் மட்டும் சோதனை செய்வது ....

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலையிலேயிருந்து ஒரு தவறான தகவல் இந்த அவைக்குத்

தரப்படுகின்றது. சோதனை என்பது எல்லா இடங்களிலும் நடைபெறுகிறது. கோவையிலே இருந்து வந்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இலட்சுமணன் அவர்களுக்குக்கூடத் தெரியும். அவருடன் நான் பேசிக் கொண்டிருந்தேன். எல்லா இடங்களிலும் நடைபெறுகிறது. சோதனைகளை T.V.யிலேகூடக் காட்டுகிறார்கள். அப்படிக் காட்டும்போது நீங்கள் பார்த்தால், எந்தவிதமான மிரட்டலோ அல்லது வற்புறுத்தலோ அல்லது கொடுமையோ நிகழ்த்தாமல், மிகச் சிநேக பாவத்தோடு, அவர்களை அணுகி, உங்கள் வீட்டிலும் குண்டு இருக்கக்கூடும்; அதனால் உங்களுக்கேகூட ஆபத்து வரக்கூடும் என்கின்ற அந்த அளவிலேதான் எடுத்துக்கூறி, அப்படித்தான் சோதனை நடைபெறுகிறதேயல்லாமல், இஸ்லாமியர்களை மாத்திரம் மிரட்ட வேண்டும், பயமுறுத்த வேண்டும் என்ற அளவிலே நடைபெறவில்லை. அப்படி நடைபெற்றால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுமேயானால் நிச்சயமாகத் தடுக்கப்படும். ஆனால், தீவிரவாதிகள் யாராக இருந்தாலும், அவர்கள் இந்து மதத்தவர்களாக இருந்தாலும், முஸ்லிம் மார்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் காலையிலேயே நம்முடைய சுப்பராயன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு விளக்கம் அளித்தபோது விரிவாகக் கூறியிருக்கின்றேன். அதையும் கவனத்திலேகொள்ள வேண்டும். அண்மையிலேகூட, தீவிரவாதிகளிலே இந்து மக்கள் கட்சியைச் சேர்ந்த இரண்டு தலைவர்கள் 2 நாட்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதையும் கவனத்திலேகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல. கோவையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சம்பவங்களில்—இங்கே பேசுவதற்கு நேரம் இல்லை எனக்கு. இன்னொரு வாய்ப்பு கிடைத்தால் பேசுவேன். இந்த சம்பவங்களிலே நஷ்டமுற்ற, இழப்புக்கு ஆளான பலரில், 90 சதவிகிதம் பேர், இஸ்லாமிய பெருமக்கள் உரிய நஷ்டஈட்டை, ஏறத்தாழ 50 இலட்சம், 60 இலட்சம் ரூபாய்க்கு மேல் பெற்றிருக்கிறார்கள். அதையும் கவனத்திலே கொள்ளவேண்டும். இதிலே இந்து மதம், முஸ்லிம் மார்க்கம் என்ற பேதம் காட்டாமல் வன்முறையாளர்கள் எங்கிருந்தாலும் அவர்களைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் இதிலே மதப் பேதம் காட்டாமல் வன்முறையாளர்கள் எங்கேயிருந்தாலும் அவர்களை அடக்க வேண்டுமென்ற இந்தக் கொள்கைக்கு அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-50

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. முதலமைச்சர் அவர்கள், எப்போதும் பொதுநோக்கு, பெருநோக்கு என்றிருப்பதை யாரும் விளக்கிடத் தேவையில்லை. எல்லோரையும்விட நாங்கள் மிக நன்றாக அறிந்திருக்கிறோம். இப்போது நடந்துள்ள சம்பவங்களில், முதலமைச்சருடைய எண்ணத்திற்கு மாறாக சில சம்பவங்கள் நடந்திருப்பதைத்தான், அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில், இந்த ஆட்சியின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றுதான் சில விஷயங்களை இங்கே சொல்கிறோமே தவிர வேறல்ல. இதனால் நாட்டினுடைய நிலை மாற வேண்டும், நாட்டிலே கொந்தளிப்பு ஏற்பட வேண்டுமென்று கொஞ்சமும் சிந்திக்காத மக்கள்தான் இதை எடுத்துச் சொல்கிறார்கள். அந்தவகையிலே எங்களைக் கணக்கிட வேண்டாம் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்துல் நாசர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. விவாதத்தை இப்படியே நீட்டித்துக்கொண்டே போனால், அது முடிவுக்கு வராது. அப்துல் நாசர் பேசுங்கள் (குறுக்கீடு) இதிலே என்ன Point of Order ? உட்காருங்கள். அப்துல் நாசர், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. முஸ்லிம்களுடைய வீடுகளைச் சோதனையிடுகிறபோது, பக்கத்திலே இருக்கக்கூடியவர்கள், இவர்களை விரோதமாகவும், தவறாகப் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலே மட்டும் நடக்கிறது என்பதால்தான் நாங்கள் இதை எடுத்துச் சொல்கிறோம். நிச்சயமாக முஸ்லிம்கள்மீது மட்டும் தனிப்பட்ட முறையிலே திணிக்கப்படுகிறது என்று சொல்லவில்லை. முஸ்லிம்கள் வாழக்கூடிய பகுதியில், பிற சமுதாயத்தினரும் உள்ளபோது அவர்களைக் குரோத மனப்பான்மையோடு பார்க்கக்கூடிய ஒரு நிலை உருவாகிறது. அங்கு வரக்கூடிய அதிகாரிகளும், அத்துமீறியும் சில இடங்களில் நடந்துகொள்கிறார்கள் என்பதையும் நான் இந்தநேரத்திலே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். *(குறுக்கீடு)*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே என்ன Point of Order?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** சொன்ன பிறகு தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடித்த பிறகு, முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர். *(குறுக்கீடுகள்)*

*(திரு. இரா. தாமரைக்கனி, திரு. ஐ. கணேசன், திரு. ஜி.கே. மணி, டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் எழுந்து நின்றனர்)*

ஒரே நேரத்தில் அனைவரும் எழுந்து நின்றால் நன்றாக இருக்காது, உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர். என்னைப் பார்த்து எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு....*(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்று விவாதமும் பதிலுரையும் 1-30 மணிக்கு முன்னால் முடிக்க வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் எல்லாம் மூத்த உறுப்பினர்கள். தயவுசெய்து சபையை நடத்துவதற்கு ஒத்துழைப்பு கொடுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடிக்கட்டும். திரு சுந்தரம், உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** எங்கள் கட்சி சார்பாகப் பேச வாய்ப்பு தரவில்லையே!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பெயர் தரவில்லை. *(குறுக்கீடு)* ஏற்கெனவே வந்து தரவில்லை. *(குறுக்கீடு)* ஒரு நிமிடம் இருங்கள். என் பேச்சை கேட்டுக்கொள்ளுங்கள். பேரவைத் தலைவர் பிறகு சொன்னார் நேரம் இருந்தால் உங்களை அனுமதிக்கிறேன் என்று. இப்போது ஒன்றும் கெட்டுப் போகவில்லை. நாளைக்கு வேறு விவாதத்தின்போது பேசுங்கள். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் பேசலாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.



*(திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி.ஆர் சுந்தரம், திரு. ஐ. கணேசன், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் எழுந்து நின்றனர்)*

ஒரே நேரத்தில் 4 பேர் எழுந்து நின்றால் நான் என்ன செய்வது? உட்காருங்கள். திரு. சுந்தரம், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெடிகுண்டு சோதனை செய்வதில் எங்களுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால், வெடிகுண்டு சோதனை என்ற பெயரில் எங்களுடைய சேலம் மாவட்டத்தில், கிணறு வெட்டுவதற்குப் பயன்படுத்தக்கூடிய தோட்டா, ஜெலட்டின் வெடிக்குச்சிகள் இவற்றையெல்லாம் பறிமுதல் செய்ததால், அங்கே ஒரு கிணறுகூட வெட்ட முடியாத நிலை இருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். ஜெலட்டின் வெடிக்குச்சிகளை நீங்கள் கைப்பற்றுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். உண்மையான வெடிகுண்டுகளைக் கண்டுபிடிப்பதற்கு நாங்கள் எந்தவிதமான தடையும் சொல்லவில்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவரவர்களே, எனக்கு 5 நிமிடங்கள் பேசுவதற்குத் தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்று நீங்கள் மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையில் பேசினீர்கள். நாளைக்கு வேறு விவாதத்தின்போது நீங்கள் பேசலாம். இன்றைக்கு முழுநாளும் எல்லாப் பிரச்சினைகளிலும் நீங்கள் பேசினீர்கள், உட்காருங்கள். பிறகு, பேரவைத் தலைவர் அவர்களுடைய அறைக்கு வாருங்கள். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் பேசலாம்.

பிற்பகல் 12-55

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியத்தின்மீது ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்தவுடன், பல நல்ல திட்டங்களை எல்லாம் அறிவித்தார்கள். என்ன காரணத்திற்காக நம்முடைய அரசு ஏற்பட்டது? நாட்டிலே ஊழலே இல்லாத ஓர் ஆட்சி ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் கடந்த தேர்தலிலே நாம் வாக்கு கேட்டோம். அந்த முறையில், ஊழலற்ற ஓர் அரசு எப்படி அமைய வேண்டும் என்பதற்காக Ramanujam Commission-ஐ நம்முடைய முதலமைச்சர்

அவர்கள் நியமித்தார்கள். அதேபோல் வருவாய்த் துறையில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதையெல்லாம் கண்டுபிடிப்பதற்காக Sabanayagam Commission அறிவித்தார்கள். அவையெல்லாம் நல்ல காரியங்கள். ஆனால் அந்த அறிக்கைகள் எல்லாம் இன்னும் இந்த அவையில் வைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே கூற விரும்புகிறேன். Ramanujam Commission, மிக அருமையான ஓர் அறிக்கையைத் தயாரித்து, அரசுக்கு 1997 செப்டம்பர் மாதமே கொடுத்துவிட்டது. கிட்டத் தட்ட 15 மாத காலம் ஆகியும், அந்த அறிக்கையை நம்முடைய அரசு இந்த அவையில் வைக்கவில்லை. அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதும் தெரியவில்லை. ஆரம்ப சூரத்தனம் என்று சொல்வார்கள். நம்முடைய அரசு ஏற்பட்டவுடன் இருந்த வேகம் படிப்படியாகக் குறைந்து வருகிறது. அதனால்தான், Ramanujam Commission அறிக்கையை வைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். இனிமேலாவது உடனடியாக அந்த அறிக்கையை இந்த அவையில் வைத்து...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு அதிக நேரம் இல்லாத காரணத்தினால், இடையிடையே ஒவ்வொன்றைச சொல்லிவிட்டால், பிறகு அதைப் பற்றிப் பேசத் தேவையிருக்காது என்பதற்காகச் சொல்கிறேன். Ramanujam Commission அறிக்கை, முதலில் ஒவ்வொரு துறைக்கும் அனுப்பப்பட்டு, அந்தந்தத் துறையினுடைய கருத்துக்கள் எல்லாம் பெறப்பட்டிருக்கின்றன. துறைகளினுடைய கருத்துக்களைப் பெற்ற பிறகு, ஒவ்வொரு அமைச்சரும்— அந்தந்தத் துறையினுடைய அமைச்சரும்—அதைப் பரிசீலித்து, தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று மூன்று முறை அமைச்சரவைக் கூட்டத்திலே அதுபற்றி விவாதிக்கப்பட்டு, தொடர்ந்து அடுத்த கூட்டத்திற்கு மேலும் விவாதிக்க ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே முடிவெடுக்கப்பட்டு, வருகின்ற நிதிநிலை அறிக்கைக்கான கூட்டத்தொடரில் Ramanujam Commission அறிக்கை வைக்கப்படும்.

இன்னொன்று. சபாநாயகம் குழுவின் அறிக்கையைப் பற்றிக் கேட்டார்கள். அந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கு சபாநாயகத்திற்கு சென்ற காலத்திலே, எவ்வளவு இடர்ப்பாடுகள் ஏற்பட்டன என்பதும், அவரே தாக்கப்படுகிற அளவுக்குச் சூழ்நிலைகள் ஏற்பட்டன என்பதும், எவ்வளவோ பிரச்சினைகளை உள்ளடக்கி அந்த அறிக்கை இருக்கிறது என்பதும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மிக



நன்றாகத் தெரியும். எனவே, இதுபற்றித் தீர ஆலோசித்த பிறகு, எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்களைக் கலந்துகொண்டு, அதனை இந்த அவையிலே வைக்கலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்து நியாய விலைக் கடைகளைப் பற்றி விரிவாகப் பேச வேண்டும். நேரம் இல்லாததால், ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்கிறேன். சாத்தூரிலேயிருந்து, ஒரு தபால் நம்முடைய நியாய விலைக் கடை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குப் போயிருக்கிறது; எனக்கும் வந்திருக்கிறது. சாத்தூர் தாலுகா, இராமலிங்கபுரம் கூட்டுறவு விவசாய நாணய சங்கத்தில் மைதா மாவைக் கொடுக்கிறார்கள்.

(எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் தான் கையில் வைத்திருந்த ஒரு பொட்டலத்தை அவையிலே காண்பித்தார்)

ஏப்ரல் மாதத்தோடு இதில் குறிப்பிட்ட தேதி முடிந்துவிட்டது. இதிலே தேதி போட்டிருக்கிறார்கள். எல்லாம் உள்ளே இருக்கிறது. இதைப் பிரித்தால் எங்கும் மாவாகப் போய்விடும் என்பதற்காக அப்படியே இங்கு வைத்திருக்கிறேன். ஏப்ரல் மாதத்தோடு காலம் முடியக்கூடிய மைதா மாவைக் கொடுத்து, இதை வாங்கினால்தான் உங்களுக்கு மண்ணெண்ணெய் என்று கட்டாயப்படுத்துகிறார்கள் என்று எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும் எழுதியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எழுதியிருக்கிறார்கள். அதிலே 80 பேர் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். இதை நம்முடைய அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சந்தன மரத்திற்கு காப்பீடு என்று நம்முடைய துணை மானியத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இது எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. சந்தன மரம் ஏற்கெனவே தீப்பிடித்துப்போய் இருக்கிறது. அவ்வாறு தீப்பிடித்த மரம் சந்தன மரமா அல்லது வேறு மரமா என்ற சந்தேகம் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில், சந்தன மரத்திற்கு காப்பீடு செய்ய வேண்டுமென்றால், ஒரு சந்தன மரம்கூட இனிமேல் இருக்காது. எல்லாம் திருடப்பட்டு அதற்குப் பதிலாக வேறு மரத்தை வைத்து, அதிலே தீ வைத்துவிட்டு, அதைக்காட்டி காப்பீட்டுத் தொகை வேறு வாங்கி விடுவார்கள். ஆகவே நம்முடைய முதலமைச்சர்

அவர்கள் இதிலே அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, அரசமைப்புச் சட்டத்திலே 356-வது சட்டப் பிரிவு இருப்பது நாட்டுக்கு ஆபத்து என்று பலர் சொல்கிறார்கள். அது இருக்க வேண்டுமென்றும் சொல்கிறார்கள். கடைசி ஆயுதமாக அந்த 356-வது பிரிவைப் பயன்படுத்தலாம் என்றும் சொல்கிறார்கள். அதேபோல சந்தன மரத்திற்கான காப்பீட்டிற்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள்; அதைக் கொஞ்சம் கவனமாக கவனித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, வாடகைக் கார்களுக்கான Number Plate-க்கு ஒரு நிறம் கொடுத்து இருக்கிறோம், கருப்பு, வெள்ளை என்று. அந்த நிறத்தை தயவுசெய்து எடுத்துவிட்டால் நல்லது. ஏனென்றால், நாம் இப்போது ஊருக்கு Taxi-யிலே போகும்போது, அங்குள்ளவர்கள் ஏன் சொந்த வண்டியிலே வராமல் Taxi-யிலே வருகிறீர்கள் என்று கேட்கிறார்கள். சொந்த வண்டியிலே போனால், ஏன் அம்பாஸிடரிலே வருகிறீர்கள், சுமோவிலே ஏன் வரவில்லை என்று கேட்கிறார்கள். மக்களுடைய மனதே அப்படி மாறிப்போய்விட்டது. கேரளாவிலே அப்படிப்பட்ட நிலை இல்லை என்று நினைக்கிறேன். ஆகையினால், Taxi-யிலே உள்ள அப்படிப்பட்ட நிறத்தை சுத்தமாக எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சலவைத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு வாரியம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தனி வாரியம் அமைக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 1-00

அதேபோல தையல் தொழிலாளர்கள் தனி வாரியம் கேட்கிறார்கள். நகராட்சிகளைப் பற்றி விரிவாக நம்முடைய திரு. திருநாவுக்கரசு அவர்கள்கூடச் சொன்னார்கள். நகராட்சிகள் எல்லாம் இன்று 20%, 30% வரி போட வேண்டுமென்று கேட்டிருக்கின்றன. குறிப்பாக கோயம்புத்தூரைப் பொறுத்தவரை அது மிகவும் பாதிக்கப்பட்ட ஊர். அதற்கு மட்டுமாவது விதிவிலக்கு அளிக்க வேண்டும் அல்லது 10% வரை வரி போட வேண்டும் அல்லது இதை ஒத்திவைக்க வேண்டும்.

அடுத்து தேநீர் கடைக்காரர்கள் எல்லாம் போராட்டம் நடத்தினார்கள். உண்ணாவிரதம் இருந்தார்கள். இங்கே 10,000 தேநீர் கடைகள் இருக்கின்றன. அவர்கள் Licence-க்கு வெறும் 10 ரூபாய்தான் செலுத்த வேண்டும். ஆனால் அந்த 10 ரூபாய் செலுத்தி Licence வாங்குவதற்கு ஏராளமாகச் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள்.



தேநீர் கடை, பெட்டிக் கடைகளுக்கு Police உரிமம் பெற வேண்டுமென்று சுதந்திரம் அடைவதற்கு முன்பு, அதாவது 1933 ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டது. அதற்குக் காரணம் பெட்டிக் கடை, தேநீர் கடைகளில் ஆட்கள் கூடிப் பேசி சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்று நினைத்து வெள்ளையர் அரசாங்கம் அந்த உத்தரவைப் போட்டது. இப்போது இந்த உத்தரவு நியாயமற்றது என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்கள். 'கலைஞர் கருணாநிதி அறிக்கை' என்று பத்திரிகையில் வந்திருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் மிக நீண்ட ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக தேநீர் கடைகள் Licence வாங்க வேண்டும் என்றுள்ள உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக, சொல்ல வேண்டிய இன்னொன்று என்னவென்றால் கொலைகள் என்பது இந்த நாட்டிலே பட்டப் பகலிலேயே நிறைய நடக்கின்றன. பேருந்தில் போய்க்கொண்டிருக்கிறபோதே எதிரிகள் பேருந்தை நிறுத்தி, அவர்களை வெளியே இழுத்துப் போட்டு கொலை செய்கிற சூழ்நிலை பரவலாக இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு நான் என்னுடைய யோசனையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கொலை செய்கிறவர்களை உடனடியாகப் பிடித்து 6 மாதத்திற்குள்ளாக அவர்களுக்குத் தண்டனை கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வந்தால்தான் இந்தப் பகல் கொலைகள் எல்லாம் நிற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கடுமையான கொலைகாரர்களுக்கென தனி நீதிமன்றம் அமைத்து அந்தக் கொலைகளைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறை மூலமாக நல்ல முறையில் கால்வாய்களை எல்லாம் ஆழப்படுத்தியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் ரெகுநாத காவேரி மற்றும் இரண்டு கால்வாய்களை ஆழப்படுத்த நம்முடைய முதலமைச்சர் அவர்களே வந்து தொடங்கி வைத்தார்கள். அதில் ஒன்றை மட்டும் ஆழப்படுத்தியிருக்கிறார்கள். மக்களிடம் நான் போய் என்ன நம்முடைய முதலமைச்சர் அவர்களே வந்து தொடங்கி வைத்து இரண்டை ஆழப்படுத்தவில்லை. ஆழப்படுத்தினார்களே, எப்படி என்று கேட்டால், ஆழப்படுத்தாமலே இருந்திருக்கலாம் என்று சொல்கிறார்கள். ஏனென்றால் கால்வாயை ஆழப்படுத்தியிருக்கிறார்கள், அதில் வருகிற கிளைக் கால்வாய்களை ஆழப்படுத்தாததால் தண்ணீர் முழுவதும் கடலில் போய்

விழுந்துவிட்டது. அதை ஆழப்படுத்தாமல் இருந்தாலாவது எங்களுக்குப் பரவலாக தண்ணீர் கிடைத்திருக்கும் என்று ஒரு குறையைச் சொல்கிறார்கள். ரெகுநாத காவேரியை ஆழப்படுத்துகிறபோது அதிலிருக்கிற கிளைக் கால்வாயையும் ஆழப்படுத்தியிருக்க வேண்டும். இனிமேலாவது அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி நெசவாளர்களைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். பரமக்குடி நெசவாளர்களைப் பொறுத்தவரையில் அங்கே அவர்களுக்கு Stock எல்லாம் தீர்ந்துவிட்டது என்று மகிழ்ச்சியோடு சொன்னார்கள். அந்த ஊரில் மட்டும் கிட்டத்தட்ட 6 கோடி ரூபாய் Stock விற்பனையாகி இருக்கிறது. அதற்காக நான் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய Stock-ஐ எடுக்க வேண்டுமென்று அவர்கள் நடத்திய போராட்டத்தின் காரணமாக அவர்கள்மீது போடப்பட்ட வழக்கு 2 ஆண்டுகளாக அப்படியே இருக்கிறது. அதையும் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறை பற்றி 1 மணி நேரமாவது பேச வேண்டுமென்று நான் கருதினேன். போக்குவரத்துத் துறையில் புதிய பேருந்துகூட விட்டிருக்கிறார்கள். அந்தப் பேருந்துகூட அங்கங்கே நின்று கொண்டிருக்கிறது. என்ன காரணமென்று கேட்டால் Maintenance இல்லை என்று சொல்லுகிறார்கள். ஓட்டை, உடைசல் என்பது சாதாரணமாக இருக்கிறது. அதை இன்னொரு தடவை Budget கூட்டத் தொடரிலே விரிவாக வைத்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன். ஆகவே போக்குவரத்துத் துறையை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டிலேயே சத்திரப்பட்டியில்தான் அதிகமாக Surgical Cotton தயார் பண்ணுகிறார்கள். Bandage cloth. அந்தக் Cloth-திற்கு ஏற்கெனவே நாங்கள் முதலமைச்சர் அவர்களிடம் கேட்டு அவர்களும் 50 இலட்ச ரூபாய் வரை exemption கொடுத்தார்கள். உற்பத்திக்குப் போடப்பட்டிருக்கும் வரி 2 கோடி ரூபாய் அளவுக்கு வசூல் செய்யவேண்டுமென்று அவர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அதன் காரணமாக இந்தியா முழுவதும் நடைபெறுகின்ற இந்த வணிகம் பாதிக்குமோ என்று அந்த நெசவாளர்கள் அஞ்சுகிறார்கள். எனவே சத்திரப்பட்டி நெசவாளர்கள்மீது போடப்பட்ட வரிகளனைத்தையும் இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-05

அடுத்து காலையில் இங்கே சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் பிரச்சினைபற்றி பேசப்பட்டு, அதற்குத் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். அதில் எங்களுக்குத் தெளிவே வரவில்லை. முதலமைச்சரவர்கள்தான் தகுந்த பதில் சொல்ல வேண்டும். ஏனென்றால் அந்தத் தொழிலாளர்கள் 20 சதவிகித bonus கேட்கிறார்கள்; புதிய settlement கேட்கிறார்கள். அதற்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்லவில்லை. விளக்கம் சொன்னதோடு நின்று விட்டார். அதற்குமேல் ஒன்றும் சொல்ல முடியாது. முதலமைச்சரவர்கள்தான் இன்று, இந்தப் பதிலுரையிலே சொல்ல வேண்டும். கரும்பு வெட்டுவதைப் பொறுத்தவரையில்—அவை வெட்டப்படாத நிலையிலே இருக்கின்றன—இது மிகப்பெரிய பிரச்சினையை உருவாக்கும் என்பதால், முதலமைச்சரவர்கள் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு என்ன Bonus கொடுக்கப் போகிறார்கள்; புதிய settlement எப்போது போடப்போகிறார்கள் என்பதை இப்போதே சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திண்டுக்கல் மாவட்டத்தில் குடகனாற்றில் மணல் எடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் Licence கொடுத்து, அதன் காரணமாக அங்கே 16 அடி, 20 அடி வரை தோண்டி, ஆற்றில் மணல் எடுத்துக்கொண்டு போகிறார்கள். அதற்காக மக்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களுடைய கோரிக்கையைச் செவிமடுத்து, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, E.A.S. திட்டம் என்பது மத்திய அரசிலிருந்து வருகின்ற நல்ல திட்டம். அதிலே சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், N.G.O.-க்கள் இவர்களையெல்லாம் கொண்ட ஒரு குழுவை அமைத்து, சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. ஐ. கணேசன் பேசுவதற்காகப் பெயரைக் கொடுத்திருந்தார். நேரம் இல்லாத காரணத்தால் அவரைப் பேச அழைக்கவில்லை. பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொறுத்தருள அல்ல. பொறுத்து அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்றைக்கும் இல்லாத அளவுக்கு துணை மானியக் கோரிக்கையில், அவையிலே உள்ள தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் எல்லோரும் பேச வேண்டுமென்கின்ற ஆவல் எழுந்திருக்கின்றது என்றால், நிதிநிலை அறிக்கைக்கு மாத்திரமல்ல, துணை மானியத்திற்குக்கூட இந்த ஆட்சியிலே மதிப்பு அதிகமாக இருக்கிறது என்பதைத்தான் அது காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நான் கேள்விப்பட்டேன். ஏறத்தாழ 900-க்கும் மேற்பட்ட வெட்டுப் பிரேரணைகள் இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே தரப்பட்டு, அவை வடிகட்டப்பட்டு 160 வெட்டுப் பிரேரணைகள் இங்கே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்று நான் கேள்விப்பட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் எல்லா வெட்டுப் பிரேரணைகளிலும் குறிப்பாக அவரவர்களுடைய தொகுதிகளுக்குத் தேவையானவை, குறிப்பிடத்தக்க அளவுக்கு, சுட்டிக்காட்டத்தக்க அளவுக்கு அமைந்திருக்கின்றன.

இங்கே ஆற்றிய உரைகளுக்கெல்லாம் உடனடியாக நான் பதிலளித்து, இன்னின்ன செய்யப்படும், இன்னின்ன காரியங்கள் செய்ய இயலாதவை என்றெல்லாம் சொல்லுகின்ற நிலை இப்போது இல்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, இங்கே வைக்கப்படுகின்ற கோரிக்கைகள், முறையீடுகள், சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் அனைத்தும் உடனடியாக பதிலுரையிலே இடம்பெறும் என்று எதிர்பார்க்கக் கூடாது. அவர்கள் தெரிவித்ததைப்போல வரவிருக்கின்ற ஆளுநர் உரைக்கு அடுத்து இந்த மாமன்றத்திலே வைக்கப்பட இருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் இவையெல்லாம் பரிசீலிக்கப்பட்டு, கூடுமானவரையில் அவற்றை நாங்கள் சிந்தித்து, அந்த உரையிலே இடம்பெறச் செய்வோம் என்ற உறுதியை முதற்கண் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே உரையாற்றியவர்களில் நம்முடைய தாமரைக்கனி தன்னுடைய தொகுதிக்கு எதுவுமே செய்யவில்லை, என்னிடத்திலே பட்டியல் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்தப் பட்டியலை நான் கேட்டிருக்கிறேன். அவர் மாத்திரமல்ல, எல்லாத் தொகுதி



உறுப்பினர்களுமே முதலமைச்சர் அலுவலகத்திற்கு தங்கள் தொகுதியினுடைய தேவைகள் குறித்து, செய்யக்கூடிய, செய்ய இயன்ற, முக்கியமான தேவைகள் குறித்து அனுப்புவார்களேயானால், சம்பந்தப்பட்ட, தொடர்புடைய அமைச்சர்களுடைய துறைகளுக்கு அனுப்பி, அவர்களோடு தொடர்புகொண்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கு என்னால் இயன்றவற்றைச் செய்வேன் என்ற உறுதியையும் இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உரையாற்றும்போது முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதாவது சந்தன மரக் கட்டைகளுக்கு insurance செய்யத் தேவையா, அதிலே உள்ள ஆபத்தை உணர்கிறீர்களா என்று கேட்டார்கள். உண்மையிலேயே இந்த insurance மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றது என்பதற்கு ஓர் உதாரணத்தை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். சத்தியமங்கலம், சேலம், திருப்பத்தூர் ஆகிய இந்த மூன்று இடங்களில் மாத்திரம் ஏறத்தாழ 400 கோடி ரூபாய் அளவில் சந்தன மரக் கட்டைகள் விற்பனைக்காக இப்போது தயாராக இருக்கின்றன. எனவே அவற்றிற்கு insurance பாதுகாப்பு நிச்சயம் தேவை. இந்த 400 கோடி ரூபாய் சந்தன மரக் கட்டைகளுக்கு insurance செய்யும் போது கவலைப்பட வேண்டியது insurance கம்பெனியே தவிர, நானும் அல்ல, எதிர்க் கட்சித் தலைவரும் அல்ல. அந்த சந்தன மரக் கட்டைகளுக்கு ஆபத்து ஏற்படுமேயானால் அந்த 400 கோடி ரூபாயை Insurance Company-யிலிருந்து பெறுவதற்காகத்தான், ஒரு பாதுகாப்பாகத்தான் அரசு இந்த insurance-ஐ செய்கிறதேயல்லாமல் வேறல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-10

கால்நடைக் கல்லூரி மாணவர்களுடைய பிரச்சினை பற்றிதான் இங்கே காலையிலும் பல உறுப்பினர்கள் பேசினார்கள் திரு திருநாவுக்கரசு அவர்கள் விளக்கமாக அதைப் பற்றிப் பேசி இருக்கின்றார்கள். இப்போது அவர்களுடைய கோரிக்கைகள், ஐந்து கோரிக்கைகள். அதிலே முதல் கோரிக்கை, 7-10-1998 முதல் மூடப்பட்டுள்ள சென்னை, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட வேண்டும், நிபந்தனையில்லாமல் உடனடியாகத் திறக்கப்பட வேண்டும் என்பது முதல் கோரிக்கை. அதை ஏற்பதிலே எந்தவிதமான மாறுபாடான கருத்தும் கிடையாது.

இரண்டாவது கோரிக்கை, போராட்டத்தின்போது மாணவர்கள்மீது தொடுக்கப்பட்ட வழக்குகள், நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் பல்கலைக்கழகத்தினால் தொடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியவற்றை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். இது இந்த அரசிலே, அவற்றைத் திரும்பப் பெறுவது என்பது வியப்புக்குரிய ஒன்றல்ல. இரக்க சிந்தனையோடு, கருணை உள்ளத்தோடு அந்தக் கோரிக்கையை இந்த அரசு ஏற்கத் தயாராக இருக்கிறது.

மூன்றாவது கோரிக்கையைப் பற்றிதான் மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே உள்ள 2,126 காலநடைக் கிளை நிலையங்களை மருத்துவமனைகளாக உயர்த்தி, அங்கே கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டுமென்கிறார்கள். ஒரு கால்நடைக் கிளை நிலையத்தை, நிலை உயர்த்தவே 5.34 இலட்ச ரூபாய் செலவு ஆகிறது. அவர்கள் குறிப்பிடுகிற 2,126 கால்நடைக் கிளை நிலையங்களையும் நிலை உயர்த்த 113 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இது உடனடியாக உறுதியளிக்கக்கூடிய காரியமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, நான்காவது கோரிக்கையாக, தமிழ்நாடு தேர்வாணையத்தின் தேர்வுப்படி தேர்ந்தெடுக்காமல் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை நேரடி நியமனத்தின் மூலம் நியமனம் செய்யவேண்டும் என்கிறார்கள். இது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையத்தையே புறக்கணிக்கத் தூண்டுகிற செயலாகும். இதை எப்படி ஏற்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஐந்தாவது கோரிக்கை, கால்நடை ஆய்வாளர்களுக்கான பயிற்சியை காலவரையில்லாமல் நிறுத்திவிட வேண்டும். இதை, கால்நடை ஆய்வாளர் பணிக்கு வர விரும்புகின்றவர்களைத் தடுக்கின்ற செயலாகத்தான் இந்த அரசு கருதுகிறது. மேலும் கால்நடை மருத்துவர்களுக்கு, சிகிச்சையின்போது உதவியாளர்களாக இருக்கக்கூடிய கால்நடை ஆய்வாளர்களுடைய பணி, கால்நடை ஆய்வாளர்கள் மாத்திரமே செய்யக்கூடிய பணி என்பதை மறந்துவிடக் கூடாது.

கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் தொடங்கப்பட்ட புதிய கால்நடை மருந்தகங்கள் 106 தான். தற்போது இந்த ஆட்சியிலே இந்த 2 ஆண்டு காலத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மருந்தகங்கள் 163 என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளில் ஒருவரைக்கூட அரசு நியமனம் செய்யவில்லை. அப்போதெல்லாம் யாரும் strike செய்யவில்லை;



வேலைநிறுத்தம் செய்யவில்லை. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்பதைப்போல, இப்போதுதான் எல்லாம் நடைபெறுகிறது. தற்போது புதிதாக 174 கால்நடை மருத்துவப் பட்டதாரிகளைத் தேர்வு செய்ய ஆணையிடப்பட்டு, தேர்வாணையத்தின் மூலமாகத் தேர்வு செய்து, 31-10-1998 அன்றே அனைவருக்கும் பணி நியமனங்கள் வழங்கப்பட்டுவிட்டன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 1997-98 ஆம் ஆண்டு தங்களது கல்விக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தபோது, அதைக் கனிவோடு பரிசீலித்து 1,500 ரூபாய் என்று இருந்த கட்டணத்தை 1,000 ரூபாயாக Semester Fees-ஐ குறைத்ததும் இந்த அரசுதான். மாணவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை அரசு கனிவோடு எப்போதும் பரிசீலித்து வந்திருக்கிறது. எனவே நான் திருநாவுக்கரசு அவர்கள் மூலமாக அந்த மாணவர்களுக்கு எடுத்துச் சொல்வதெல்லாம், இதிலே அரசினுடைய—முடியாது என்கிற பிடிவாதமல்ல—இயலாமையை எண்ணிப் பார்த்து தாங்கள் வைக்கின்ற கோரிக்கை எந்த அளவிற்கு நியாயமானது, எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட முடியாதது என்பதை எண்ணிப் பார்த்து அவர்கள் தங்களுடைய போக்கை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

இங்கே மிக முக்கியமாக காலையிலே எல்லாக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து, சர்க்கரை ஆலைகளிலே பணிபுரியும் தொழிலாளர்களுடைய bonus-ஐப் பற்றி வலியுறுத்திப் பேசியிருக்கின்றார்கள். இங்கேயுள்ள கட்சிகள் மாத்திரமல்ல, இங்கே ஆளும் கட்சியின் சார்பிலே யாரும் பேசாவிட்டாலும்கூட, அவர்களும் என்னிடத்திலே அதைப் பற்றி, அதனுடைய நிலைமைகளைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். தொழிற்சங்கங்களும், அது C.P.I.-யைச் சார்ந்த சங்கமாகயிருந்தாலும், C.P.M-ஐயைச் சார்ந்த சங்கமாகயிருந்தாலும், தி.மு.க.வைச் சார்ந்த சங்கமாகயிருந்தாலும், தொ.மு.ச. பேரவையாகயிருந்தாலும், எல்லாச் சங்கங்களுமே இப்படி அ.தி.மு.க. தொழிற்சங்கத்தின் சார்பாக எந்தக் குரல் எழுப்பப்படுகிறதோ, அந்தக் குரலுக்கு வலுவாக, அதேநேரத்தில் அரசினுடைய இயலாமையை எண்ணிப் பார்க்கின்ற நிலைமையிலே இன்றைக்கு எல்லாச் சங்கங்களும் இந்தக் குரலை எழுப்பியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் இத்தனைபேரும் பேசியதற்குப் பதிலாக அல்ல, ஒரு விளக்கமாக ஒன்றைச் சொல்ல

விரும்புகிறேன். தமிழ்நாட்டில்தான் மற்ற மாநிலங்களைவிட கரும்புக்கு அதிக விலை தருகின்றோம். ஆந்திராவிலே சர்க்கரைக் கட்டுமானம் 10.22 சதவீதம், அங்கே டன் ஒன்றுக்கு விலை 630 ரூபாய். கர்நாடகாவிலே சர்க்கரைக் கட்டுமானம் 10.54 சதவீதம், அங்கே கரும்பு டன் ஒன்றுக்கு 730 ரூபாய். மராட்டியத்திலே 11.11 சர்க்கரைக் கட்டுமானம், அங்கே 680 ரூபாய். குஜராத்தில் 10.72 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம், அங்கே ஒரு டன் கரும்பு விலை 648 ரூபாய். தமிழ்நாட்டில் சர்க்கரைக் கட்டுமானம் 8.94 சதவீதம். இந்தக் குறைந்த சர்கரைக் கட்டுமானம் உள்ள அந்தக் கரும்புக்கு நாம் தருகின்ற தொகை 753 ரூபாய் என்பதை நீங்கள் ஞாபகத்திலே வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், மத்திய அரசு பரிந்துரைத்திருக்கின்ற விலை 484 ரூபாய்தான். மத்திய அரசு குறிப்பிட்ட விலை 484 ரூபாய். ஆனால், 8.94 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்புக்கு இந்த அரசு நிர்ணயித்துள்ள விலை 753 ரூபாய் என்பதையும் மறந்துவிடக் கூடாது. இந்த இடைவெளி வித்தியாசம் இருக்கின்றதே, 484-க்கும் 753-க்கும் உள்ள இந்த இடைவெளி வித்தியாசம் இருக்கின்றதே, இதன் காரணமாக, கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, பொது ஆலை, இவைகளில் எல்லாம் ஏற்பட்ட நட்டத்தை, அதை ஈடுகட்ட முடியாமல் தவித்த நேரத்தில், விவசாயிகள் தங்களுடைய கடனைக் கேட்டபோது, அதைக் கட்ட முடியாமல், தர முடியாமல், இந்த ஆலைகள் தவித்தபோது, ஏறத்தாழ 80 கோடி ரூபாயை அரசின் சார்பிலே ஒதுக்கி, கடந்த மாதம் விவசாயிகளுக்கு அந்தத் தொகை தரப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலேதான், எப்போதும் லாப நட்டத்தை வைத்துதான் bonus-ஐக் கணக்கிட வேண்டுமென்று இருந்தாலும்கூட, நம்முடைய அரசின் சார்பிலே ஓரளவு அவர்களுடைய கருணைத் தொகையை உயர்த்துகிறோம். Bonus 8.33% லேயிருந்து 14.95% வரையிலே நிர்ணயிக்கிறோம் என்று சொல்லியும்கூட அவர்கள் கேட்கவில்லை. இப்போது, காலையிலே பல்வேறு கட்சிகளின் சார்பில் எடுத்துரைத்த கருத்துக்களின் அடிப்படையிலும் தொழிற்சங்கங்கள், C.P.I., C.P.M. குறிப்பாக, தொமுச. பேரவை போன்றவர்கள், இவர்களுடன் கலந்து பேசியதன் காரணமாகவும் - எல்லாவற்றுக்கும் கடந்த காலத்தைப்போல, கடந்த காலத்தைப்போலச் செய்யுங்கள் என்கிறார்கள். கடந்த காலத்தைப்போல இந்த ஆட்சியை நடத்த முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனாலும், இந்த கடந்த காலத்திலேகூட 1989-90-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பின்பற்றப்பட்ட கொள்கை என்கிற அளவில் அவர்கள் கேட்டதைப்போல, நீங்கள் அனைவரும் காலையிலே வைத்த





முறையீட்டை ஏற்றுகொண்டு, முந்தைய, கடந்த காலத்தைப்போல, 20 சதவீதம் Bonus அவர்களுக்கு வழங்கப்படும் என்று நான் இப்போது மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலத்தைப்போல 20 சதவீதம் Bonus வழங்க ஒத்துக்கொண்ட அதேநேரத்தில் கடந்த காலத்தில் Pay Scale-ஐப் பற்றி, ஊதிய விகிதத்தைப் பற்றி அவர்கள் 'SISMA' பிரதிநிதிகளோடுதான் பேசியிருக்கிறார்கள். 'SISMA'வோடு–பேசுவது ஒன்றும் தவறல்ல. Pay Scale-ஐப் பற்றி 'SISMA'வோடு–பேசுவது தவறல்ல. காலையிலே தொழிலாளர் நலத் துறை அமைச்சர் இரகுமான்கான் எடுத்துக்காட்டியதைப் போல 'SIMA' போல பொது அமைப்புகள் இருக்கின்றன. இப்போது 'SISMA'-உடன் உட்கார்ந்து அப்படிப் பேசும்போது தனியார்த் துறையிலே உள்ள சர்க்கரை ஆலைகளினுடைய Pay Scales-ம், கூட்டுறவுத் துறை, பொதுத் துறையிலே உள்ள Pay Scales-ம் நிர்ணயிக்கப்படுவது ஒன்றும் இடைஞ்சலாகி விடாது, எல்லாம் பொதுவான அமைப்புகள்தான். இந்தப் பொதுவான அமைப்பு பல ஆண்டுக் காலமாக இருந்திருக்கிறது. கடந்த காலத்திலேயும் இந்தப் பொதுவான அமைப்புதான் பேச்சுவார்த்தையை நடத்தியிருக்கிறது. எனவே அந்தப் பொதுவான அமைப்பன 'SISMA'-வின் பிரதிநிதிகளோடு பேசுவதற்கு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஒத்துக்கொள்ள வேண்டுமென்றும், 20 சதவிகித Bonus அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

நெசவாளர்களைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் தொடக்கத்திலே குறிப்பிட்டார்கள். அதற்கு கைத்தறித் துறை அமைச்சர் விளக்கங்களைக் கூறி இருக்கிறார்கள். 1998-99 ஆம் ஆண்டுக்கு மாத்திரம் இதுவரையிலே நெசவாளர்களுக்கு அளித்துள்ள நிதி வகை, இலவச வேட்டி சேலைகளுக்காக தொடக்கக் கூட்டுறவு நெசவாளர் சங்கம் மற்றும் Co-optex-க்கு 80 கோடி ரூபாய். பள்ளிச் சீருடைக்காக 25 கோடி ரூபாய், தள்ளுபடி மானியம் 79 கோடி ரூபாய். இப்படி 184 கோடி ரூபாய் நெசவாளர்களுக்காக இந்த அரசு நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறது. நெசவாளர்கள் கண்ணீரும்கம்பலையுமாக இருக்கின்றார்கள், அவர்கள் பட்டினிச் சாவிற்குக்கூட இன்றைக்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்றெல்லாம் அழகிரி அவர்கள் சொன்னார்கள். கைத்தறி நெசவாளர்களிடத்திலே இந்த அரசுக்கு கடந்த காலத்திலிருந்து இந்தக் காலம்வரை இருக்கின்ற அன்பின் காரணமாக, பரிவின் காரணமாக எத்தனையோ திட்டங்களை

அவர்களுக்காக நிறைவேற்றி இருக்கின்றது. அதிலும் குறிப்பாக இந்தத் தள்ளுபடியிலே உச்சவரம்பு கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே பலமுறை குரல் எழுப்பியிருக்கின்றார்கள். தள்ளுபடி உச்சவரம்பு என்பது ஒரு தொகையை நிர்ணயித்து அதற்குமேல் தள்ளுபடி செய்யக்கூடாது என்பதாகும். இந்தத் தள்ளுபடி உச்சவரம்பு 41 கோடி ரூபாய் என்ற அளவிற்குத்தான் முன்பெல்லாம் இருந்தது. அதற்கு மேல் கடந்த ஆட்சியிலே தள்ளுபடி மானியம் தரப்படவில்லை. இந்த உச்சவரம்பை நீக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று 20 சதவிகித தள்ளுபடி மானியத்தை எந்தவித உச்சவரம்பும் இல்லாமல், எந்த அளவிற்கு விற்பனை நடைபெற்றாலும் அவ்வளவுக்கும் Rebate கொடுப்பதற்கு இந்த அரசுதான் ஆணையிட்டது என்பதை மறந்துவிடக்கூடாது. 1994-95 ஆம் ஆண்டிலிருந்து நெசவாளர்களுக்குரிய தள்ளுபடித் தொகை நிலுவையிலிருந்ததைக் கண்டறிந்ததும், இந்த அரசு நிலுவையாக உள்ள 43 கோடியே 26 இலட்ச ரூபாயை நெசவாளர் சங்கங்களுக்கு வழங்கியது. மேலும் 31-3-1998 வரை விற்பனை ஆகாமல் இருந்த துணிகளுக்கு 30 சதவிகிதத் தள்ளுபடியை தீபாவளிப் பண்டிகை நாள் வரை அனுமதித்து நெசவாளர்களிடம் தேங்கியிருந்த துணிகளை எல்லாம் விற்பனை செய்ய உதவியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழக அரசு, கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைக்கும் பொருட்டு 'ITCOT' (Industrial and Technical Consultancy Organisation of Tamil Nadu Limited) என்ற வல்லுநர் நிறுவனத்தையும், திரு. எஸ்.வி.எஸ். இராகவன் தலைமையிலான ஒரு நிபுணர் குழுவினையும் நியமித்து, அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளையும் பற்றி ஆய்வு செய்து, அவற்றின் நிலை பற்றி அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ஆணையிட்டது. அதற்கிணங்க அந்த ஆய்வு அறிக்கை அரசுக்கு வந்தவுடன் அதனுடைய பரிந்துரைகளை எல்லாம் ஏழை கைத்தறி நெசவாளர்களுக்குச் சிட்டா நூல் வழங்க வேண்டும் என்பதனையும் கருத்தில் கொண்டு, அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளும் 'NABARD' நிதியுதவியுடன் புனரமைப்பு செய்யப்படும் என 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருந்தேன். அந்த அடிப்படையிலே கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைப்பு செய்வதற்குரிய ஆலோசனைகளைக் கூறுவதற்காக, கைத்தறித் துறைச் செயலரைத் தலைவராகக் கொண்டு அலுவலர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அலுவலர்கள் குழுவின் ஆய்வுக் கருத்து மற்றும் தற்போதைய கூட்டுறவு நூற்பாலைகளின் நிலை ஆகியவைகளை கருத்தில் கொண்டு அரசு 168 கோடி ரூபாய்



அளவுக்கான நிதியுதவி மற்றும் பிற சலுகைகளை வழங்கி, கூட்டுறவு நூற்பாலைகளுக்கு புத்துயிர் ஊட்ட அரசு ஆணையும் பிறப்பித்துள்ளது. மேற்படி கூட்டுறவு நூற்பாலைகளின் புனரமைப்புத் திட்டங்களில் முக்கியமானது, ஆலைகளுக்கு நடைமுறை மூலதனத்தை மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாகப் பெறுவதேயாகும். முதற்கட்டமாக தருமபுரி, சேலம், இராமநாதபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய கூட்டுறவு நூற்பாலைகளுக்கு 'NABARD' அனுமதி அளித்துள்ளது. 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் மூடப்பட்ட புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையை, திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, திறந்து நடத்தும்பொருட்டு, தற்போது இந்த ஆலையில் பராமரிப்புப் பணிகள் நடந்து வருகின்றன. புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 16-12-1998-லிருந்து உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிற்பகல் 1-25

அதைப்போலவே திறக்காது மூடியிருக்கும் வேலூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை 1998 ஆம் ஆண்டு டிசம்பரில் உற்பத்தியைத் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என்ற இந்தச் செய்திகளை எடுத்துரைத்து மேலும் மாண்புமிகு உறுப்பினர்களும் கட்சிகளின் தலைவர்களும் எடுத்துக் கூறிய அறிவுரைகளை, முறையீடுகளை எல்லாம் நாங்கள் மனதிலே வைத்துக்கொண்டு, வருகின்ற நிதிநிலை அறிக்கையில் நல்லவைகளை எல்லாம் இடம் பெறச் செய்வோம் என்ற உறுதியை அளித்து, இந்த அளவில் அமைகின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"1998-99 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 23-11-1998 தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1998-99 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை முழுவதும் வழங்கப்படுகிறது.

## நிறைவேற்றப்பெற்ற 1998-99ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| | **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 2 | மாநில ஆயத் தீர்வைத் துறை | 38,88 |
| 3 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 29,50 |
| 4 | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் | 2,22,61 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 2,54,86 |
| 10 | பால் வழங்கு செயல் திட்டங்கள் | 5,70,00 |
| 11 | மாவட்ட நிருவாகம் | 52,55 |
| 12 | 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 30,00 |
| 13 | நீதி நிருவாகம் | 13,80 |
| 14 | சிறைச்சாலைகள் | 80,47 |
| 15 | காவல்துறை | 7,82,23 |
| 16 | தீயணைப்புப் பணிகள் | 3,00,00 |
| 17 | கல்வி | 30,56,40 |
| 18 | மருத்துவம் | 10,01,00 |
| 20 | வேளாண்மை | 3,52,36,04 |
| 21 | மீனளம் | 6,18,75 |
| 22 | கால்நடை வளர்ப்பு | 27,82 |
| 23 | கூட்டுறவு | 2,50 |
| 24 | தொழில்கள் | 15,17,56 |
| 25 | கைத்தறியும் துணித் தொழிலும் | 33,48,93 |
| 27 | ஊரக வளர்ச்சி | 39,00,14 |
| 28 | தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் | 4,77,90 |
| 29 | சமூக நலன் | 54,43,68 |



| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| | **அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி** | |
| 30 | பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 6,43,09 |
| 31 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் | 3,00,80 |
| 32 | வீட்டு வசதி | 72,00,00 |
| 33 | நகர்ப்பகுதி வளர்ச்சி | 1,50,00 |
| 35 | பாசனம் | 8,00,00 |
| 36 | பொதுப்பணிகள்-கட்டடங்கள் | 19,42 |
| 37 | சுற்றுச்சூழல் | 5,72,25 |
| 38 | சாலைகளும் பாலங்களும் | 58,42 |
| 42 | பல்வகை | 3 |
| 44 | காட்டுவளத் துறை | 6,36,90 |
| 46 | செய்தி - திரைப்படத் தொழில் நுட்பவியல் | 1,65,25 |
| 47 | ஊரகத் தொழில்கள் | 18,10 |
| 48 | குடிநீர் வழங்கல் | 14,36,75 |
| 49 | நகராட்சி நிருவாகம் | 13,05,00 |
| 50 | சுற்றுலா | 20,00 |
| | **மொத்தம்-அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **7,03,32,23** |
| | **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | |
| 52 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 55,18 |
| 53 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 21,09,01 |
| 54 | பாசனம் குறித்த மூலதனச் செலவு | 15,00,00 |
| 55 | பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 8,07,39 |
| 56 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 2,84,10 |
| 58 | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 3,95,84 |
| 59 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 36,12 |
| 60 | பல்வகை மூலதனச் செலவு | 54,45,92 |
| | **மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | **1,06,93,56** |

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும் | |
| 61 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 38,29,96 |
| பெரு மொத்தம் .. | **8,48,55,75** |

## 6. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27-11-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

52. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

41. 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 74/1956) அல்லது 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 1/1959) அல்லது இவ்விரு சட்டங்களின்கீழும் காஸ் (Gauze) துணி அல்லது காயம் கட்டும் துணி விற்பனையைப் பொறுத்தமட்டில், ஓராண்டுக்கு ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத மொத்த வியாபாரத் தொகை உடைய யாதொரு வணிகரும் மேற்சொன்ன சட்டத்தின்கீழ் வரி செலுத்துவதிலிருந்து சலுகை அளித்தது குறித்து வணிக வரிகள் துறையின் 25-6-1998 நாளிட்ட 188 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

[1998 நவம்பர் 26

42. தமிழ்நாடு விழிப்புப் பணிக் குழுவின் 1-4-1994 முதல் 31-3-1995 வரையிலான இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

43. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றி முப்பத்து நான்காவது அறிக்கை, 1998-99.

44. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றி முப்பத்தைந்தாவது அறிக்கை, 1998-99.

45. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றி முப்பத்தாறாவது அறிக்கை, 1998-99.

46. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றி முப்பத்தேழாவது அறிக்கை, 1998-99.

47. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றி முப்பத்தெட்டாவது அறிக்கை, 1998-99.

48. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றி முப்பத்தொன்பதாவது அறிக்கை, 1998-99.

49. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றி நாற்பதாவது அறிக்கை, 1998-99.

50. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றி நாற்பத்தொன்றாவது அறிக்கை, 1998-99.

51. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றி நாற்பத்திரண்டாவது அறிக்கை, 1998-99.

52. பொதுக் கணக்குக் குழுவின் நூற்றி நாற்பத்தி மூன்றாவது அறிக்கை, 1998-99.

53. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தி ஆறாவது அறிக்கை, 1998-99.

54. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தி ஏழாவது அறிக்கை, 1998-99.

55. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தி எட்டாவது அறிக்கை 1998-99.



1998 நவம்பர் 26]

56. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தொன்பதாவது அறிக்கை, 1998-99.

57. மனுக்கள் குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை, 1998-99.

58. மனுக்கள் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை, 1998-99.

59. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

60. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

ஒகூ

D
V 21b 31 N98
M98. 6 2
219405

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.